விலை ரூபா 20.00


அகப்பட்டார் அப்துல்லா
பக்கம் 09


தி.மு.க. நாளை முடிவு
பக்கம் 11


தன்னம்பிக்கை வளர்ப்பது எப்படி?
பக்கம் 13


சிகிச்சை முடிந்தது
பக்கம் 24

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 114

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 06 திங்கட்கிழமை (19/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# டில்லியின் ஆதரவைத் திரட்ட இலங்கை ரகசியமாகப் பேச்சு

## மூத்த இராஜதந்திரி அங்கு விரைவு

கொழும்பு, மார்ச் 19

ஜெனிவா மாநாட்டில் புதுடில்லியின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தியாவுடன் இலங்கை அவசர - இரகசிய மந்திராலோசனை நடத்தி வருகின்றது என நம்பகரமாகத் தெரியவருகின்றது. இலங்கை அரசுடன் தொடர்புடைய முக்கிய இராஜதந்திரி ஒருவரே டில்லி அரசின் முக்கியஸ்தர்களுடன் இது விடயம் தொடர்பில் பேச்சு நடத்தி வருகின்றார் என்றும் அறிய முடிகின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தாம் எதிர்ப்போம் என இந்தியா முன்னதாக இலங்கையிடம் தனிப்பட்ட முறையில் உறுதியளித்திருந்தது.

எனினும், இலங்கைக்கு எதிரான பிரேரணையை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் எனத் தமிழ்நாட்டிலிருந்து தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து தனது நிலைப்பாட்டில் இந்தியா தளம்பல் போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியது.

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் நாள் நெருங்கி வருவதால் இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே மேற்படி இராஜதந்திரி பேச்சுகளை முன் 27↘

## மேலும் சில திருத்தங்களுடன் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு

### நாடாளுமன்றில் விரைவில் அறிவிப்பு



டில்லி, மார்ச் 19

தமிழக அரசியல் கட்சிகளின் தீவிர நெருக்கடிக்குப் பணிந்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான பிரேரணையில் சில திருத்தங்களுடன் இந்தியா ஆதரிக்க முடிவு செய்துள்ளது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசு தனது நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் இந்த வாரம் தெளிவுபடுத்தும் என்றும் டில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பிரச்சினையில் தெளிவான நிலைப்பாடு எடுக்காமல் காலம் தாழ்த்தினால், அது தமிழ்நாட்டில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று பிரதமரிடமும் காங்கிரஸ் தலைவர்களிடமும் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பேசி விளக்கி வருகிறார் எனத் தெரிகிறது.

இந்த விவகாரத்தில், நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா 27↘

## அமெரிக்காவை சீண்டினால் பாண் துண்டும் கிடைக்காது

### வீரவன்ஸவுக்குச் சாட்டையடி

கொழும்பு, மார்ச் 19

அமெரிக்காவைச் சீண்டினால் நாம் ஒரு பாண் துண்டையாவது சாப்பிட முடியுமா? இப்போது அமெரிக்காவும், அதன் இறக்குமதிப் பொருள்களும் எமக்கு வேண்டாம் என விமல் வீரவன்ஸ கூறுகின்றார். அப்படியானால், இதற்கு முன்னர் இந்தியா எமக்கு பருப்பு விநியோகித்தபோது இந்த வாயாடி அமைச்சர் எங்கே போயிருந்தார் எனக் கடுவெல நகரசபைத் தலைவர் ஜி.எச்.புத்ததாஸ கேள்விகளை எழுப்பியுள்ளார்.

கடுவெல பிரதேச நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறியதற்குப் பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா எமது நாட்டுக்கான கோதுமை மா ஏற்றுமதியைத் தடைசெய்தால் என்ன நடக்கும்? எமக்கு ஒரு பாண் துண்டை ஆசைக்குக் கூட சாப்பிட முடியாத நிலை ஏற்படும்.

ஜெனிவாவில் நமது நாடு தற்போது பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் அமைச்சர்கள் வீண் 27↘

## மாடு மேய்த்த 6 பேரை வழிமறித்து நையப்புடைத்தனர் கடற்படையினர்

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு, கருநாட்டுக்கேணி, வில்லுவெளிப் பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஆறு பேரை அந்தப் பகுதி கடற்படையினர் மரத்தில் கட்டி வைத்துக் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த கோபால் மதீஸ்வரன் (வயது 18), சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் (வயது 55) ஆகியோரே கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

கருநாட்டுக்கேணி வில்லுவெளிப் 27↘

## பிரேரணை நிறைவேறினால் வரலாறு காணாத போராட்டம்

### பீதி கிளப்புகிறது தேசப்பற்றுள்ள இயக்கம்

கொழும்பு, மார்ச் 19

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் வரலாறு காணாத வகையில் உள்நாட்டில் போராட்டங்களை வெடிக்கச் செய்து சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுத்து நிறுத்துவோம் என்று சூளுரைத்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

நல்லவன் போல் நடித்து இலங்கையைப் படுபாதாளத்தில் தள்ளப்பார்க்கின்றது அமெரிக்கா. எனவே, அந்நாட்டின் பின்னால் செல்வதை அரசு உடன் நிறுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனிவா மாநாடு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமர 27↘

## சி.ஐ.டி.எனக் கூறிக் கொண்டு முன்னாள் போராளிக்கு மிரட்டல்

### கிளி. பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

புலனாய்வுத் துறையினர் எனக் கூறி முன்னாள் போராளிகளை இனந்தெரியாத நபர்கள் மிரட்டிவருவது தொடர்பாக கிளிநொச்சிப் பகுதியில் முறைப்பாடுகள் வருகின்றன.

கடந்த 16 ஆம் திகதி இவ்வாறான முறைப்பாடு ஒன்று கிளிநொச்சி பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் பெண் போராளிகளின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அழைப்பு எடுக்கும் நபர் ஒருவரே மிரட்டி வருவதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் ஒரு முன்னாள் பெண் போராளியுடன் தொடர்புகொண்ட அநாமதேய நபர் ''நாங்கள் நினைத்தால் உம்மைக் கடத்திச் செல்ல முடியும். நீர் இராணுவத்துடனும் பொலிஸாருடனும் அநாகரிகமாக 27↘

## மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் மக்களின் பாவனைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் பொது மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் என்.ராஜதேவன் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:

பாடசாலை நாள்களில் பிற் 27↘

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் குச்சவெளியில் கொலை

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, பெரியகுளம் பகுதியில் ஈ.பி.டி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஓட்டோச் சாரதியாகத் தொழில் புரிந்த, மூதூரைச் சேர்ந்த ரகு நடன் அல்லது முத்து என்ற நபரே, கழுத்துநெரிக்கப்பட்டுபடுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த நபரின் சடலம் ஓட்டோவின் உள்ளே காணப்பட்டதாகவும், அருகில் இருந்து 'எல்.ரீ.ரீ.ஈ.' என எழுதப்பட்ட கடதாசியையும் கண்டெடுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, சடலமாக மீட்கப்பட்டவர் இராணுவ உளவாளியாகச் செயற்பட்டு வந்ததவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஹங்குரன்கெத்த பிரதேச சபைத் தலைவர் தாக்கப்பட்டார்

அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவின் சகோதரரும் மத்திய மாகாண சபையின் தலைவருமான சாலிய திசாநாயக்கவினால் நேற்றுத் தாம் தாக்கப்பட்டதாக ஹங்குரன்கெத்த பிரதேச சபைத் தலைவர் ரண சிங்க பண்டார பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் கமநெகும அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் நேற்று நண்பகல் நடைபெற்றது. இதன்போது, அங்கு திடீரென நுழைந்த சாலிய திசா நாயக்க, கற்களால் பிரதேச சபை தலைவரை தாக்கியதாக ஹங் குரன் கெத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அரசியல் பணியில் ஈடுபடத் தடுப்பு

தொழிலாளர் தேசிய சங்கத்தினர் நேற்று தமது கட்சிப் பணிகளுக்காக பதுளை மாவட்டத்திற்கு சென்றிருந்தனர். எனினும் பதுளையில் உள்ள சில அரசியல் கட்சிகள் அரசியல் பணிகளை மேற்கொள்ள விடாது தம்மை தடுத்ததாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீ.திகாம்பரம் குற்றம் சுமத்தியுள்ளார். பதுளை மாவட்ட மக்களின் அழைப்பின் பேரில் அவர்களுக்கான சேவைகளை செய்வதற்காக சென்றபோதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் பாக். தளபதி

பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் காலிட் சமின் வைன் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார் என்று இராணுவ ஊடகப் பிரிவு அதிகாரி பிரிகேடியர் றுவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார். நான்கு நாள் இலங்கையில் தங்கியிருக்கும் பாக். தளபதி, இராணுவ நிலைகள் பலவற்றுக்கும் சென்று அவதானிக்கவுள்ளார். இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய உட்பட முப்படைத் தளபதிகள் மற்றும் இராணுவப் படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவின் உயர் மட்ட அதிகாரிகளையும் சந்திப்பார் என்றும் பிரிகேடியர் வணிகசூரிய கூறினார். (ஒ-15)

# பிள்ளையானின் கட்சி மாநாட்டில் இணைப்புக்கு எதிராகத் தீர்மானம்

## இறைமைக்கு எதிரானது என்றும் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, மார்ச் 19

இலங்கையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஏனைய தமிழ் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டு வரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை முற்றாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்ற அக்கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.


மாநாட்டு அமர்வில் பஸில்

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது கிழக்கு மக்களின் சுய விருப்பத்திற்கும் அரசியல் அபிலாஷை மற்றும் இறைமைக்கும் எதிரானது என்றும் இந்தத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஏற்கனவே பேச்சுக்கள் நடைபெற்று வரும் சூழ்நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட மற்றுமொரு தீர்மானத்தின் படி, இப்பேச்சுவார்த்தையில் தமது கட்சி உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும் என அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அக்கோரிக்கையில் 13 வது அரசியலமைப்பு திருத்தத்தின்படி அதிகாரப் பகிர்வு முழுமையாக வழங்கப்பட வேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு சவால் விடுகின்ற அனைத்து விதமான முயற்சிகளையும் எதிர்ப்பதாகவும் இம்மாநாட்டில் மேலுமொரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் சகோதரரும் மத்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ இந்த மாநாட்டில் விருந்தினராகக் கலந்து கொண்டார்.(ஒ-10)

# முல்லை. கோம்பாவிலில் மக்களை சந்தித்து உரையாடினார் ரணில்

கிளிநொச்சி, மார்ச் 19

இலங்கையில் இறுதிக் கட்டப் போர் நடந்த முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மக்கள் தற்போது கோம்பாவில் பகுதியில் உள்ள திம்பிலி என்ற இடத்தில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை அங்கு சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மக்கள் தங்கள் துயரங்களை முறையிட்டார்கள்.

2009ம் ஆண்டு மே மாதத்தில் போர் முடிவுக்கு வந்தபோது இடம்பெயர்ந்த முள்ளிவாய்க்கால் மக்கள் வவுனியா முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அடுத்து கோம்பாவில் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியொன்றை துப்புரவு செய்து திம்பிலி என்ற இடத்தில் இந்த மக்கள் குடியமர்த்தப் பட்டனர்.

இடம்பெயர்ந்து மூன்றாண்டுகள் நெருங்குகின்ற போதிலும் தம்மை சொந்தக் குடிமனைகளில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தார்கள்.

முள்ளிவாய்க்கால் கிழக்கைச் சேர்ந்த மக்கள் திம்பிலியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வாழ்வாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் தமது பிள்ளைகளை பள்ளிக் கூடத்துக்கு அனுப்பவும் உரிய வசதி இல்லை என்று இங்கு பேசிய மக்கள் கூறினர்.

இடம்பெயர்ந்தபோது இராணுவத்திடம் சரணடைந்த தமது பிள்ளைகள் தொடர்பில் இன்னும் தகவல்கள் ஏதும் இல்லையென்று சிலர் தெரிவித்தனர்.

தம்மை தமது சொந்த இடங்களில் குடியமர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் பேசிய ரணில் விக்கிரமசிங்க, மீள்குடியேற்றம் தொடர்பில் அரசு கூறிவருகின்ற முன்னேற்ற கர்மான தகவல்களை நடைமுறையில் காணமுடியவில்லை என்று சுட்டிக்காட்டினார். பல பிரதேசங்களில் மக்கள் உரிய இடங்களில் குடியமர்த்தப்படவில்லை எனவும் இன்னும் சில இடங்களில் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எவை என்ற எல்லைக்கு வரையறை இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். மீள்குடியேற்றம் பற்றி அரசிடம் முறையான கொள்கைத் திட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும் என்றும் ரணில் குறிப்பிட்டார். (ஒ-15)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் கூடாது

## இப்படிக் கூறுகிறது ஆர்.எஸ்.எஸ்.அமைப்பு

புதுடில்லி, மார்ச் 19

இலங்கை அரசுக்கு எதிராக ஐநாவில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் கூடாது என்று ஆர்எஸ்எஸ் எனும் மதவாத அமைப்பு திடீர் எதிர்ப்புக் காட்டியுள்ளது.

சுப்பிரமணியம்சுவாமி போன்ற ஒரு சிலரைத் தவிர, பிற மாநிலத்தவர்கள் கூட ஈழத்தமிழருக்கு இலங்கைப் போரில் நிகழ்ந்த கொடூரத்தைப் பார்த்து ஆவேசப் பட்டு வருகின்றனர்.

மனிதாபிமானமும், தன் சொந்த மக்கள் மேல் அபிமானமும் இல்லாத இலங்கை அரசுக்கு சர்வதேச அளவில் பெரிய அளவிலான தண்டனை தரப்பட்டே தீர வேண்டும் என பல நாட்டு மக்களும் கருத்துக் கூறி வருகின்றனர்.

இலங்கைக்கும் ஈழத் தமிழருக்கும் சம்பந்தமே இல்லாத 23 நாடுகள், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் மனித உரிமை மீறல் தீர்மானத்தை ஆதரிக்கும் போது, தொப்புள் கொடி உறவு உள்ளதாகக் கூறப்படும் இந்தியா மட்டும் இன்னும் மௌனம் காத்து வருகிறது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா, ஆதரிக்காதா என்பதை உடனே தெளிவுபடுத்த வேண்டும் என்றும், தங்களுடன் நேரடியாக தொடர்பில்லாத விவகாரங்களில் தலையிடும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக இந்தியா வலுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என ஆர்எஸ்எஸ்ஸின் அமைப்பாளர் இதன் மூலம், ஆர்எஸ்எஸ் மற்றும் அதன்

**பிற மாநிலத்தவர்கள் கூட ஈழத்தமிழருக்கு இலங்கைப் போரில் நிகழ்ந்த கொடூரத்தைப் பார்த்து ஆவேசப்பட்டு வருகின்றனர்.**

நிழலில் செயல்படும் இயக்கத்தினர் தமிழீழ மக்களுக்கு ஆதரவாக இருப்பதாக சிலர் கொண்டிருந்த மாயை நொறுங்கியுள்ளது என்றும்-

மதவாத, ஆதிக்க சக்திகள் ஒருபோதும் சுதந்திரப் போராட்டங்களை ஆதரித்ததில்லை என்பதற்கு இது இன்னுமொரு உதாரணம் என்றும் தமிழுணர்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

# தவக்காலத்தில் கிறிஸ்தவ மாணவருக்கு விசேட நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 19

கிறிஸ்தவ மக்களின் தவக்காலத்தையொட்டி, அதற்கென ஒரு நாள் வேலைத்திட்டத்தை பாடசாலைகளில் செயற்படுத்துமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பெரிய வெள்ளி அனுஷ்டிக்கப்படும் வாரத்தில் ஒரு நாளில் இந்தச் சமய வேலைத் திட்டத்தைச் சிறப்பாக பாடசாலைகளில் செயற்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

15 பேருக்கு மேல் கத்தோலிக்க, கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில், பாடசாலைக்கு அண்மையிலுள்ள தேவாலயத்தின் குருவானவர்கள், துறவிகளின் உதவியுடன், கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆசிரியர்களின் தலைமைத்துவத்தில் மாணவர்களுக்கு இந்த வேலைத் திட்ட நிகழ்வை நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் ஒரு நாள் பாடசாலை நேரத்தில் இந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-190)

# உள்ளூராட்சி சபைகளுக்கான துணைச் சட்டங்கள் உருவாக்கம்

## விரைவில் செயல் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் மார்ச் 19

உள்ளூராட்சி சபைகளுக்கான துணைச் சட்டங்களை உருவாக்குவது தொடர்பான விசேட செயல் திட்டம் வடக்கு மாகாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ மேற்கொண்டுள்ளார்.

வட மாகாணத்தில் உள்ள தவிசாளர், செயலாளர்களுக்கு முதற்கட்டமாக துணைச் சட்டங்கள் தயாரிப்பு தொடர்பான செயல் திட்டம் மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளன.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் இதற்கான அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

# உதைபந்தாட்டப் போட்டியை தடுத்து நிறுத்திய இராணுவம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று மாலை நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி இராணுவத்தினரின் தலையீட்டால் நடைபெறவில்லை.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். மாநகரசபையின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகின்றது.

இந்த நிலையில் நேற்றைய தினம் துரையப்பா விளையாட்டரங்கிற்கு வந்த இராணுவத்தினர் அங்கு விளையாட்டு ஏற்பாட்டாளர்கள், மோதும் அணிகள் மற்றும் பார்வையாளர்கள் வந்திருந்த நிலையில் மைதானத்திலிருந்த கோல் கம்பங்களை அகற்றியதுடன் தாங்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் கண்காட்சிக்கான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி அனைவரையும் மைதானத்தில் இருந்து வெளியேற்றினர் என்று யாழ். உதைபந்தாட்ட லீக்கின் முக்கிய பதவிகளில் உள்ள உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல நாள்களாக நடைபெற்று வந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இந்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (68)

# சி.ஐ.டி யினர் விசாரிப்பர்

தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருடப்பட்ட விலைமதிப்பற்ற தொல் பொருட்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவதை தடுக்கும் வகையில் சுங்கத் திணைக்களத்திற்கு அது பற்றிய தகவல்கள் வழங்கப் பட்டுள்ளன. (ஒ-15)

# இனி உன்னால் என்ன செய்ய முடியும் ?



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐ.தே.க. தலைவர் தெரிந்து வைத்திருக்க வேண்டிய சமன்பாடு

போர்க் காலத்தில் இருந்தது போலவே, வடபகுதி மக்கள் இன்னும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமக்கான விடுதலை இன்னும் கிடைக்கவில்லை என்பதனை அவர்களது முகங்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.--

போர் முடிவுக்கு வந்துள்ள போதிலும், குடாநாட்டு மக்களின் மனங்களில் உள்ள பயம் இன்னமும் நீங்கவில்லை. வெள்ளைவான் கலாசாரம் இன்னமும் இங்கு தொடர்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.--

வடக்கு, கிழக்கு மக்கள் இப்பொழுதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்று கொடுக்க வேண்டும்.--

தமிழ் மக்களின் வாழ்க்கையில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு வகை செய்யப்பட வேண்டும்.--

சுமார் ஒருவருட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, யாழ். மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்கு சூறாவளிப் பயணம் செய்த வேளை, ஆங்காங்கே தெரிவித்த கருத்துக்களில் சில இவை.

அவற்றோடு நிறுத்தாது;

இப்போது பதவியில் உள்ள அரசாங்கத்திடம் இருந்து, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு எதுவும் கிடைக்கப் போவதில்லை. நாடு இன்று அந்நியாளர்களின் கரங்களில் சிக்கி உள்ளது. அதன் அராஜகத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அதற்காக மூவின மக்களும் இணைந்து போராட முன்வர வேண்டும். நாட்டில் ஆட்சி மாற்றம் வந்தால் மட்டுமே தமிழ் மக்களின் வாழ்வு மலரமுடியும் -- என்றும் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்துள்ளார்.

ஆனால், தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஆதரவுடன் புதிய அரசு ஒன்று, தமது தலைமையில் அமைக்கப்படும் பட்சத்தில்,-

இந்த நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைத் தருவோம் - என்று மட்டுமே சொன்னார். ஆனால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், அவர்களுக்கு எந்த வடிவத்தில் வழங்கப்படும் என்பதனை அறுத்து உறுத்துக் கூறுவதற்குத் தயங்கினார்.

இப்போது உள்ள அரசியல் சூழலில், ஜெனிவாப் பிரேரணை மூலம் இலங்கைக்கு நெருக்கடிகள் வரக்கூடிய நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தீர்வு எதுவாக இருக்கும் என்பதனை அவர் வெளிப்படுத்த விரும்பியிருக்கமாட்டார் என்பது சொல்லாமலே விளங்கும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இப்போதைய அரசு, ஆயுதப் போராட்டத்தை நசுக்கிவிட்டது என்பதால், ஆகக் குறைந்தது உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில் அமைந்த, சுயாட்சி வடிவிலான ஆட்சி முறை நடைமுறைக்கு வரவேண்டும் என்பதே அவர்களின் உள்ளார்ந்த விருப்பமாக உள்ளது.

அதனை ரணில் தமது தமிழ் ஆதரவாளர்கள் ஊடாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு முன்னராவது அதனை, அவர் அறிந்து வைத்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

போருக்குப் பிந்திய வாழ்க்கையில், வடக்கு மக்கள், ரணில் தெரிவித்த அச்சம் மற்றும் பல வகைக் கஷ்டங்களை, இல்லாமைகளை, நாளாந்த வாழ்வுரிமைகளை இழந்த நிலைமைகளை அனுபவிக்கிறார்கள் என்பது உண்மையே. அவற்றுக்கு முடிவு வரவேண்டும் என்று விழைகிறார்கள் என்பதும் இயல்பானதே. அதனால், தமது அரசியல்சார் எதிர்காலம், தமக்குக் கிடைக்க வேண்டிய ஆட்சி உரிமைகள் குறித்து அவர்கள் எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லாதிருக்கிறார்கள் என்பதல்ல.

2005 ஆம் ஆண்டில் தாம் பிரதமராகப் பதவி வகித்த அரசு, முன்வைத்த தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், அதன் பின்னர், இத்தனை பெரிய போர் ஒன்று ஏற்பட்டிருக்க மாட்டாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கூறியிருப்பது ஒட்டுமொத்தமாக நிராகரிக்கக் கூடிய ஒன்றல்ல.

குறைந்த அதிகாரங்களுடனான தீர்வைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதனை தெற்கின் அரசியல் தலைவர்கள் இன்னமும் புரிந்து கொள்ள மறப்பதும், மறுப்பதும், இலங்கையின் இரண்டு பெரும் இனங்களுக்கும் இடையில் சமாதான சகவாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்கவே அடியெடுத்துக் கொடுக்கும்.

நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில், 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இரண்டாம் நாளன்று ஆரம்பமான அரசு - விடுதலைப் புலிகள் மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் -

வடக்கு-கிழக்கில் பாரம்பரியப் பிரதேசத்துக்கு, சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ், உள்ளீடான சுயாட்சி வழங்கும் ஓர் ஏற்பாட்டை அடிப்படைக் கட்டமைப்பாகக் கொள்வதற்கு (சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதியாக பதவி வகித்தபோது) ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்டது.

*ஆட்சி அதிகாரம், அதில் சட்டவாக்கம் - நிர்வாக அதிகாரம், நீதி அதிகாரம்

*அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள்

*குறைக்கப்படாத, குலைக்கப்படாத வாக்குரிமை ஆகியன எந்த இன மக்களினதும் இறைமைக்கான மூலாதார உரிமைகள் என்று இணங்கப்பட்டன.

ஆறு தசாப்தங்களாக நாட்டைச் சீரழித்து, இனங்களைப் பிளவுபடுத்தி வைத்திருக்கும் இலங்கைக்கு மேற்சொன்ன ஆகக்குறைந்த ஜனநாயக உரிமைகள் கட்டாயம் தேவை.

அத்தகைய ஓர் அமைப்பு முறையின் கீழ் - அரசாட்சி முறையினால் மட்டுமே - தமிழ் முஸ்லிம் மக்கள், பெரும்பான்மை சிங்கள மக்களுடன் சம பிரசைகளாக வாழமுடியும்; வாய்ப்பு உண்டாகும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையுடனும் அடிப்படை மனித உரிமைகளுடனும் சிறுபான்மை இனங்கள் வாழ்வதற்கு வகை செய்யப்படுவது இன்றைய தேவையாகும். அதுவே நிலைத்து நிற்கக்கூடியதுமாகும்.

இப்போது பதவியிலுள்ள அரசாங்கம் இவற்றைச் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளது என்பதற்கான, எந்த அறிகுறியையேனும், அசுகையைத்தானும் கேட்டிலோம்!

ஆகையால், தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இது குறித்து ஆழ்ந்து சிந்தித்து -

தமக்குள்ளேயே வெவ்வேறு விதமான முரண்பாடான கருத்து நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் உறுப்பினர்களுக்கு தாற்பரியத்தை விளங்க வைத்து, வழிக்குக் கொண்டு வருவாரானால் -தமிழ் மக்கள் அவர் பக்கம் செல்வதற்கு தயக்கம் எதுவும் இருக்காது. இது ஓர் இலகுவான சூத்திரம்; சமன்பாடு. எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிந்து வைத்திருக்கக் கூடாதா?

# வடக்கில் நவீன சிறுவர் வைத்தியசாலை நிதி விவரத்தை அறிக்கையிட பணிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

வடக்கில் நவீன சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான விவரத்தையும், அதற்காகத் தேவைப்படும் நிதி விவரத்தையும் ஆராய்ந்து உடன் அறிக்கை வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட செயலாளர் நளினி ஹேவா, சுகாதார அமைச்சுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் நவீன சிறுவர் வைத்தியசாலை ஒன்று அமைய வேண்டிய தேவை குறித்தும், நிதி ஒதுக்கீடு, இடம் மற்றும் கடந்த காலங்களில் மேற்கொண்ட கடிதத் தொகுப்புகள் யாவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரனால் அனுப்பி வைக்கப்பட்டன.

இதனையடுத்தே சுகாதார அமைச்சுக்கு இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் உடன் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் எனவும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரனுக்கு ஜனாதிபதியின் சிரேஷ்ட செயலாளரால் ஒரு பிரதியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் நவீன சிறுவர் வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக கடந்த 3 வருடங்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, அரச அதிபர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபை, பிரதேச செயலகம், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் நடவடிக்கைகளை முன்னெடுத்தும், திட்டம் தொடர்பாக எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படாமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பாடசாலை வேளைகளில் தனியார் வகுப்புகள்

## மாகாண அலுவலர்கள் இனங்கண்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

பாடசாலைகளில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டிய பாட அலகுகள் நிறைவேற்றப்பட முன்னரே தனியார் மற்றும் நிறுவனங்களில் வினாத் தாள்களை மாணவர்களுக்கு வழங்கிப் பாடசாலை வேளையில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மாகாண அலுவலர்களால் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட மாகாண மட்ட வெளிவாரி மதிப்பீட்டின் போது இது இனங்காணப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாட்டால் மாணவர்கள் அன்றாடம் கற்க வேண்டிய விடயங்களை ஆசிரியர்கள் கற்பிக்காது இவ்வாறான வினாத்தாள்களைப் பாடசாலை நேரத்தில் செய்விப்பது மாணவர்களுக்கு பல நெருக்கீடுகளை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் அடைவு மட்டம் உயர்வதற்கான வாய்ப்புகளும் அற்றுப் போகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்து மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது:

கல்வித் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட வினாத்தாள்களையே மாணவர்களுக்குப் பயிற்சிப் பரீட்சையாகவும், அவ்வினாத்தாள்களை பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்தில் நடத்துவதற்கும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்கள் வினாத்தாள்களிலோ அப்பியாசக் கொப்பிகளிலோ உறுப்பமைய ஏற்ற இடைவெளிவிட்டு தெளிவாக எழுத ஊக்குவிக்க ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

உடனுக்குடன் பிழைகளைத் திருத்தி தேவையான பின்னூட்டல்களைச் செய்வதுடன் சுற்றாடல் சார் செயற்பாடுகளில் வரும் எளிய பரிசோதனைகளை பாடநேரத்தில் செய்வதை உறுதிப் படுத்த வேண்டும்.

இவ்விடயங்கள் குறித்து பாடசாலைகளுக்கு அறிவுரை வழங்கப்பட வேண்டும் என்று மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனைவிட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் தமது பாடசாலைத் தரிசிப்புக்களின் போது இந்த விடயத்தை கூடிய கவனமெடுத்து ஆசிரியர்களுக்கு வழிகாட்ட ஆவன செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-14)

# இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கு வாக்காளர் பட்டியலை சீர்செய்ய நடவடிக்கை

## மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயக்குநர் சபையை தெரிவு செய்வதற்கு வாக்காளர் பட்டியல்களை சீர் செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கங்களில் கிளைக் குழு தேர்தல்களை நடத்தி இந்த புதிய இயக்குநர் சபை தெரிவுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏற்கனவே ஐந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளைக்குழு தேர்தல் நடத்தப்பட்டு புதிய இயக்குநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டு சங்கங்களுக்கு விரைவில் கிளைக் குழு தேர்தல்களை நடத்தி புதிய இயக்குநர் சபைகளை தெரிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய், பருத்தித்துறை ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இந்த கிளைக் குழு தெரிவு விரைவில் தேர்தல் மூலம் நடத்தப்படவுள்ளது.

இதற்கென இந்தச் சங்கக் கிளைகளில் வாக்காளர் பட்டியல்களை தயாரிக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக மூன்று வருடங்களை நிறைவு செய்த சங்கங்களின் இயக்குநர் சபைகளின் பதவிக் காலம் முடிந்தவுடன் கிளைக் குழு தேர்தல்களை நடத்தி புதிய இயக்குநர்களை தெரிவு செய்யவும் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, வட மாகாணத்தில் நட்டத்தில் செயற்படும் சங்கங்கள் மீது அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் வடமாகாண கூட்டுறவு திணைக்களத்தை பணித்துள்ளார். - என்று தெரிவித்துள்ளார். (ம-17)

# நிகழ்வுகள் இன்று

### கண்காட்சி

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் ஓவிய, சிற்பக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். பாடசாலை மாணவர்களுக்குப் பயன் தரக்கூடிய பலதரப்பட்ட சிற்ப, ஓவியங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளதால் மாணவர்களை கண்காட்சியை பார்வையிட அனுப்பி வைக்குமாறு யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ம-9)

### ஓய்வூதியம் வழங்கல்

கலைஞர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. கலை மற்றும் கலாசார அலுவல் அமைச்சர் சி.பி.ஏக்க நாயக்கா இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ம-7)

### பத்தாவது அகவையில்

அன்னை நாகா பூட்சிற்றியின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழா காலை 8 மணிக்கு யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவர்களது நிறுவனத்தில் சிறப்பாக இடம் பெறவுள்ளது.

அன்னை நாகா பூட்சிற்றி நிறுவப்பட்டு 9 ஆண்டுகள் பூர்த்தியாகி பத்தாவது அகவையில் கால் பதிப்பதை முன்னிட்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் அன்னை நாகா பூட் சிற்றியின் வாடிக்கையாளர்கள் மற்றும் அபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-15)

# சிறுபோக ஆயத்த வேலைகளுடன் குளப் புனரமைப்புப் பணிகளும்

## அரச அதிபர் தெரிவிப்பு

சிறுபோகச் செய்கையினை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களைச் செய்து கொண்டிருக்கும் இந்த வேளையில் இரணமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது விவசாயக் குழுக் கூட்டம் கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் கடந்த ஆண்டின் விவசாய முன்னேற்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போது, கடந்த ஆண்டு காலபோகத்தின் நெற் செய்கையானது உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் மாவட்டத்தில் 58 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமானது மாதாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற போதும் கடந்த மாதங்களில் ஏற்பட்ட வேலைச் சுமைகள் காரணமாகக் கூட்டத்தினைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போய்விட்டது. இது இந்த ஆண்டின் முதலாவது கூட்டமாகவும் அமைந்துள்ளது.

எமது மாவட்டத்தின் பெரும்போகச் செய்கையின் அறுவடையும் நிறைவடைந்து, நெல் கொள்வனவுகளும் நடைபெற்றுவருகின்றன. இதற்கெனப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது சிறுபோகச் செய்கைக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம். அதேவேளை இரணைமடுக்குளத்தின் புனரமைப்பு வேலைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் பல்வேறு விடயங்கள் பற்றியும் ஆராய வேண்டியுள்ளதுடன், அவை தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தக் கூட்டம் அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், விவசாயத்திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை நிலைய அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டுபல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர். (க-6)

# புறக்கணிக்கப்பட்டுவரும் கண்டாவளைப் பிரதேசம்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள கண்டாவளைப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகப் பிரதேச அமைப்புக்களால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கண்டாவளை உப பணிமனையின் கீழ் உள்ள பிரதேச அபிவிருத்திகள் எவையும் சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் தொடர்ந்தும் தமது பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் பல கிராமமட்ட அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

கண்டாவளை உப பணிமனைக்கு உட்பட்ட கோரக்கன்கட்டு ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை, கல்மடுநகர், புளியம்பொக்கணை, தருபுரம், புன்னைநீராவி, பிரமந்தனாறு, நாகேந்திரபுரம், பெரியகுளம் போன்ற இடங்களில் உள்ள பிரதேச சபை வீதிகள், பொது மயானங்கள் என்பன எதுவித புனரமைப்புப் பணிகளும் இன்றிக் காணப்படுகின்றன.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அதிகளவு பயணிகளும் பொதுமக்களும் கூடுகின்ற பரந்தன் சந்தியில் எதுவித பொது மலசலகூட வசதிகளும் இல்லை. இதைவிட முரசுமோட்டை பொதுச்சந்தை, தருமபுரம் பொதுச்சந்தை ஆகிய இடங்களில் மலசல கூடவசதி, தண்ணீர் வசதிகள் எவையும் இல்லை. இதைவிட ஆயுள்வேத வைத்தியசாலை வசதிகள், நூலக வசதிகள் எவையும் இல்லை. இதனால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய பகுதி மக்களின் அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் பாரபட்சமின்றிப் பரந்துபட்ட வகையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மேற்படி கிராம அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (க-6)

# 8000 ஏக்கருக்கு உர விநியோகம்

முல்லைத்தீவு,மார்ச்19

2011 - 2012 காலபோகச் செய்கையின் போது கமநலச் சேவை நிலையத்தினரால் 8000 ஏக்கர் காணிகளுக்கு உரங்கள் மானியவிலையில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 750 ஏக்கர் காணிகளுக்கான உரம் எமது கையிருப்பில் உள்ளது. இவ்வாறு ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் ரி. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். கடந்த 6ஆம் திகதி கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கமக் கார அமைப்பின் தெரிவு நிகழ்வின் போது அவர் இதனைத் தெரிவித்தார். கற்சிலைமடு கமக்கார அமைப்பு எல்லைக்குள் முத்து ஐயன் கட்டு காணிகளும் உள்ளதால் அவர்களும் திட்டக்குழுவில் பிரதிநிதிகளாக அங்கம் வகிப்பதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது எனவே கற்சிலைமடு கமக்கார அமைப்புக்களிலிருந்து ஒருவர் பங்குபற்றி அந்தக் காணிகளை வளம் படுத்துவதற்கான எதுவான நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் கற்சிலைமடுக்குளத்தினை புனரமைக்கவும், வாய்க்கால் களைப் புனரமைக்கவும் ஆலோசித்து வருகிறோம் இதன்படி உதவி ஆணையாளரின் அனுமதி கிடைத்ததும் இது தொடர்பாகத் தீர்மானிக்கப்படு மெனவும் பெரும்பாக உத்தியோகத்தர் மேலும் தெரிவித்துள்ளார். (க-500)



அக்கராயன் குளத்துடன் தொடர்புடைய புனரமைப்புப் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்றுவருகின்றன. (18)

# அக்கராயன் மருத்துவமனையில் நோயாளர் தொகை அதிகரிப்பு

அக்கராயன், மார்ச் 19

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனை யில் நோயாளர் தொகை சடுதியாக அதிகரித்துள் ளது.

இங்கு சளியுடன் கூடிய காய்ச்சலுக்குப் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், 8ஆம் கட்டை, 4 ஆம் கட்டை, ஸ்கந்தபுரம், அக்கராயன், முக்கொம்பன், கோணாவில் யூனியன் குளம் ஆகிய பகுதிகளிலிருந்து நோயாளர்கள் பெருமளவில் வருகை தருகின்றனர்.

இந்தநிலையில் போக்குவரத்தில் ஈடுபடும் சகல பஸ்களும் மருத்துவமனை வரை பணியில் ஈடுபட வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# அறுவடை இறுதிக் கட்டத்தில்

வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை நிறைவடையும் நிலையில் உள்ளது. இந்த முறை வவுனியா விவசாயிகள் அதிகளவில் ஆர்வத்துடன் நெல் விவ சாயத்தில் ஈடுபட்டனர். தற்போது அறுவடை வேலைகள் நிறைவடையும் கட்டத்தை எட்டியுள்ளன. விளைச்சல் அமோகமாகக் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

இங்கு சிவப்பு நெல் ஒரு மூடை ஆயிரத்து 700 ரூபாவுக்கும், சம்பா ஆயிரத்து 800 ரூபாவுக்கும், வெள்ளை நெல் ஆயிரத்து 400 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது. (க-421)

# பெண் போராளிகளுக்கு இராணுவத் தளபதி பாராட்டு

நெளுக்குளம்,மார்ச்19

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமிலுள்ள முன்னாள் பெண் போராளிகளை இந்திய இராணுவத் தளபதி பாராட்டியுள்ளார்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் உள்ள முன்னாள் பெண் போராளிகளுக்குத் துணியலங்காரம், சேலை அலங்காரம் உட்படச் சுயகைத்தொழில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது பெப்ரவரி மாதத்துக்கான பயிற்சியில் ஈடுபட்ட குழுக்களை அண்மையில் இங்கு வருகை தந்த இந்திய இராணுவத் தளபதி ஏ.கே.சிங் பார்வையிட்டுப் பாராட்டினார்.

பெண் போரா ளிகள் புனர்வாழ்வு பெற்று வெளியேறிச் சமூகத்திற்குச் சிறந்த சேவையாற்றுவதுடன் தொழில்வாய்ப்பை பெற் றுச் சிறந்த வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டதுடன் போராளிகளின் உடல், உளநலன்களையும் அங்குபணியாற்றும் இராணுவத்தின ரின் சேவைகளையும் பார்வை யிட்டுச் சென்றதாகப் பூந்தோட்ட முகாம் பொறுப்பதிகாரி மஞ்சுல குணசிங்க தெரிவித்தார்.

**இதுவரை 10 ஆயிரத்து 490 போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளனர்.**

இதுவரை 10 ஆயிரத்து 490 போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும் மேலும் பலர் விடுவிக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-402)

# கமக்கார அமைப்புக்களை புனரமைக்குமாறு விவசாயக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி பன்னங்கண்டி, சின்னக்காடு கமக்கார அமைப்புக்களை உடனடியாகப் புனரமைத்து அங்கு இடம்பெறுகின்ற மோசடிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக் குழுக்கூட்டம் கடந்த 16ஆம் திகதி பி.பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

கடந்த காலபோகத்தின் போது இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள சின்னக்காடு, பன்னங்கண்டி கமக்கார அமைப்பினர் என்ற பெயரில் அங்குள்ள குட்டிமாமா என்பவர் இராணுவத்தினரின் பெயரையும், அரசியல்கட்சி ஒன்றின் பெயரையும் பயன்படுத்திச் சுமார் 84 ஏக்கர் நிலப்பரப்பினை அத்துமீறிப் பயிர்ச் செய்கையாளர்களிடம் இருந்து பறிமுதல் செய்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இந்தாண்டு சிறுபோகச் செய்கையின்போது காணியற்றவர்களைத் தன்னிடம் பதிவு செய்துகொள்ளுமாறும் அதற்கு ஏற்ப காணிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுத் தனிப்பட்ட ரீதியில் பதிவுகளை மேற்கொண்டு வருவதாகவும் இது தொடர்பான பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மாவட்ட அரச அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் இந்த விடயத்தில் மிக இறுக்கமான நடைமுறைகளை மேற்கொள்ளுமாறும், குறித்த கமக்கார அமைப்பினை உடனடியாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலபோகத்தின் போது 30 வருடகாலமாகப் பயிர்ச்செய்கை மேற்கொண்ட மூன்று விவசாயிகள் அத்துமீறி வெளியேற்றப்பட்டதோடு அவர்களின் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டதாகவும், இந்தமுறையும் அவ்வாறான ஆபத்தான சூழல் காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவரால் கூறப்பட்டது. இந்த முறைப்பாடு தொடர்பான கடிதம் ஒன்றினைத் தனக்கு வழங்குமாறும் அதன் பிரகாரம் அதிகாரிகளுடன் பேசி முடிவினைக் பெற்றுத் தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (க)

# கணித பாடத்துக்கு ஆசிரியர் நியமனம்

முல்லைத்தீவு கோட்டைகட்டியகுளம் அ.த.க பாடசாலைக்குக் கணித பாட ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஓர் ஆண் டுக்கும் மேலாக இந்தப் பாட சாலையில் கணித பாட ஆசிரியர் இல்லாத நிலை காணப்பட்டது இதனால் மாணவர்கள் பெரும் நெருக்கடியினை எதில் கொண்டனர். இரு தடவைகள் மாணவர்கள் க.பொ.த பரீட்சைக்குக் கணித பாட ஆசிரியர் இல்லாத நிலையில் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் தோற்றினர். வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஆகி யோருக்கு பெற்றோர்கள் மற்றும் பழைய மாண வர்களால் மனுக்களும் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் கணித பாட ஆசிரியர் ஒருவர் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் இந்தப் பாடசாலை மாணவர்களும், பெற்றோர் களும் அதிக மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (க-18)

# 8000 ஏக்கரில் நெற்செய்கை

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு 8ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளத் தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில்தற்போது 25அடிக்கு நீர் உள்ளது. குளத்தின் இடது கரை மற்றும் வலதுகரை ஆகிய பகுதிகளில் இந்த ஆண்டு 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டு அதன் பிரகாரம் விழிப்புணர்வுக் கூட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. (க)

# யாழ். பல்கலை வளாகத்தில் டெங்கு பரவக் கூடிய சூழல்

## பூச்சியியலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் பரம்பலுக்கு ஏதுவான சூழல் காணப்படுகிறது எனப் பூச்சியியல் உதவியாளர் சுட்டிக் காட்டியதை அடுத்து யாழ். பல்கலைக் கழக வளாக சூழல் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

**பல்கலைக்கழக சூழலை சுத்தமாக வைத்திருந்து டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை பல்கலைக் கழக நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்**

யாழ். மாவட்ட மலேரியா கட்டுப்பாட்டு இயக்கத்தின் கீழ் உள்ள பூச்சியியல் உதவியாளரால் சில தினங்களுக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக வளாக சூழல் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன் போது டெங்கு நோய் பரம்பலுக்கு ஏதுவான சூழல் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

பூச்சியியல் உதவியாளர் இது தொடர்பான அறிக்கையை நல்லூர்ப் பகுதி வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பித்துள்ளார். வைத்திய அதிகாரி அதனை பல்கலைக்கழக பதிவாளரிடம் வியாழக்கிழமை சமர்ப்பித்திருந்தார். அதனை தொடர்ந்தே பல்கலைக்கழக வளாக சூழல் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பகுதியினர் புகையூட்டும் செயற்பாட்டையும் அன்றைய தினமே மேற்கொண்டுள்ளார்.

தொடர்ந்தும் பல்கலைக் கழக சூழலை சுத்தமாக வைத்திருந்து டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை பல்கலைக் கழக நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். (ம-3)

# கடும் வரட்சி தொடர்வதால் வற்றுகின்றன நீர் நிலைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். குடாநாட்டில் நிலவும் தற்போதைய கடும் வறட்சி வெப்பத்தால் நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

குறிப்பாக யாழ். நகரை அண்டிய கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம், அரியாலை, சுண்டுக்குளி போன்ற பகுதிகளில் உள்ள குளங்களில் தண்ணீரின் மட்டம் திடீரென குறைந்து காணப்படுகின்றது.

குளங்களில் தண்ணீர் மட்டம் வெகுவாக வற்றியுள்ளதால் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கிணறுகளிலும் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றது.

அநேகமாக குடியிருப்பு கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்ததால் மக்கள் கிணற்றில் தண்ணீர் இன்றி சிரமப்படுகின்றனர்.

தீவுப்பகுதிகளிலும் இந்த வறட்சி நிலைமையே காணப்படுகின்றது.

தற்போதைய கடும் வறட்சி வெப்பமே நீர் நிலைகளில் நீர் மட்டம் குறைவதற்கு காரணமாக உள்ளது.

நீர் நிலைகளில் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையால் கால்நடைகளும் குடிதண்ணீருக்கு அலைந்து திரிகின்றன. (ம-17)

# குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஆலயத்திலிருந்து உண்டியல் பெட்டியை உடைத்து அதற்குள்ளிருந்த பணத்தைத் திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை மல்லாகம் நீதிவான் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

நவாலியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்துக்கு சென்ற இளைஞர் அங்கிருந்த உண்டியல் பெட்டியை உடைத்து அதற்குள்ளிருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளார் என்று குறிப்பிட்ட இளைஞன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தத் திருட்டு தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரைக் கைது செய்து விசாரணைக் குட்படுத்திய போது திருட்டு அம்பலத்துக்கு வந்தது.

திருடப்பட்ட பணத்தை மீட்ட பொலிஸார் குறித் இளைஞனை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நீதிவான் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பேயா தினத்தன்று சாராயம் விற்ற ஒருவர் பொலிஸார் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டார். சாராயத்தைக் மீட்ட மானிப்பாய் பொலிஸார் இவர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினார். விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-115)

# தொடர் மண் அகழ்வால் குடிமனைக்குள் கடல் நீர்

## அபாயம் ஏற்பட்டுள்ளதாக கச்சாய் மக்கள் விசனம்

தென்மராட்சி, மார்ச் 19

கச்சாய் கெற்பேலிப் பகுதி கடற்கரையோரத்தில் திங்கள், வெள்ளி ஆகிய நாள்களில் வகை தொகையின்றி மணல் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதால் கடலேரி நீர் கிராமத்துக்குள் புகும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்துக்கு அப்பால் கடல் மட்டத்திலிருந்து 5 அடி உயரத்துக்கு மேலாகவும் தனியார் காணிகளில் இனங்காணப்பட்ட இடங்களில் மணல் அகழ்வு இடம்பெறுகிறது.

வீடு, கிணறு, மலசல கூடம் மற்றும் கட்டடங்கள் போன்ற தேவைகள் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் தினமும் 50 இற்கு மேற்பட்ட வாகனங்களில் மணல் ஏற்றப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

கெற்பேலிப் பகுதியில் மணல் ஏற்றுவதைத் தடை செய்யக் கோரி சாவகச்சேரி பிரதேச சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் தொடர்ச்சியாக வெள்ளி, திங்கள் ஆகிய நாள்களில் வாகனங்களில் வகைதொகையின்றி ஏற்றப்பட்டு வருவதால் கடலேரி நீர் கிராமத்துக்குள் வரும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-9)

# தரமான பொருள்களை விநியோகிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ரொக்க வியாபாரத்துக்குத் தரமான பொருள்களை கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

சங்கக் கிளை நிலையங்களின் வியாபார நடவடிக்கையை அதிகரிப்பதற்கு ஏதுவாக பொருள்கள் அனைத்தும் தரமாக இருக்க வேண்டும்.

இந்த பொருள்களின் தரத்தை உறுதி செய்து சங்கங்களின் கொள்வனவு உபசபையினர் உறுதிப்படுத்த வேண்டும்.

பொருள்களின் கொள்ளவின் போது தரக்குறைவான பொருள்களை பெற்று கிளை நிலையங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

வர்த்தக உபசபை கூட்டங்களின் பொருள்களின் கொள்வனவு சம்மந்தமான மாதிரிகள் உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

கிளை நிலையங்களில் ரொக்க வியாபாரத்துக்கு பின்னடைவு ஏற்படுவதற்கு பொருள்களின் தரக்குறைவு என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே சங்கங்கள் தரமான பொருள்களை கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும்.

இதேவேளை, குடாநாட்டில் அனேகமான சங்கங்களின் கொள்வனவில் தரக்குறைவான பொருள்களை கொள்வனவு செய்து கிளை நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த தரக் குறைவான வியாபார நடவடிக்கையே பாதிக்கப்படும்.

இது சம்மந்தமான சங்க கிளை நிலையங்களுக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சென்று பொருள்களின் தரங்களை மதிப்பீடு செய்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

# உரும்பிராய் சிறுவர் இல்லம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 19

உரும்பிராயிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த மனவளர்ச்சி குன்றிய சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய இந்த இல்லம் நேற்று முன்தினம் சீல் வைத்து மூடப்பட்டது.

அங்கிருந்த சிறார்களில் ஒரு பகுதியினர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏனையவர்கள் திருநெல்வேலியிலுள்ள கருணாலயம் எனும் பதிவு செய்யப்பட்ட இல்லத்தில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

வன்புணர்வுச் சம்பவம் நடைபெற்றிருந்தமை பற்றி இரண்டு வாரங்களுக்கு முன்னர் சிறுமி உரிய அதிகாரிகளுடாக யாழ். நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து அந்த இல்லத்தை நடத்தி வந்த கோட்டக் கல்வி அதிகாரி சந்தேகத்தின் பேரில் நீதிமன்ற உத்தரவுக்கமைய கடந்த வாரம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே அந்த இல்லம் நேற்று முன்தினம் சீல் வைத்து மூடப்பட்டது.

அங்கிருந்த 39 சிறார்களில் 17 பேர் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏனைய 22 சிறார்களும் திருநெல்வேலியில் இயங்கிவரும் கருணாலயம் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த சிறார்களாவர். குடும்ப வறுமை, காரணமாக கல்வி கற்பதற்கான வசதியின்மை, உணவு எனப் பல காரணங்களின் விளைவுகளால் சிறுவர் இல்லங்களில் இந்தச் சிறுவர்கள் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உரும்பிராயிலுள்ள இல்ல நிர்வாகத்துக்கு எதிராக விசாரணை நடைபெற்று வருகின்றது. அந்த இல்லம் தற்போது வடமாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தால் தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டுள்ளன என அதன் ஆணையாளர் சி.விஸ்வரூபன் தெரிவித்தார். (ம-4)

# ஓட்டோ – டிப்பர் விபத்து



பளை, மார்ச் 19

கல் ஏற்றி வந்த டிப்பர் வாகனமும் ஓட்டோவும் ஏ-9 வீதியில் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஓட்டோச் சாரதிக்குப் பலத்த காயமேற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பளை வண்ணான் கேணியைச் சேர்ந்த மகாலிங்கம் மகரூபன் (வயது 39) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, கல் வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒழுங்கையிலிருந்து வந்த சைக்கிளைப் பாதுகாக்க பிரேக் போட்டதால் தூக்கி வீசப்பட்டதில் காயமடைந்து மூர்ச்சையுற்றார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரி வீரசிங்கம் வீதியைச் சேர்ந்த விஜயராஜ் விமலராஜ் (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார்.

மூர்ச்சையுற்ற நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

# குரங்குகள் அட்டகாசத்தால் மக்கள் பெரும் நெருக்கடியில்

தென்மராட்சி பிரதேசத்தில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் பிரதேச செயலகத்தில் முறையிட்டுள்ளனர்.

கூட்டம் கூட்டமாக வரும் குரங்குகள் தமது வாழ்வாதாரத்தை வழங்கும் மா, புளி, முருங்கை நெல்லி, வாழை, கொய்யா, பப்பாசி போன்ற மர வகைகளையும் உப உணவுப் பயிர்ச் செய்கையான கத்தரி, மிளகாய், மரவள்ளி, உட்பட்ட பயிர் வகைகளையும் அழித்து வருகின்றன.

கூட்டம் கூட்டமாக வரும் குரங்குகளை துரத்தும் வேளையில் வீடுகளின் ஓடுகளையும் சீற்றுக்களையும் அவை சேதப்படுத்துகின்றன என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பயிர்வகைகள் மற்றும் பயன் தரு மரங்கள் போன்றவற்றின் வருமானங்களை நம்பி வாழும் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் குரங்குகளால் அழிக்கப்பட்டு வருவதையிட்டும் கவலையடைகின்றனர்.

குரங்குகளால் வீட்டின் ஓடுகள், சீற்றுக்கள் சேதப்படுத்தப்படுவதால் வீடுகளின் அருகே காணப்பட்ட நீண்டகாலம் பயன்தந்த மரங்களை தறிக்க வேண்டிய நிலை பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நடுகை செய்த பயிர்வகைகளை குரங்குகளிடமிருந்து பாதுகாக்க இரவு பகலாக தோட்டங்களில் காவல் இருப்பதாகவும் குறிப்பிட்டு பிரதேசத்திலிருந்து குரங்குகளை துரத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

# குளத்து மண்ணை வெட்டி விற்ற வீதி அகலிப்புப் பணியாளர்கள்

## உரும்பிராய் கமநல சேவை நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வீதி அகலிப்பு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் கட்டைப் பிராயிலிலுள்ள வட்டக் குளத்தின் மண்ணை வெட்டிச் சென்று தனியாருக்கு விற்றுள்ளதாக உரும்பிராய் கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருபாலை தெற்கு விவசாய சம்மேளத்தினரே இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகச் சம்மேளனத் தலைவர் எஸ்.ராமசாமி உதயனுக்குத் தெரிவித்ததாவது:

கமநல சேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான எமது சம்மேளத்துக்கு உட்பட்ட பகுதியிலுள்ள பருத்தித்துறை வீதிக்கு அருகிலுள்ள வட்டக் குளத்தின் வடக்குப் பகுதி அணைக்கட்டு மண் வெட்டி அகற்றப்பட்டுள்ளது. வீதி அகலிப்பு வேலைகளின் பிரகாரமே குளத்தின் அணைக்கட்டு மண் வெட்டி அகற்றப்பட்டது. எமது சம்மேளனத்தின் அனுமதியின்றியே அணைக்கட்டு வெட்டப்பட்டுள்ளது.

> வட்டக் குளத்தின் அணைக்கட்டில் வெட்டி எடுத்த மண்ணை மீளவும் தருவிப்பதுக்கும் நடவடிக்கை எடுக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுதியுள்ளனர்.

அவ்வாறு வெட்டி அகற்றப்பட்ட மண், தனியாருக்கு விலைக்கு விற்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. விற்கப்பட்ட மண்ணை குளத்தின் அருகில் போட்டிருந்தால் குளத்துக்கு ஓரளவுவேனும் பாதுகாப்பாக இருந்திருக்கும். தற்போது பாதுகாப்பற்ற முறையில் அணைக்கட்டு உள்ளது.

குளக்கட்டிலிருந்து எடுக்கப்பட்ட மண் மீளவும் எடுத்து வரப்பட்டு குளத்துக்கு பாதுகாப்பாகப் போட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உரும்பிராய் கமநல சேவைகள் நிலைய பெரும்போக உத்தியோகத்தரிடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

யாழ். கமநல அபிவிருத்தி ஆணையாளர் யாழ் அரச அதிபர், வீதி அபிவிருத்தி சபைத் திட்டப் பணிப்பாளர், வலி. கிழக்குப் பிரதேச செயலர், இருபாலை தெற்கு கிராம அலுவலர் ஆகியோருக்கும் முறைப்பாட்டின் பிரதியை அனுப்பி வைத்துள்ளோம். -என்றார்.

இந்த விடயம் தொடர்பாக வலி. கிழக்குப் பிரதேச செயலர் ம. பார்த்தீபனிடம் கேட்ட போது:

வீதி அகலிப்புப் வேலைகளின் போது வெட்டியெடுக்கப்படும் மண்ணை தனியாருக்கு விற்பதை தடுத்து நிறுத்துவதற்குக்கு நடவடிக்கை எடுக்குமாறும், வட்டக் குளத்தின் அணைக்கட்டில் வெட்டி எடுத்த மண்ணை மீளவும் தருவிப்பதுக்கும் நடவடிக்கை எடுக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுதியுள்ளதாக கூறினார். அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

## ஆவணம் இன்றி வாகனம் செலுத்தியவர் பொலிஸாரிடம்

வலி. தென்மேற்கு, மார்ச் 19

இரவு நேரம் மதுபோதையுடன் ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்திய சாரதி ஒருவர் ரோந்து சென்ற பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

குறிப்பிட்ட நபரைக் கைது செய்த பொலிஸார் இவரை மல்லாகம் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸார் இரவு நேரம் ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அதிவேகமாகச் சென்ற வாகனத்தை தொட்டிலடிச் சந்தியில் வைத்து மறித்துள்ளனர்.

வாகனத்தை நிறுத்தாமல் சென்ற படியால் சந்தேகம் கொண்ட பொலிஸார் ஜீப்பில் பின் தொடர்ந்து சென்று வாகனத்தை மறித்துச் சோதனை செய்த போது ஆவணங்கள் இல்லாததுடன் சாரதி மது போதையிலும் காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் சாரதியைக் கைது செய்த பொலிஸார் வைத்திய பரிசோதனை அறிக்கையுடன் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ம-115)

## சுயதொழிலில் ஈடுபடவுள்ளோர் கிராம ரீதியாக விவரம் திரட்டல்

வலி. தென்மேற்கு, மார்ச் 19

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் சகல குடும்பங்களுக்கும் தொழில் வாய்ப்பையும் அதன் மூலம் வருமானத்தையும் ஈட்டிக் கொடுக்க முன் வந்துள்ள அரசு கால்நடைவளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் சிறு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு கணிசமான அளவு நிதி உதவியை வழங்கவுள்ளது.

இந்த திட்டத்தில் இணைய விரும்பும் குடும்பங்களின் விவரங்களை தற்பொழுது கிராம உத்தியோகத்தர்கள் திரட்டி வருகிறார்கள்.

நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலை காரணமாக பல வழிகளாலும் பாதிக்கப்பட்ட மக்கள் சமாதானம் நிலவிய போதிலும் நிதி வசதியின்றி, தொழி வசதியின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

நாட்டில் நாளுக்கு நாள் விசம் போல் ஏறிவரும் பொருள்களின் விலை அதிகரிப்பினாலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பாலும் நிலையான மாத வருமானம் கிடைக்காத குடும்பங்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

இந்த குடும்பங்களின் மாதாந்த வருமானத்தை சற்று அதிகரிப்பதற்கான திட்டத்தை வகுத்துள்ள அரசு வீட்டு மனைப் பொருளாதாரம் என்ற அடிப்படையில் கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, சிறுசிறு வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

அரசின் இந்த திட்டத்துக்கு அமைய பிரதேச ரீதியாக கிராம உத்தியோகத்தர் ஊடாக விவரங்கள் திரட்டப்பட்டு வருகிறது. (ம-115)

## கால்நடைகளைக் கட்டுப்படுத்த விவசாய அமைப்புகள் தவறிவிட்டன

### குற்றஞ்சாடுகிறார் காரைநகர் பிரதேசசபைத் தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

காரைநகரில் கட்டக்காலி கால்நடைகளில் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவதற்கு விவசாய அமைப்புக்கள் தவறிவிட்டன என்று காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:

கட்டாக்கலி கால்நடைகளால் காரைநகர் பிரதேசத்தில் கடந்த பெரும்போகச் நெற்செய்கை கூடப் பாதிக்கப்பட்டது. அனேகமாக வயலில் இந்தக் கட்டக்காலி கால் நடைகள் அத்துமீறிச் சென்று அழித்து விட்டு சென்றுள்ளன.

இந்த கட்டக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நான் பெரும் முயற்சி மேற்கொண்டேன். இந்த முயற்சிக்கு மக்களின் முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். நகரில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த கட்டாக்காலி கால்நடைகள் இரவு வேளையில் நகரில் பிரதான வீதிகளில் படுத்து உறங்குவதாலும் மற்றும் சுதந்திரமாக நடமாடுவதாலும் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுகின்றது.

கட்டக்காலியாக நடமாடும் இந்தக் கால்நடைகள் நகரில் போடப்படும் கழிவுப் பொருள்கள் மற்றும் பொலித்தீன்களை கூட விடமால் உண்டு வருகின்றன.

இந்தக் கழிவுகளையும் பொலித்தீன்களையும் இந்த கால்நடைகள் உண்பதால் அவை நோய்க்கு இலக்காகலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, இந்தக் கட்டாக்காலி கால்நடைகளை பிடித்துக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். மாநகரசபை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

ஆனால் மாநகரப் பகுதியில் இந்த கட்டக்காலி கால்நடைகளைக் முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதத்துக்கு முன்னர் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டாலும் கூட மீண்டும் அவை வீதிகளில் சுதந்திரமாக நாடமாடி வருகின்றன.

(ம-17)

## வேலணை பொது நூலகம் நவீன முறையில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வேலணை பொது நூலகம் நவீன வசதிகள் கொண்ட நூலகமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. சிறுவர்கள் மாணவர்கள் பொது மக்கள் ஒவ்வொருவருக்கும் உகந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குக் கூடியதாக நூலகக் கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நூலகம் பல வருடங்களாக புனரமைப்பு நடவடிக்கைகள் இடம் பெறாத நிலையில் வாசகர்களுக்கு ஏற்ற முறையில் இல்லை. இந்தக் குறைபாடுகளை நீக்கி அனைத்து தரப்பு வாசகர்களுக்கும் உரிய வசதிகள் கிடைக்க கூடியதாக நூலகமாக இது புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

### செல்கள் கண்டெடுப்பு

மானிப்பாயில் மதகின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு செல்குண்டுகளைக் கைப்பற்றிய பொலிஸார் அவற்றை அதிரடிப் படையினரின் உதவியுடன் செயலிழக்கச் செய்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பகுதியில் உடுவில் டச்சு வீதியில் உள்ள மதகு ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு செல்குண்டுகளைக் கண்ட பொதுமக்கள் இது குறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து மானிப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மல்ஹம் தலைமையில் குறித்த இடத்துக்கு சென்ற பொலிஸார், அதிரடிப் படையினரின் உதவியுடன் செல்குண்டுகளை எடுத்து காக்கை தீவுக் கடற்கரையில் வைத்துச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

(ம-115)

## முரல் மீன் ‘சீசன்’ ஆரம்பித்தது அத்தாங்கு தொழிலுக்குத் தடை

வலி. தென்மேற்கு, மார்ச் 19

யாழ். மாவட்டத்தில் முரல் மீன் சீசன் ஆரம்பமானதைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்களின் நலன் கருதி அத்தாங்கு தொழிலுக்கு (ஒளிபாய்ச்சி அல்லது அள்ளு கோல் பயன்படுத்தி) தடை விதிக்கப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தேச வழமைக்கு அமைய அதற்குரிய வலையை மட்டும் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

> சில மீனவர்கள் குறுகிய நேரத்தில் கூடுதலான வருமானத்தைப் பெறும் நோக்குடன் வழமைக்கு மாறாக தடை செய்யப்பட்டுள்ள ஒளி பாய்ச்சிப் பிடித்தல், அள்ளுகோலைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் வலி.தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள கடற்பரப்பில் முரல் மீன் பிடிக்கும் சீசன் ஆரம்பமாகியுள்ளது. மாசி மாதத்திலிருந்து சித்திரை மாதம் வரை முரல் மீன் பிடிக்கும் பாலமாகும். இந்தக் காலப் பகுதியில் பெருந்தொகையான முரல் மீன்கள் படையெடுத்து வருவதால் சகல மீனவரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இரவு நேரங்களில் மட்டும் பிடிக்கப்படும் முரல் மீனை உடனுக்குடன் வாங்கி சாப்பிடுவதற்கு நூற்றுக் கணக்கான மக்கள் மாதகல் கடற்கரைக்கு தினமும் வந்த வண்ணம் இருக்கிறார்கள். முரல் மீன் காலப் பகுதியில் மீனவர்களுக்கும் அதிக வருமானம் கிடைக்கின்றது. இரவில் பிடிக்கும் மீன் கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டு மறுநாள் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில் சில மீனவர்கள் குறுகிய நேரத்தில் கூடுதலான வருமானத்தைப் பெறும் நோக்குடன் வழமைக்கு மாறாக தடை செய்யப்பட்டுள்ள ஒளி பாய்ச்சிப் பிடித்தல், அள்ளு கோலைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் ஏனைய மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலை குறித்து மீனவர்கள் மேற்படி சமாசத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அத்தாங்கு தொழிலுக்கு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் தேச வழமையான தொழிலை மட்டும் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சேந்தாங்குளத்திலிருந்து சுழிபுரம் வரையான கடற்பரப்பில் அத்தாங்குத் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(ம-115)

## மணல், ஊரி மண் ஏற்றுவதற்கு தடை

யாழ்ப்பாணம்,மார்ச்19

வேலணைப் பிரதேச சபை புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான் பகுதிகளில் தனது அனுமதியின்றி மணல், ஊரி மண் என்பவற்றை எடுத்துச் செல்லத் தடை விதித்துள்ளது.

இந்தத் தடை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மணல் மற்றும் ஊரி மண் தேவைப்படுவோர் விண்ணப்பங்களை தமது பிரிவு கிராம அலுவலரின் அனுமதியுடன் சபைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இவை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்படும் எனப் பிரதேச சபைத் தலைவர் சி. சிவராசா குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# எதிர்க்கட்சி தேவையில்லை

## முதல்வரின் கூற்றை கண்டிக்கிறார் அமிர்தலிங்கம்

எருவில், மார்ச் 19

கல்முனை மாநகர சபையில் 2006 ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரைக்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாகவும் இருந்து வருகின்றது.

ஆனால் தற்போது முதல்வராகப் பதவியேற்று இருக்கும் கல்முனை மாநகர முதல்வர் சிராஸ்மீரா சாகிப் கூறும் விடயம் கல்முனை மாநகரசபையில் எதிர்க்கட்சி என்ற ஒன்று தேவையில்லை. அது இருக்கக்கூடாது என்பதில் மிகவும்அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் என்று கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

கல்முனை மாநகரசபையின் முதல்வருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நால்வருக்கும் இடையில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் விரிசலான நடவடிக்கைகள் பற்றி தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக நேற்றுமுன்தினம் நற்பிட்டிமுனையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**அக்கரைப்பற்று மாநகர சபையில் 20 ஆயிரம் வாக்காளர்கள் உள்ள இடத்தில் ஒரு மாநகரசபையும் ஒரு பிரதேச சபையும் இருக்குமாக இருந்தால், 68 ஆயிரம் பேர் இருக்கும் கல்முனை மாநகர சபையில் ஏன் மாநகர சபையும் பிரதேச சபையும் இருக்கக் கூடாது.**

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எவரும் அரசியலுக்கு வரும் முன்பு அந்தப் பிரதேசம் பற்றி அறிந்திருந்தால்தான் உரியமுறையில் அனைத்து மக்களுக்கும் சேவையைத் திறம்படச் செய்யமுடியும். அப்போதுதான் அந்தப் பிரதேச மக்களினது மதம், மொழி, கலை, கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளித்து சேவை வழங்கமுடியும். ஆனால் கல்முனை மாநகரசபை முதல்வரோ தங்களது முஸ்லிம் பகுதியை அபிவிருத்தி செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்.

சாய்ந்தமருது பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அனைத்து மின்கம்பங்களிலும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்ப் பிரதேசங்கள் பல இருளில் மூழ்கி இருக்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் 15 இற்கும் மேற்பட்ட அலுவலகங்கள் அமைந்துள்ளன. அதுமாத்திரமன்றி 7 கிராமங்களிலும் பல இடங்கள் இன்றுவரை இருள் சூழ்ந்த பகுதிகளாகவே காணப்படுகின்றன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது முதல்வர் அங்கு சென்று மக்களுக்கு சேவைசெய்ததாகக் கூறியுள்ளார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் எங்களது கட்சி உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட படகுகளிலே முதல்வர் சென்றாரே தவிர அவரால் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. மாறாக இராணுவத்தினரும் எமது கட்சியினருமே அங்குள்ள மக்களுக்கான உணவு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தார்கள் என்பதுதான் உண்மை.

வெள்ளத்தால் பல வீதிகள் தமிழ்ப் பிரதேசங்களில் இன்றும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன. இதுவரைக்கும் அந்த வீதிகளில் எவ்வித புனரமைப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் 35,000 பேர் வசிக்கின்றார்கள். இவர்களில் இருவர் தமது சேவையைப் பாராட்டி மனு அனுப்பியதாக முதல்வர் கூறுகின்றார். அப்படியாயின் ஏனைய 34,998 பேருக்கும் முதல்வரின் சேவை கிடைக்கவில்லை என்பதுதானே கருத்தாகும்.

அன்றிலிருந்து இன்று வரைக்கும் தந்தை செல்வா காட்டிய வழிகாட்டலிலே எமது தமிழரசுக்கட்சி சென்றுகொண்டிருக்கின்றது. தலைமைக்கு மதிப்பளிப்பதன் மூலமே கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

இந்த மாநகர சபையில் 16 வெற்றிடங்கள் உள்ளன இவர் வந்த பின்னர் எத்தனை பேருக்கு வேலை கொடுத்திருக்கின்றார். மின்சாரப்பகுதியில் வேலை செய்யும் 5பேரில் 3 முஸ்லிம்களுக்குத் தொடர்ந்து வேலை செய்வதற்கு மனு கொடுத்து விட்டு ஏனைய 2 தமிழர்களுக்கும் தொடர்ந்து வேலை செய்வதற்கு அனுமதிக் கடிதம் தரமாட்டோம் என்று கூறிவிட்டு 3 மாதத்துக்கு ஒருமுறை இந்த மனுவைப் புதிப்பிக்க வேண்டும் எனவும் கூறியிருப்பதில் இருந்து இவரது இனவாதம் வெளிப்படையாகத் தெரிகின்றது.

எனவேதான் தமிழர்களுக்கென்று தனிப்பிரதேச சபையை அமைப்பதற்கான வழிவகைகளை முதல்வரே ஏற்படுத்தித் தருகின்றார். அக்கரைப்பற்று மாநகர சபையில் 20 ஆயிரம் வாக்காளர்கள் உள்ள இடத்தில் ஒரு மாநகரசபையும் ஒரு பிரதேச சபையும் இருக்குமாக இருந்தால், 68 ஆயிரம் பேர் இருக்கும் கல்முனை மாநகர சபையில் ஏன் மாநகர சபையும் பிரதேச சபையும் இருக்கக் கூடாது. அப்போதுதான் எங்கள் பிரதேசங்களை நாங்கள் அபிவிருத்தி செய்ய முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்களிடமிருந்து பிரிக்க எவராலும் முடியாது. எங்களுக்கு வரவேண்டிய 33 வீத பங்கைத் தரட்டும். எங்கள் மக்களுக்கான குறைகள் என்னவென்று அறிந்து நாங்களே மக்களினது குறைகளைத் தீர்த்து வைக்கின்றோம். - என்றார். (ச- 31)

### பாலம் புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

திருகோணமலை, மார்ச் 19

திருகோணமலை மாவட்ட, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்துள்ள இலங்கைத் துறைமுகத்துவாரம் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் அரச அதிகாரிகளைக் கோருகின்றனர்.

இலங்கைத் துறைமுகத்துவாரம் பாலமானது கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் சேதமடைந்து தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மக்கள் படகு மூலமே பயணிக்கின்றனர். இதனால் நல்லூர், சீனன்வெளி, உப்பூறல், இலங்கைத் துறைமுகத்துவாரம் ஆகிய பிரதேச மக்கள் பயணிப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக, தினமும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உயர் அதிகாரிகள் இது தொடர்பாக உடன் கவனம் செலுத்தி இந்தப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

### பந்தயப் போட்டி மக்களுக்கு இடையூறு

கண்டி, மார்ச் 19

கண்டியில் இரவு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள வாகனப் பந்தயப் போட்டிகள் மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கதேரரான வண. உடுகம ஸ்ரீ புத்தரகித்ததேரர் தெரிவித்தார்.

மக்களுக்கு தொந்தரவு ஏற்படுத்தும் வகையில் கண்டி நகரம் முழுவதும் மண் மூடைகளால் நிரப்பப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பாதசாரிகளுக்கு நடமாட இடமில்லை. இந்த சிறிய நகரத்தின் வீதிகள் மாலையில் மூடப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார். இந்த பந்தயங்கள் குறித்து அதிகாரிகள் எவரும் அறிந்திருக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## திருட்டுகள் அதிகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்கள்வங்கி முகாமையாளர் ஒருவரது வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பொருள்கள் திருடப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமையலறைக் கூரைப் பகுதியின் ஊடாக வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் 4 வீடியோ கமராக்கள், 50 பவுண் நகைகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 50 கிலோ கிராம் நிறையுடைய 18 சீமெந்து பைக்கற்றுக்கள் திருடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி புனரமைப்பு வேலைகளுக்காக வைக்கப்பட்ட சீமெந்து பைக்கற்றுக்கள் இவ்வாறு திருடப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



சவூதி அரேபிய அரசினால் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பேரீச்சம் பழங்களின் ஒரு தொகுதி அம்பாறை மாவட்டத்திலுள்ள 19 ஜும்மா பள்ளிவாசல்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசலில் வைத்து இந்த பேரீச்சம் பழப்பெட்டிகளை முஸ்லிம் சமய, கலாசார, திணைக்கள கலாசார உதவியாளர் ஏ.எம்.ஹஸீன் வழங்குகின்றார். (30)

## லஞ்சம் பெற்றனராம்; இரு பொலிஸார் கைது

கல்முனை, மார்ச் 19

கல்முனைப் பிரதேசத்தில் கனரக வாகன சாரதியிடம் 200 ரூபாவை லஞ்சமாகப் பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் கல்முனை பொலிஸ் நிலை யத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸாரை நேற்று முன் தினம் சனிக்கிழமை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இருவரும் கல்முனை, தாளைவெட்டுவான் சந்தியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் மண் ஏற்றி வந்த கனரக வாகனத்தை இடைமறித்து 200 ரூபாய் பணத்தை பெற்றுள்ளனர்.

வாகனத்தில் பயணித்த நபர் தனது பெயரை இந்தப் பணத்தில் கையொப்பமாக இட்டு வழங்கியதுடன், இந்தச் சம்பவம் குறித்தது பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸார் இந்த இருவரையும் கைது செய்துள்ளதுடன் லஞ்சமாக வாங்கிய பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைதானவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## மீள்குடியமர்த்துவதற்குப் பணிகள் பூர்த்தி

### மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

அம்பாறை, மார்ச் 19

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஆரம்பப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோன் தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து இதுவரையில் குடியேற்றத்துக்கு செல்லாதோரை மீளக்குடியமர்த்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உயர் மட்டக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போரால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் திருக்கோவில், விநாயகபுரம் போன்ற பிரதேசங்களில் உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றன. இந்த நிலையில் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவான முறையில் மீள்குயேற்றம் செய்யப்படுவதற்கான ஆரம்பப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையின் முதல் கட்டமாக 300 வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் முறையாகச் செய்யப்பட்டுள்ளன. அதில் வீடு நிர்மாணம், நீர் வசதி, மின்சாரம், போக்குவரத்து, வீதி நிர்மாணம் போன்றவற்றோடு விவசாயம், மீன்பிடி, சேனைப்பயிர்செய்கைகளுக்குத் தேவையான தொழில் சார் உபகரணங்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவின் கஞ்சிகுடியாறு கிராமத்தின் 406 குடும்பங்களைச் சேர்நத 1435 பேரும், தங்கவேலாயுதபுரம் கிராமத்தின் 424 குடும்பங்களைச் சேர்ந்த 1254 பேருமாக 2689 பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Annai Nagaa Food City

# 10 ஆவது அகவையில் அன்னை நாகா பூட் சிற்றி வழங்கும் விசேட சலுகைகள்

**அன்னை நாகா பூட்சிற்றி 10ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு பரிசுப் பொருள்களை அளிக்க முன்வந்துள்ளோம்**

* 19.03.2012 அன்று 2000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் கிடைக்கும் பெறுமதிக்கு SAKTHY PRODUCTS இலவசமாக வழங்கப்படும்.
* 19.03.2012 அன்று பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவரை தெரிவு செய்து பின்வரும் அடிப்படையில் பரிசுப்பொருள்கள் வழங்கப்படும்
  1. 1000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு ELECTRIC KETTLE ஒன்றும்,
  2. 2000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு FAN ஒன்றும்,
  3. 5000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு DVD PLAYER ஒன்றும் வழங்கப்படும், மேலும்
  * 3000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அன்னை நாகா பூட்சிற்றியின் CLOTH BAG (கையிருப்பு முடியும் வரை) இலவசமாக வழங்கப்படும்.
  * குறிப்பிடப்பட்ட வீட்டுப்பாவனை பொருள்களுக்கு (House Hold Item & Baby T-shirt) 10% விலைக் கழிவு வழங்கப்படும்.
  * குறிப்பிட்ட மளிகைப் பொருள்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

**விசேட விலைக்கழிவு 19.03.2012 முதல் 15.04.2012 வரை மட்டுமே**

| | Marked Price | Our Price |
|---|---|---|
| Maaruthi Mixture 500g | 300.00 | **285.00** |
| Maaruhi Omappodi 200g | 120.00 | **114.00** |
| Maaruthi Pop Corns | 40.00 | **38.00** |
| Maaruthi Marsh Mellow 50 Pcs | 215.00 | **204.25** |
| Maaruthi Marsh Mellow 50 Pcs Lose | 200.00 | **190.00** |
| Maaruthi Marsh Mellow Balls 100g | 135.00 | **128.25** |
| Maaruthi Marsh Mellow 25 Pcs | 125.00 | **118.75** |
| Maaruthi Marsh Mellow 15 Pcs | 75.00 | **71.25** |
| Maaruthi Jujubes 100g | 65.00 | **61.75** |
| Maaruthi Jujubes 200g | 125.00 | **118.75** |
| Maaruthi Jujubes 300g | 180.00 | **171.00** |
| Maaruthi 03 Coat Jujubes 12 Pcs | 65.00 | **61.75** |
| Maaruthi Pea Nut Ball 20 Pcs | 90.00 | **85.50** |
| Maaruthi Gingelly Rolls | 155.00 | **147.25** |
| Edgell French FRIES 500g | 250.00 | **237.50** |
| Edgell French FRIES 1 kg | 475.00 | **451.25** |
| Fortune SunFlower Oil 1 Ltr | 450.00 | **395.00** |
| Fortune Vegetable Oil 1 Ltr | 450.00 | **420.00** |
| Beeri Pure Apple Juice 1Ltr | 468.00 | **421.20** |
| Kelloggs Corn Flakes 100g | 125.00 | **112.50** |
| Roza Pasta Products | 150.00 | **135.00** |
| Magic Time Yummy Tummy Chips 160g | 345.00 | **310.50** |
| Magic Time Yummy Tummy Chips 45g | 124.00 | **111.60** |
| Qucker outmeal Q.cooking 800g | 590.00 | **560.50** |
| Qucker outmeal instant 800g | 590.00 | **560.50** |
| Qucker outmeal Q.cooking 400g | 325.00 | **308.75** |
| Qucker outmeal instant 400g | 325.00 | **308.75** |
| Peacock brand young corn 425g | 170.00 | **161.50** |
| peacock brand whole mushroom 425g | 210.00 | **199.50** |
| peacock brand rice vermicelli 500g | 255.00 | **242.25** |
| Daintee choco assoortment canister 400g | 375.00 | **337.50** |
| Daintee chocolates assortment packets | 80.00 | **72.00** |
| Daintee jelly slices 150g | 120.00 | **108.00** |
| Milady super cho minttoffee 630g | 300.00 | **270.00** |
| chito chocolate éclair toffee 450g | 300.00 | **270.00** |
| daintee milady choco eclairs 450g | 300.00 | **270.00** |
| daintee kurakkan crunch 150g | 120.00 | **108.00** |
| Daintee Milady cho MaltToffee 630g | 300.00 | **270.00** |
| Diamond milk powder 1kg | 647.00 | **630.00** |
| Diamond milk powder 400gr | 264.00 | **255.00** |
| protinex 180gr | 690.00 | **660.00** |
| Diasure Diabatic Vanilla flavour 200g | 700.00 | **650.00** |
| Advanced weight Gainer 500g | 1,500.00 | **1,450.00** |
| MD Mango Jam 225g | 110.00 | **104.50** |
| MD Mixed fruit Jam 225g | 120.00 | **114.00** |
| MD Strawberry Flavour Jam 225g | 120.00 | **114.00** |
| MD Wood Apple Jam 225g | 120.00 | **114.00** |
| MD Mixed fruit Jam 300g | 155.00 | **147.25** |
| MD Pineapple Jam 300g | 155.00 | **147.25** |

| | Marked Price | Our Price |
|---|---|---|
| MD Strawberry Flavour Melon Jam 300g | 155.00 | **147.25** |
| MD Wood Apple Jam 300g | 155.00 | **147.25** |
| MD Mixed Fruit Jam 485g | 225.00 | **213.75** |
| MD Pineapple Jam 485g | 225.00 | **213.75** |
| MD Wood Apple Jam 485g | 225.00 | **213.75** |
| MD Real Strawberry Jam 485g | 325.00 | **308.75** |
| MD Mixed Fruit Jam 895g | 375.00 | **356.25** |
| MD Strawberry Flavour Melon Jam 895g | 375.00 | **356.25** |
| MD Wood Apple jam 895g | 395.00 | **375.25** |
| MD Diabetic Mango Jam 330g | 255.00 | **242.25** |
| MD Diabetic Mixed Fruit Jam 330g | 255.00 | **242.25** |
| MD Diabetic Woodapple Jam 330g | 255.00 | **242.25** |
| MD Diabetic Orange Marmalade Jam 330g | 290.00 | **275.50** |
| MD Diabetic Real Strawberry Jam 330g | 315.00 | **299.25** |
| MD Diabetic Pineapple Jam 330g | 255.00 | **242.25** |
| MD Mixed Fruit Cordial 750ml | 410.00 | **389.50** |
| MD Nelli Cordial 750ml | 410.00 | **389.50** |
| MD Passion Fruit Cordial 750ml | 395.00 | **375.25** |
| MD Pineapple Cordial 750ml | 410.00 | **389.50** |
| MD Artificial Sherbet Syrup 750ml | 395.00 | **375.25** |
| MD Orange Cordial 750ml | 410.00 | **389.50** |
| MD Chilli Sauce 200g | 120.00 | **114.00** |
| MD Tomato Ketchup 200g | 125.00 | **118.75** |
| MD Chilli Sauce 400g | 230.00 | **218.50** |
| MD Tomato Ketchup 400g | 220.00 | **209.00** |
| MD Tomato Sauces 400g | 230.00 | **218.50** |
| MD Chilli & Garlic Sauces 400g | 210.00 | **199.50** |
| MD Tomato Sauces Economy pack 2lt | 500.00 | **475.00** |
| MD Tomato Sauces Economy pack 4lt | 890.00 | **845.50** |
| MD Amberella Chutney 460g | 235.00 | **223.25** |
| MD Malay Pickle 375g | 250.00 | **237.50** |
| MD Seeni Sambol 300g | 380.00 | **361.00** |
| MD Maldive Fish sambol 300g | 590.00 | **560.50** |
| MD Fruit Salad 685g | 290.00 | **275.50** |
| MD Pineapple pieces 560g | 250.00 | **237.50** |
| MD Kitul Treacle 340ml | 225.00 | **213.75** |
| MD Kitul Treacle 750ml | 475.00 | **451.25** |
| MD Mustard past 170g | 130.00 | **123.50** |
| MD veg.Chilli Past 170g | 190.00 | **180.50** |
| MD Chilli paste with M/Fish 200g | 265.00 | **251.75** |
| MD Maldive Chips Packet 50g | 165.00 | **156.75** |
| MD Maldive Chips Packet 100g | 305.00 | **289.75** |
| MD Maldive Chips Packet 200g | 575.00 | **546.25** |
| MD Maldive Chips Bottle 200g | 620.00 | **589.00** |
| MD Instant Artificial Orange Fla 275g | 160.00 | **152.00** |
| MD INstant A/Mixed/F/Falvoured Drink | 160.00 | **152.00** |
| Faluda Mix 125g | 63.00 | **59.85** |
| Faluda Mix 250g | 110.00 | **104.50** |

## Special promotion

velvet hand wash + velvet soap free
buy 3 velvet soap + get 1 velvet soap free
baby cheramy teddy bear cologne buy 2 + 1 free
buy tip dishwashing liquid & get pocket tissue free
buy air wick airfreshner & get 200ml harpic free
johnson's baby cologne buy 2 + 1 soap free

swadeshi komba baby cologne 100ml + 1 soap free
swadeshi komba baby cream 100ml + 1 soap free
little lion milky cookies 470gr + get 100gr wafers free
buy any munchee biscuit 500gr +get 100gr biscuit free
buy any maam biscuit 500gr +get 100gr biscuit free
buy any kist biscuit 500gr +get 100gr wafers free

**வாடிக்கையாளரை மகிழ்ச்சிப்படுத்தும் முகமாக புதுவருடத்துக்கான பரிசுப் பொருள்களையும் வழங்கவுள்ளோம் (20.03 முதல் 15.04 வரை)**

* 5000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர் ஒருவருக்கு Washing Machine
* 3000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர் ஒருவருக்கு T.V
* 1000/= மேல் பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர் ஒருவருக்கு DVD Player.

**Annai Nagaa Food City, 175, K.K.S. Road, Jaffna. T.P: 0217390191/92**

# அகப்பட்டார் அப்துல்லா



## கடாபியின் இரகசியங்கள் வெளிவருமா?

**அப்துல்லாவை தம்மிடம் ஒப்படைக்குமாறு லிபியாவும், பிரான்ஸும் கோரிக்கை விடுத்துள்ளன.**

நோக்சாட், மார்ச் 19

மறைந்த லிபியா ஜனாதிபதி கேணல் கடாபி அரசின் உளவுப் பிரிவு தலைவராக பணியாற்றிய அப்துல்லா-அல்-செனுஷி, கைது செய்யப்பட்டுள்ளார்.

62 வயதான அப்துல்லா -அல்-செனுஷி கடாபியின் மனைவி வழி உறவினர் ஆவார்.

கடாபியின் உளவுத் துறைத் தலைவராக செயற்பட்டுவந்த அப்துல்லா லிபியா புரட்சி உச்சக்கட்டத்தை அடைந்தபோது அந்த நாட்டை விட்டுத் தப்பி ஓடினார்.

பின்னர் சர்வதேச நீதிமன்றத்தால் தேடப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் அப்துல்லா, மரிதானியா நாட்டு விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். மொராக்கோவிலிருந்து போலி கடவுச்சீட்டின் மூலம் மரிதானியா தலைநகர் நோக்சாட் விமானநிலையத்தில் வைத்து பொலிஸார் இவரை கைது செய்துள்ளனர்.

இந்த விடயம் லிபிய அரசுக்கு தெரிந்ததும், அப்துல்லாவை தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரியுள்ளது. ஏனெனில், கடாபி ஆட்சியின் போது வெளியில் வராத இரகசியங்கள் இவர் மூலம் வெளிவரலாம் என்று லிபிய அரசு கருதுகிறது.

இதற்கிடையே, கடந்த 1989 ஆம் ஆண்டு பிரான்ஸ் விமானம் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்ட வழக்கில் அப்துல்லா-அல்-செனுஷி முக்கிய குற்றவாளி என்பதால் பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோசி, பிரான்ஸிடம் அவரை ஒப்படைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். (ங)

# விண்வெளிக்குப் போகும் அதிர்ஷ்டக்காரப் பல்லி



உலகில் முதன்முறையாக விண்வெளிக்கு வெப்பத்தை தாங்கக்கூடிய பல்லிகளை அனுப்பும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் உயிரியல் மருத்துவத்திற்கான ரஷ்ய நிறுவனம் பல்லிகளைவிண்வெளிக்குஅனுப்பி வைக்க உள்ளது.

பல்லிகளின் விண்வெளிப் பயணம் தொடர்பாக செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

விண்வெளிக்கு மனிதர்களை தெரிவு செய்து, பயிற்சி அளித்துஅனுப்புவது போன்றே, பல்லிகளும் அனுப்பப்படுகின்றன என்றார்.

இதற்கு மிக வலிமையற்ற, உடல்நிலை சரியில்லாத மற்றும் கோபம், ஆத்திரம், படபடப்பு போன்ற உணர்ச்சி அதிகம் உடைய பல்லிகள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை - என்றார்.

வீட்டில் இருக்கும் பல்லிகளுக்கு சிறப்பு பயிற்சி அதிகம் தேவைப்படாது. எந்த வெப்பத்தையும் அவற்றால் தாங்கிக் கொள்ள முடியும். எடையற்ற சூழ்நிலை உருவாகும் போதும், புவி ஈர்ப்பு விசை குறையும் போதும் இவை தரையிலோ, சுவரிலோ, கூரையிலோ ஊர்ந்து செல்லும் இயல்புடையது.

இவற்றை வைத்து ஆராய்ச்சி செய்வதால் மனிதர்கள் பயணிக்கும் போது அவர்களுக்கான உடல்நலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். கடந்த 1947 ஆம் ஆண்டில் முதன் முறையாக ஈக்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ங)

# நாய்கள் கவனம்

## தாய்லாந்தில் அதிகரிக்கும் கடத்தல்



தாய்லாந்தில் இறைச்சிக்காக நாய்கள் கடத்தப்படுவது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. வியட்நாமிலும், சீனாவிலும் மக்கள் அதிகளவு நாய்க்கறியை ருசித்து சாப்பிடுகின்றனர்.

இதனால் இறைச்சிக்கு விற்பதற்காக தெருநாய்களும், வீடுகளில் செல்லமாக வளர்க்கப்படும் நாய்களும் பிடிக்கப்பட்டு சட்டவிரோதமாக ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது தாய்லாந்தில் அதிகரித்து வருகிறது.

நேற்றுமுன்தினம் தாய்லாந்தின் வடகிழக்கே லாவோஸ் எல்லையருகே சுமார் 800 நாய்கள் ஏற்றப்பட்ட ஒரு லொறி அதிகாரிகளிடம் பிடிபட்டுள்ளது.

சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இறைச்சிக்காக நாய்களைக் கடத்தும் சட்டவிரோத வர்த்தகத்தின் ஒரு பகுதியாக இந்த நாய்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு தாய்லாந்தில் நாய்க் கடத்துவது அதிக லாபம் தரும் ஒரு வியாபாரமாக இருப்பது தான் பிரச்சினை. தாய்லாந்தில் பிடிக்கப்பட்ட ஒரு நாயை 10 டொலர்களுக்கு வாங்க முடியும். இந்த நாயின் எடை, பருமன், நிறம் எல்லாம் சரியாக அமையும் பட்சத்தில் சீனாவிலோ வியட்நாமிலோ ஒரு நாய் 30 டொலர்கள் வரை கூட விற்பனை செய்ய முடியும்.

நாய்கள் திருடப்படுவதையோ கடத்தப்படுவதையோ தடுக்கும் விடயத்தில் தாய்லாந்தின் சட்டங்கள் இறுக்கமானதாக இல்லை என்று 'பிராணிகள் பாதுகாப்பு இணையம்' என்ற மிருகவதை பாதுகாப்பு அமைப்பின் ரோஜர் லோஹனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து ரோஜர் மேலும் கூறுகையில்,

நாய்கள் பிடிக்கப்படுவதையும் திருடப்படுவதையும் தடுப்பதற்கென்று விசேடமான சட்டம் எதுவும் தாய்லாந்தில் இல்லை. சட்டவிரோதமாக நாய்கள் பிடிக்கப்படுவதை தடுக்கின்ற விசேட சட்டங்கள் அவசரமாக இங்கு கொண்டுவரப்பட வேண்டும் - என்றார். (ங)

# அதிரும் சிரியா

**பொதுமக்கள் மீதான தாக்குதல் களை சிரிய அரசு தான் நடத்துவதாக எதிரணியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதன்மூலம் எதிரணிக்கு களங்கம் கற்பித்து அவர்களுக்கு மக்களிடமுள்ள செல்வாக்கைக் குறைக்க சிரிய அதிபர் முயல்கிறார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இதனை சிரியா மறுத்துள்ளது.**

சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ்ஸில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்ததில் 27 பேர் பலியாகினர்.

இதுகுறித்து சிரியாவின் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 27 பேர் பலியாகினர். இதில் அப்பாவி பொதுமக்களும், பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் புலனாய்வு மற்றும் பொலிஸ் கட்டடங்களை இலக்கு வைத்தே நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்கள் அரச நிர்வாகத்தைச் சீர்குலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்கள் வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனங்கள் மூலமே நடத்தப்பட்டுள்ளன என்று ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் சிரியாவில் ஊடகவியலாளர்களின் பணிகள் முடக்கப்பட்டுள்ளதால் இந்தச் சம்பவங்களைப் பற்றிய உண்மைத் தன்மையை இதுவரை உறுதிப்படுத்த முடியவில்லை.

கடந்த சில மாதங்களில் தலைநகர் டமாஸ்கஸ்ஸிலும், சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலப்போவிலும் நடந்த தாக்குதல்களிலும் இதேபோன்று பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்தத் தாக்குதல் சம்பவங்களை சிரிய அரசு தான் நடத்துவதாக எதிரணியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி பஷீர் அல் அசாத்துக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி கடந்த ஒரு வருடமாக நடைபெற்றுவரும் நிலையில், சிரியப் படைகளின் தாக்குதல்களில் சுமார் 8,500க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங)

# ஜேர்மன் கொலைக்கூடத்தின் காவலர் காலமானார்



ஜோன் டெம்யன்யூக்



ஜேர்மனிய நச்சுவாயுக் கூடத்தில் குவிக்கப்பட்டிருக்கும் யூதர்களின் சடலங்கள்

இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற போது லட்சக்கணக்கான யூதமக்களின் மரணத்திற்கு காரணமானவரான ஜோன் டெம்யன்யூக் தனது 91 வயதில் காலமானார்.

ஜேர்மனி நீதிமன்றமொன்று இவருக்கு 5 ஆண்டுகால சிறைத்தண்டனை அளித்து கடந்த 2011 மே மாதம் தீர்ப்பளித்திருந்தது. ஆனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து பின்னர் இவர் மேல்முறையீடு செய்திருந்த நிலையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 1943ம் ஆண்டில் நாஜிக்களின் கட்டுப்பாட்டிலிருந்த போலந்து சிறைச்சாலை ஒன்றில் டெம்யான்யூக் காவலராக பணியாற்றியுள்ளதாக நீதிமன்றம் கூறியது. ஆனால் தானும் அங்கு போர்க்கால கைதியாகவே இருந்தார் என்று கூறி அந்தக் குற்றச்சாட்டை அவர் மறுத்துவிட்டார்.

போலந்தின் சொபபோர் சிறைச்சாலையில் இருந்த நச்சுவாயுக் கூடங்களில் சுமார் இரண்டரை லட்சம் பேர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அங்கு காவலராக இருந்த போது டெம்யன்யூக், 28,060 பேர் மரணம் அடைவதற்கு காரணமாக இருந்தார் என்று குற்றம்சாட்டப்பட்டது.

ஆனால் குற்றத்தை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லையென கூறப்பட்டதால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ங)



பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி, 45 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள மியரியாகோ, மிடானோவா ஆகிய நகரங்களில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன்போது பெண்கள், குழந்தைகள் உட்பட பொதுமக்கள் அனைவரும் கட்டடங்களிலிருந்து வெளியேறியதால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. இந்த நிலநடுக்கம் 5.9 ரிக்டர் அளவில் பதிவானதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

# அப்பா ஆனார் ஆப்கன் ஜனாதிபதி

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய்க்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயின் மனைவி ஜீனத் கர்சாய் ஒரு வைத்தியர்.

இந்தத் தம்பதியருக்கு இப்போது ஓர் அழகான பெண்குழந்தை பிறந்துள்ளது.

இது கர்சாய் தம்பதிகளின் முதல் குழந்தை என்பது குறிப்பிடத்தக்கது. அப்பாவான ஆப்கானிஸ்தான் ஜனாதிபதிக்கு, உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்துக் கூறி உள்ளனர். (ங)

# இறங்குங்கள் புரட்சியில்!

## அல்குவைதா தலைவர் அறைகூவல்

**அல்குவைதா அமைப்பின் ஸ்தாபத் தலைவர் ஒசாமா பின்லேடனைப் பாகிஸ்தானே காட்டிக்கொடுத்ததாக அந்த அமைப்பு நம்புகிறது. இது இஸ்லாம் மதத்துக்கு அந்த நாடு இழைத்த மாபெரும் துரோகம் என வர்ணிக்கும் அல்குவைதா அமைப்பு, பாகிஸ்தானுக்கு எதிராக மக்களைப் போராடுமாறு அழைப்பு விடுத்துள்ளது.**



"அமெரிக்காவின் அடிமைகளை எதிர்த்துப் போராடுங்கள்'' என்று இஸ்லாமிய மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அல்குவைதா இயக்கத்தின் தலைவர் அல் ஜவாகிரி. இதன்போது அவர் பாகிஸ்தான் இராணுவத்தை அமெரிக்காவின் அடிமைகள் என்றும் வர்ணித்துள்ளார்.

அல்குவைதா அமைப்பின் தலைவரான அல் ஜவாகிரி தற்போது எங்கு உள்ளார் என்பது தெரியவில்லை. ஆனால் இவரது உரையாடலைக் கொண்ட 10 நிமிட வீடியோ ஒன்று இணையத் தில் வெளியிடப்பட்டுள்ளது.

அரபு நாடுகளில் ஏற்பட்டுள்ள புரட்சியைப் போன்று பாகிஸ்தானிலும் அந்த நாட்டு அரசு மற்றும் இராணுவத்தை எதிர்த்து மக்கள் புரட்சியில் ஈடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

பாகிஸ்தான் இராணுவம் இஸ்லாமிய மக்களுக்குத் தொடர்ந்து இழைத்துவரும் நம்பிக்கைத் துரோகத்தை கைவிட வேண்டும். இதற்காக அந்த நாட்டுக்கு எதிராக கோடிக் கணக்கான மக்கள் புரட்சி என்ற நெருப்பில் குதிக்க வேண்டும்.

பாகிஸ்தான் மக்களுக்கு அரபுப் புரட்சிகள் வழிகாட்டியுள்ளன. பாகிஸ்தான் அரசு மற்றும் இராணுவத்துக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலமே அமெரிக்காவின் அடிமைகளை ஒழிக்க முடியும்- என்றார். (ங)

# 40 லட்சம் துப்பாக்கிகள் அழிப்பு

ரஷ்ய இராணுவத்தில் நவீன ஏகே 47 ரக தானியங்கி உட்படப் பலவிதமான துப்பாக்கிகள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் அவை கண்டுபிடிக்கப் பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

பழைய துப்பாக்கிகள் லட்சக் கணக்கில் ஆயுதக் களஞ்சியங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒரு கோடியே 60 லட்சத்துக்கு அதிகமான துப்பாக்கிகள பல கிடங்குகளில் உபயோகமற்று கிடக்கின்றன.

இவற்றில் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. அவற்றை 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் அழித்துவிட ரஷ்ய இராணுவம் திட்டமிட்டுள்ளது. (ங)

# ஜனாதிபதித் தேர்தலில் 'காபரே' நடன அழகி




துகிலுரி (காபரே) நடனத்தில் பெயர் பெற்ற பெண்ணொருவர், பிரான்ஸில் நடைபெறவுள்ள தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸியை எதிர்த்து போட்டியிடவுள்ளார். 'இஸபெல்லா லாங்' எனும் உண்மையான பெயரைக் கொண்ட இந்தப்பெண் சின்டி லீ எனும் பெயரில் துகிலுரி நடனக்கலைஞராக தொழில்புரிந்தவர். அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் தீர்மானித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 500 நகரங்களின் மேயர்கள் அல்லது துணை மேயர்களின் கையெழுத்துக்களைப் பெறவேண்டும். இதனால் அவர்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கையை சின்டி லீ ஆரம்பித்துள்ளார். (ங)

# இந்தியாவைச் சமாளிக்கிறது அமெரிக்கா

நியூயோர்க்,மார்ச்19

ஈரானிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்தாவிட்டால், பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் செய்தியால் அமெரிக்காவிலும், இந்தியாவிலும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இது குறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

அவர் கூறியதாவது:

இந்தச் செய்தி ஊகத்தின் அடிப்படையானது. அத்தகைய முடிவை அமெரிக்கா எடுக்கவில்லை. ஈரான் எண்ணெய் இறக்குமதி விவகாரம் தொடர்பாக இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை நடத்தி வருகின்றன. ஈரானின் எண்ணெயை சார்ந்து இருப்பதை குறைக்கப் போவதாக இந்தியா கூறி இருப்பதை, சாதகமான மாற்றமாக கருதி வரவேற்கிறோம். அணுகுண்டு தயாரிக்கவிடாமல் ஈரானைத் தடுப்பதில், இந்தியா எங்களது மதிப்புமிக்க கூட்டாளி.

அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளும், இந்தச் செய்தி அமெரிக்காவின் கொள்கையை துல்லியமாக பிரதிபலிக்கவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் எங்களிடம் தெரிவித்துள்ளனர் -என்றனர். (ங)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.
ச.கைலாசநாதன்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாணவர் கல்வி அபிவிருத்தி வலிகாமம் வலயம்)

தெல்லிப்பழைக் கோட்ட கல்விப்பணிப்பாளராக 6 வருடங்களுக்கு மேல் உன்னத சேவையாற்றி எமது கல்லூரியின் வளர்ச்சியிலும் அயராது பாடுபட்டுவரும் உயர்திரு.ச.கைலாசநாதன் அவர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமையை எமது பாட சாலைச் சமூகம் பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றது.

பாடசாலை சமூகம், யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(C\9195) (6,9,10)


## தொழில் மாறிய பெண்கள்

லண்டன்,மார்ச்19

பிரிட்டனில் சட்டத்தரணிகளாக தொழில் புரிந்துவந்த இரு பெண்கள் திடீரென தமது தொழிலை உதறிவிட்டு குழாய் திருத்தும் வேலைக்குச் சென்றுள்ளனர்.

பிரிட்டனில் சட்டத்தரணியாகத் தொழில் புரியும் பெண்கள் பாலியல் ரீதியாகக் கீழ்த்தரமாக நடத்தப்படுவதாகவும் ஆண்களுக்கேஎப்போதும்மதிப்பளிக்கப்படுவதாகவும் அண்மைக் காலமாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. எனினும் இத்தகைய வேறுபாட்டைக் களைந்து பால் சமத்துவத்தைப் பேண பிரிட்டன் அரசு பின்னடித்து வருகின்றது. அரசின் இந்தச் செயலைக் கண்டித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே தம்முடைய சட்டத்தரணித் தொழிலை குறித்த இரு பெண்களும் கைகழுவியுள்ள னர்.

தற்போது இவர்கள் இருவரும் குழாய் திருத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். வருமானம் குறைவாக இருந்தாலும் குழாய் திருத்தும் தொழிலில் தன்மானத்தோடு ஈடுபட முடிவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ங)


**வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்களின் கொத்தணி (வ-து) உறுதிப்பத்திரம் வழங்கியுதவுதல்**

மேற்படி கொத்தணியின் 31.12.2011 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள், ஏனைய கூட்டுறவுச்சங்கங்கள், ஏனைய நிறுவனங்கள் தங்களுடனான வருமதி செல்மதி விவரங்களை 31.12.2011 ஆம் திகதியில் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்தி மூன்று பிரதிகளில் உறுதிப்பத்திரத்தினை இன்றிலிருந்து 14 நாள்களிற்கு கொத்தணியிடம் வழங்கியு தவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொது முகாமையாளர்.

வடமராட்சி பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின்
கொத்தணி, திக்கம் வடிசாலை,

(C/9178)(6-9-8)



பாராட்டி வாழ்த்துகின்றேன்

சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட

தம்பித்துரை குணத்திலகம்



அவர்கள் கௌரவ நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களால் இலங்கை முழுவதற்குமான ஒரு சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 14.03.2012 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இவர் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் சில்லாலை விவசாய சம்மேளனத் தலைவரும், பனிப்புலம் சமுதாய முன்னேற்ற நிரந்தர நிதியச் செயலாளரும்,சில்லாலை பொலிஸ் பொது மக்கள் நல் உறவுக் குழு உறுப்பினரும், சில்லாலை மேற்கு சாந்தை சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணிச் சபையின் பொருளாளருமாகப் பொறுப்புடன் செயலாற்றி ஓய்வு பெற்றவருமாவார்.

இவர் மேலும் பல சிறப்புகள் பெற்று நேரிய வழியில் செயலாற்ற முழு முதற் பரம்பொருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட் தந்தை யோ.ப.ஜோதிநாதன்
சில்லாலை, பண்டத்தரிப்பு.

(6-9-12)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில், உதவி அரசாங்க அதிபராக இருந்து இப் பிரதேசங்களைக் கட்டியெழுப்பவும், ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மக்களின் நிலையான இருப்பிட வாழ்விற்கு வழி அமைத்தவரும், அதிகாரி என்ற ஸ்தானத்தில் இல்லாது, கிராம மட்ட அமைப்புகளின் வளர்ச்சிக்கு, சிறப்பான முறையில் வழிகாட்டி, எல்லோரது அன்பையும் மதிப்பையும் பெற்று. 05.03.2012 இல் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு இடம்மாறிச்சென்ற

சிவபாதசுந்தரம் சத்தியசீலன்

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர் தனது பணியில் மேன்மேலும் பதவி உயர்வுகளைபெற்று சிறப்பான சேவையை ஆற்ற எல்லோரது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

"தேவையை அறிந்து செய்த உதவி பூமியை விட பன்மடங்கு பெரிதாக செய்த உதவியாக நாம் கருதுகிறோம்"

வரவேற்கின்றோம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உதவி அரசாங்க அதிபராக பொறுப்பேற்றிருக்கும் த.முகுந்தன் அவர்களையும் அன்போடு வரவேற்கின்றோம்.

பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கம், பரந்தன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
பரந்தன் கமக்கார அமைப்பு மற்றும் பரந்தன் சமூகசேவை அமைப்புகள், பொதுமக்கள்.

(14066) (6,9,10)

## இலங்கை விவகாரம்

# இந்தியாவின் ஆதரவு குறித்து தி.மு.க. நாளை விவாதிக்க முடிவு

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிப்பது குறித்து விவாதிப்பதற்காக நாளை தி.மு.க.வின் உயர் மட்டக் குழு அவசரமாகக் கூடவுள்ளதால் மேற்படி செயற்றிட்ட குழு உறுப்பினர்களுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத் தொடரில் 23ஆம் திகதி இடம்பெறவிருக்கும் வாக்கெடுப்பில் இந்தியா ஆதரிக்காவிட்டால், மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுவது பற்றி, இதன்போது ஆலோசிக்கப்பட உள்ளது.

எல்லாக் கட்சிகளும் வலியுறுத்தலோடு நிறுத்திக் கொள்ள முடியும். அதையும் தாண்டி, அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம், தி.மு.கவுக்கு மட்டும் இருக்கிறது. மத்திய அரசின் ஓர் அங்கமாக தி.மு.க.வும் இருப்பது தான் இதற்குக் காரணம். அந்தக் கட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் இருக்கின்றனர். ஐந்து மத்திய அமைச்சர்கள் இருக்கின்றனர்.

**எல்லாக் கட்சிகளும் வலி யுறுத்தலோடு நிறுத்திக் கொள்ள முடியும். அதையும் தாண்டி, அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டிய நிர்பந்தம், தி.மு.க வுக்கு மட்டும் இருக்கிறது.**



முடிவெடுக்கும் அதிகார மையமான அமைச்சரவையில் ஓர் அங்கமாக இருந்து கொண்டு, வெறுமனே வலியுறுத்திக் கொண்டிருந்தால், பாமரர்கள் முதல், அரசியல் பார்வையாளர்கள் வரை அனைவரும் நகைக்கும் படியாக ஆகிவிடும் என்று கவலைப்படுகிறது தி.மு.க. அந்தக் கட்சித் தலைவர் கருணாநிதி செல்லும் இடங்களில் எல்லாம் பத்திரிகையாளர்கள், மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுவீர்களா? என்று தான் கேட்கின்றனர்.

அதற்கு உங்கள் அவசரத்துக்கு ஏற்ப நானும் அவசரப்பட்டு பதில் சொல்ல முடியாது. இது நான் மட்டும் எடுக்கும் முடிவல்ல. உயர் நிலை செயல் திட்டக் குழுவைக் கூட்டித்தான் முடிவெடுக்க முடியும் என்றார். சொன்னதுக்கு ஏற்ப நாளை அந்தக்குழுவின் அவசரக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

இது தொடர்பாக, கட்சியின் பொதுச் செயலர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில், கட்சியின் உயர் நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம், நாளை முற்பகல் 10.30 மணிக்கு, சென்னை அண்ணா அறிவாலய கூட்ட அரங்கில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப் பினர்கள் அனைவரும்தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## முதலாவது அணு உலை 2 வாரங்களில் திறக்கப்படும்

### நாராயணசாமி கருத்து

சென்னை, மார்ச்.19



கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அணு உலை, இரண்டு வாரத்தில் திறக்கப்படும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு, பெங்களூரிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்த போது அவர் அளித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவ்து:


கூடங்குளம் அணுமின் நிலையம் திறப்பதற்குத் தயாராக இருக் கிறது. அதன், முதல் அணு உலை அடுத்த இரண்டு வாரங்களில் இரண்டாவது அணு உலை அடுத்த இரண்டு மாதங்களிலும், மின் உற்பத்தியை ஆரம்பிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராகச் செயற்பட்டு வரும் உதயகுமார் குழுவினருக்கு மக்களின் ஆதரவு தற்போது குறைந்து விட்டது. கடுமையான மின்வெட்டுக் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதி மக்கள், உதயகுமார் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது கடும் கோபத்தில் உள்ளனர். எனவே, உதயகுமார் குழுவினர் மக்களைக் கண்டு பயந்து ஓடி ஒளிகின்றனர். மக்களும் இவர்களை, ஓடஓட விரட்டத் தொடங்கி விட்ட னர். தமிழக அரசு அமைத்துள்ள நிபுணர்குழுவும், கூடங்குளம் அணுமின் நிலையம் மிகவும் பாதுகாப்பானது என்று அறிக்கை கொடுத்து விட்டது. எனவே, மிகவிரைவில் தமிழக அரசின் முழு ஒத்துழைப்போடு கூடங்குளம் அணுமின் நிலையம் உற்பத்தி ஆரம்பிக்கப்படும். - என்றார் அவர். (வ)

## செவ்வாய் கிரகத்துக்கு விரைவில் ரொக்கெட்

இஸ்ரோ செவ்வாய் கிரகத்துக்கு ரொக்கெட் அனுப்பும் பணியை, அடுத்த வருடம் மேற்கொள்ள உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தாக்கல் செய்யப் பட்ட மத்திய அரசு பட்ஜெட்டில் இஸ்ரோவின் செவ்வாய்கிரக ஆராய்ச்சிக்காக ரூ.125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பி.எஸ்.எல்.வி. ரொக்கெட்டின் தரம் உயர்த்தப்படும். மேலும் எதிர்வரும் 2016-2018 ஆம் ஆண்டுகளில் செவ்வாய் கிரகத்துக்கு ரொக்கெட் அனுப்பும் முயற்சி மேற்கொள்வதாக முடிவு செய்யப்பட்டிருந்தது. (வ)



கூடங்குளம் அணுமின் நிலையத்தை திறக்க வலியுறுத்தும் வகையில் கூடங்குளம் என்ற பெயரில் ஒன்று தயாரிக்கப்பட்ட குறும்படத்தை முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட்டு வைக்க மத்திய அமைச்சர் வாசன் பெற்றுக்கொண்டார். அருகில், தமிழக காங்., தலைவர் ஞான தேசிகன், படத்தின் தயாரிப்பாளர் வெங்கட் ஆகியோர் நிற்கின்றனர்.

## காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு மம்தா ஆதரவளிக்கமாட்டார்



மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கப் போவது இல்லை என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அதிரடியாக அறிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் கடந்த முறை மாநிலங்களவைத் தேர்தல் நடைபெற்ற போது காங்கிரஸூக்கு உறுப்பினர் பதவியைத் திரிணமூல் அளித்தது. அதேபோல இந்த முறையும் மேற்கு வங்கத்தில் திரிணமூல் ஆதரவுடன் மாநிலங்களவை உறுப்பினரைப் பெறலாம் என்று காங்கிரஸ் கனவு கண்டது. இந்த நிலையில் மேற்கு வங்கத்தில் வெற்றிடமாகும்5மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளில் 4 இடங்களில்தனதுகட்சியில் இருந்து வேட்பாளர்களை நிறுத்தி காங்கிரஸூக்கு மம்தா அதிர்ச்சியளித்துள்ளார்.

தற்போது மத்திய கப்பல் துறை இணையமைச்சராக உள்ள முகுல் ராய்க்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று இடங்களுக்கு பத்திரிகையா ளர்கள் குணால் கோஷ், நதீம் உல் ஹக், விவேக் குப்தா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## மாயாவதியின் பாதுகாப்பு குறைப்பு

லக்னோ, மார்ச்.19



உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதிக்கு அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பை அந்த மாநில அரசு குறைத்துள்ளது. 415 பொலிஸாருக்குப் பதிலாக 56 பொலிஸார் மட்டுமே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி மாநில முதல்வராக மாயாவதி இருந்த போது அவருக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 24 மணி நேரமும் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. கறுப்புப் பூனைப் படை கொமாண்டோக்கள் தவிர உத்தரப் பிரதேச பொலிஸாரும் பாதுகாவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர் வெளியில் சென்றால், கார்களில் பாதுகாப்பு படையினர் 14 பேர் செல்வார்கள். அதில் 4 கார்கள் குண்டு துளைக்காதவை. மொத்தம் 415 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. முதல்வர் அகி லேஷ் யாதவ் தலைமை யிலான புதிய அரசு முக்கிய பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பை ஆய்வு செய்தது. இதன் அடிப்படையில் மாயாவதிக்கு அளிக்கப்பட்டுவந்தபாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. மாயாவதிக்கு கறுப்புப் பூனை படையினர் 36 பேர், உத்தரப் பிரதேச பொலிஸார் 20 பேர் மட்டுமே பாதுகாப்பு அளிக்கின்றனர். இவரோடு இசட் பிளஸ் பிரிவில் உள்ள முன்னாள் முதல்வர்கள் முதல்வர்கள் முலாயம் சிங் யாதவ், ராஜ்நாத் சிங் ஆகியோருக்கும் 56 பொலிஸார் மட்டுமே பாதுகாப்பு அளிக்கின்றனர். மாயாவதியை பாதுகாக்கும் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள 359 பொலிஸாருக்கு வேறு பணிகள் வழங்கப்பட்டுள்ளதாக உபி உள்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(வ)

# மீனவர்கள் மீதான தாக்குதல் மத்திய அரசு அசமந்த நிலை

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தேசிய பிரச்சினையாக மத்திய அரசு கருதவில்லை என்று பிரதமர் மன் மோகன்சிங்குக்கு எழுதிய கடிதத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்ததாவது:



பாக்குநீரிணைப் பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த தமிழக மீனவர்கள் (ராமேஸ்வரம் மீனவர்கள்) மீது கடந்த 4 ஆம் திகதி இலங்கை மீனவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அப்போது அவர்களின் படகு மீது பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் தமிழ்நாட்டு மீனவர்கள் 4 பேர் கடலில் மூழ்கி விட்டனர். அவர்களை மற்றொரு படகில் வந்தவர்கள் மீட்டு மறுநாள் காலை கரைக்கு கொண்டு வந்தனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காது என்று இலங்கை அரசு உறுதி அளித்த பிறகும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்ந்து நடை பெறுகின்றன. பலமுறை இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இலங்கை கடற்படை மற்றும் மீனவர்கள் மீது இதுவரை எந்த முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை. தமிழக மீனவர் கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத் தப்படுவது தெரிந்தும் இலங்கை அரசு அவர்கள் மீது எந்தவித நடவடிக் கையும் எடுக்கவில்லை. அதனால் தான் இலங்கை கடற்படை தமிழக மீனவர்கள் மீது துணிச்சலாக தாக் குதல் நடத்தியுள்ளனர். மீனவர்கள் விவகாரத்தில் இலங்கை அரசு இரட்டை வேடம் போடுவது இதில்இருந்துதெரியவருகிறது.

இந்த நிலையில் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விடயத்தை இந்திய அரசு தேசிய பிரச்சினையாகக் கருதவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதன் மீது எந்தவித கடுமையான நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை. கடந்த ஜனவரி மாதம் 13, 14 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற கூட்டு குழு கூட் டத்தில் இரு நாட்டு மீனவர் களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப் பட்டது. தற்போது நடைபெற்று வரும்தொடர்தாக்குதலால்அது பயனாற்று போய்விட்டது.

எனவே பாரம்பரியமாக பாக்கு நீரிணை பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான உரிமைகளை திரும்பப் பெற வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்தும்படி இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)



# தாய்மையைக் கொண்டாடும் உலகம் பெண்மையைக் கொண்டாடுவதில்லை

த.நித்தியா

இந்த உலகம் தாய்மையை கொண்டாடுகிற அளவுக்கு பெண்மையைக் கொண்டாடுவது இல்லை என்பது வருத்தமானதொரு விடயமே. தாய்மை அடைகிற போது தான் அவளைக் கொண்டாட ஆரம்பிக்க வேண்டுமா? ஏன் அப்போது மட்டும் அவளைக் கொண்டாட வேண்டும்? அப்படி கொண்டாடமல் விட்டால், இந்த உலகம் பழிக்குமே. அதனால் தானோ என்னவோ ஒருவன் தாய்மையை மட்டுமாவது மதிக்கிறான்.

ஆனால் ஒரு பெண்ணுக்குள் ஆரம்பம் முதலே தாய்மை நிரம்பி வழிந்து கொண்டு தான் இருக்கிறது. ஒரு பெண் குழந்தை பொம்மையைக் குழந்தை போல பாவித்து அதற்கு உணவு அளிப்பதிலும், தாலாட்டி உறங்க வைப்பதிலும் இருந்தே நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் போகப் போக அதற்குள்ளும் ஆணாதிக்கத்தின் பாதிப்புக்கள் வந்து விடுகின்றன.

காலையில் வீட்டு வாசலில் இருக்கும் செய்தித்தாளை அப்பாவிடமும், பாலை அம்மாவிடமும் யாரும் கற்பிக்காமலே ஒரு குழந்தை எப்படி கொடுக்கிறது?

பெண்களின் பெருந்தன்மையால் தான் இங்கே பல ஆண்கள் தண்டிக்கப்படாமல் நிம்மதியாக வாழ முடிகிறது. ஒரு பெண்ணின் தியாகத்துக்கு முன்னாடி, ஆண்களின் வலிமை எல்லாம் ஒன்றுமே இல்லாமல் போய் விடுகிறது.

ஆணாதிக்கம் என்பது ஒரு பிறவிக் குணமா? இயற்கை ஆணுக்கு அளித்த ஆயுதமா? இல்லை இயற்கையை வென்ற ஆணின் குணாதிசயமா? இப்படி விடை கிடைக்காத கேள்விகள் ஏராளம். ஆண்களின் பழி சுமத்துகிற மனோபாவத்துக்கு விடைத் தேடிப் பயணிக்க வேண்டும் என்றால் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

அசுரனிடம் சிக்கிய மனைவியைப் பார்த்ததும் மகிழ்ச்சி கொள்ளாமல் சந்தேகப்பட்ட ராமனும் , ஆண்கள் சூதாடிய போது ஏதோ மண்ணை வைத்து விளையாடியதோடு மட்டுமல்லாமல் மனைவியையும் வைத்து விளையாடிய பாண்டவர்களும் தானே நம் முன்னோர்கள்? விபச்சாரம் செய்ததாக ஒரு பெண்ணைக் கல்லெறிந்து அடித்துக் கொல்ல முயற்சிக்கும் போது ஏசுநாதர் வந்து தடுத்தாரே .. அப்போது அவர், உங்களில் தவறு செய்யாதவர்கள் கல் எறியுங்கள் என்றதும் ஆண்கள் எல்லாம் மௌனமானார்களே.

ஆணின் பங்கு இல்லாமல் இங்கே விபச்சாரம் நடக்காது என்கிற உண்மை தெரியாதவர்கள் எவரும் இல்லை. அன்னை தெரெசா கொல்கத்தாவில் அறக்கட்டளை தொடங்கிய போது அதை அவதூறாகப் பேசியவர்கள் தானே நம்முன்னோர்கள்.

> “ தாய்மை அடைகிற போது தான் அவளைக் கொண்டாட ஆரம்பிக்க வேண்டுமா? ஏன் அப்போது மட்டும் அவளைக் கொண்டாட வேண்டும்? அப்படி கொண்டாடாமல் விட்டால், இந்த உலகம் பழிக்குமே. அதனால் தானோ என்னவோ ஒருவன் தாய்மையை மட்டும் மதிக்கிறான்.





# நாகரிகம் இதுவா?



பெண்ணே!
விடிந்து விட்டது என்று
ஒவ்வொரு விடியலிலும் விளித்தெழுகிறாய்
விடிகின்ற ஒரு விடியலில் கூட – ஒரு
விடுதலை விடியலில்லை உனக்கு..

பாரதி படைத்த புதுமைப்
பெண்ணாய் மலர்ந்தாய் – இன்று
இளைஞர்களின் கையில்
இடியாக உதிர்கிறது உன் வாழ்க்கை

சமூகம் இட்ட எத்தனையோ
கட்டுப்பாடுகளுக்குள் முடங்கி
வாழ்கிறாய்– உன்னை
அலங்கரிக்கும் ஆடைக்கு – ஒரு
கட்டுப்பாடு போட முடியாதா? உன்னால்

சேலைகட்டி, கோலமிட்டு விளக்கேற்றி
தொடர்ந்த தமிழர் பண்பாடு
Jeans போட்டு Telephone உடன்
தொடர்கிறது இன்று
இது தானா? உன் நாகரிகம்.

உன்னைத் தொடர்ந்து வரும்
ஒவ்வோர் இளைஞனும்
உன் முன்னால் சொல்லும் வார்த்தையை
சிந்தித்துப் பார்த்தாயா?

ஆண்களுக்குச் சமமாய்
உயர்ந்து விட்டாய் என்பதற்காகவா
உன் ஆடைகளையும்
ஆண்களுக்கு நிகராய் மாற்றுகிறாய்?
நாய் கூட மதிக்காத – ஒரு
நாகரிகம் வேண்டுமா உனக்கு?
தமிழர் பண்பாடு நிமிர
தலை நிமிர்ந்து எழு பெண்ணே!
விடுதலையுடன் ஒரு விடியல்
உனக்காக விடியட்டும்
விளித்தெழு பெண்ணே
உறக்கத்திலிருந்தல்ல உன்
நாகரிகத்தில் இருந்து!

ச. ஜெயமதி
கிளி / பளை மத்திய கல்லூரி

# போராட்டங்கள் அவசியமே



உலக நாடுகள் எல்லாவற்றிலும் பெண்கள் தமக்கெதிரான ஒடுக்குமுறைக்கு முகம் கொடுப்பவர்களாக இருந்து வருகின்றனர். இவ்வாறான கீழ்மையிலிருந்து மீளவும், கௌரவத்தை நிலை நாட்டவும், தொடர்ச்சியாகப் போராட வேண்டியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் நேரத்துக்கு நேரம் பெண்ணின் வாழ்வியல் நடைமுறைகள் மாறிக்கொண்டிருக்கும் வேளையில் இதுவரை காலமும் கட்டிக் காக்கப்பட்டு வந்த கலாசாரம் சிதைக்கப்படாமல் உண்மையான விடுதலைப் போக்கை அடைய வேண்டும். 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்ற வாக்கிற்கு இணங்க எமது பெண்களினூடாக மேலே கூறப்பட்ட நிலைமைகளில் இருந்து சமூகம் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் தமது குரல்களை, தமது உரிமைகளை, தொடர்ச்சியாக உயர்த்த வேண்டும். சமூகத்தின் பெண்களின் துயர்தோய்ந்த நிலையைக் கண்டு கோஷங்கள் எழுப்பப்பட்டு வர வேண்டும்.

இன்று சர்வதேச மட்டங்களில் பெண்கள் தொடர்பாகக் குரல் கொடுக்கும் அனைத்து தொடர்பு சாதனங்களும், விரும்பியோ, விரும்பாமலோ, சமூகம் செவி சாய்த்துக் கேட்கும் அளவுக்கு பெண்களின் அடக்குமுறை வன்முறை பற்றிய செய்திகளை ஓயாது வெளிப்படுத்திக் கொண்டிருப்பதானது அனைத்துப் பெண்கள் அமைப்புக்களின் செயற்பாட்டின் விளைவே என்பதை நாம் உணர வேண்டும்.

பெண் அடையாளத்தால் ஒடுக்கப்படும் பெண் மட்டும் தெளிவுபெற்றால் போதாது. ஒடுக்கும் முழுச் சமூகமும் இந்தத் தெளிவைப் பெறவேண்டும். புதிய புரட்சிகர மாற்றத்துக்கான மனோ நிலைக்கு வளர வேண்டும். ஜனநாயகத்தின் உயரிய அம்சங்களால் புரிந்துகொண்டு அந்தத் தளத்துக்குத் தன்னை விரிவுபடுத்தும் பண்பைப் பெறவும் வேண்டும்.

போராடும் பெண் , சமூகச் சிந்தனையிலும் செயற்திறனிலும் தேசம் முழுவதும் முழுமைபெற்று விரிந்திருக்கிறாள். வீட்டுக்குள், சுவர்களுக்குள், வேலிகளுக்குள் முடக்கப்பட்டும் முடங்கியுமிருந்த நிலையை விட்டு சமூகமாக, தேசமாக பரந்துவிட்டாள். சகல நிலைகளிலும் சமத்துவமான ஆற்றலையும் அறிவையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி வருகிறாள். இந்த வெளிப்பாட்டினூடாக அவள் செய்து வரும் செயற் பிரகடனத்தின் பின்னரும் நாம் மரபுகளின் பின்னும் பண்பாட்டுக் குறைபாடுகளின் பின்னும் எத்தனை நாளைக்குத்தான் மனச்சாட்சிக்கு விரோதமாக இருக்க முடியும்.

பாரம்பரியங்களிலும் மரபு வழமை, பண்பாடு, சடங்கு என்ற வளையங்களாலும் ஒடுக்குமுறைக்கு ஆதரவான கல்வித்தடுப்புச் சுவர்களாலும் சிறையிடப்பட்டிருக்கும் பெண் வாழ்வை மீட்கும் நடைமுறையின் தேவைபற்றிய தெளிவே இன்று எல்லோரிடத்திலும் வேண்டப்படுவது.

அகிலா,நெல்லியடி

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ''திலகம்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



## தன்னம்பிக்கையை வளர்ப்பது எப்படி?

இந்த உலகில் வெற்றியாளர்கள் அனைவருக்கும் பணமிருந்ததோ இல்லையோ, நல்ல குடும்பச் சூழல் இருந்ததோ இல்லையோ, சிறந்த கல்வியறிவு இருந்ததோ இல்லையோ, அழகான உடலமைப்பு இருந்ததோ இல்லையோ - ஒன்றே ஒன்றுதான் நிச்சயமாய் இருந்தது. அந்த ஒன்று தான் 'தன்னம்பிக்கை'

அழகான உடலமைப்பை நாம் தேர்ந்தெடுக்க முடியாது. சிவந்த நிறமும் அழகான உடலமைப்பும் நம் தாய், தந்தையரிடமிருந்து நமக்குக் கிடைக்கின்ற பரிசு. அதுபோல, பணக்காரப் பெற்றோரையும் நாம் தேர்வு செய்து கொள்ள முடியாது. இந்தக் குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்ற உரிமை நமக்கு வழங்கப்படவில்லை.

மேற்சொன்ன இரண்டையும்விட கல்வி நிச்சயம் நமக்கு வழிகாட்டும்; வழிகாட்ட வேண்டும்! ஆனால் கல்வியறிவு பெற்ற எத்தனையோ பேர்கூட வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகளை எதிர் கொள்ள இயலாத கோழைகளாகக் காணப்படுகிறார்கள். சிலர் வன்முறை போன்ற தீய வழிகளில் சென்று விடுகிறார்கள். அவர்கள் தங்கள் முன்னே வந்து நிற்கின்ற சவால்களைத் தவிர்ப்பவர்களாகவோ, சவால்களிலிருந்து தப்பித்துக் கொள்பவர்களாகவோ இருக்கிறார்கள்.



தன்னம்பிக்கை கொண்டவர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும் வாழ்வில் எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலோடு வெற்றி மனிதர்களாகக் காணப்படுகிறார்கள்.

இனி தன்னம்பிக்கை கொண்டவர்களின் குணங்கள் என்னென்ன; அவர்கள் இந்தச் சமுதாயத்தில் எப்படித் திகழ்கிறார்கள் என்று பார்ப்போம்.

★ மகிழ்ச்சியாக வாழ்கிறவர்கள்; பிறரையும் மகிழ்ச்சியாக வாழச் செய்கிறார்கள்.

★ சாதனை புரிகிறார்கள்; பிறரையும் கூட சிறந்த சாதனையாளராக உருவாக்குகிறார்கள்.

★ எந்தச் சூழ்நிலையிலும் கோபமோ, சிடுசிடுப்போ அடையவே மாட்டார்கள்.

★ பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்கிறார்கள்; பிறரது பொறுப்பை உணர்த்துகிறார்கள்.

★ வாழ்வில் எதிர்ப்படும் எந்தப் பிரச்சினைகளையும் எளிதாகக் கடந்து செல்கிறார்கள்.

★ பிறரது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஆலோசகர்களாக விளங்குகிறார்கள்.

★ தலைமை தாங்கி பிறரை நடத்திச் செல்கிறார்கள்.

★ ஏற்றுக் கொண்ட வேலையை நிறைவாகச் செய்து முடிக்கிறார்கள்.

தன்னம்பிக்கை என்பது ஆற்றல் வாய்ந்த உங்களது சிறப்பியல்பு. அது உங்களை ஊக்குவிக்கும், உங்களின் உள்ளுரத்தை (Stamina) மேம்படுத்தும், தன்னம்பிக்கை என்பது உங்களின் மீதும், உங்கள் திறமையின் மீதும் நீங்கள் வைக்கும் நம்பிக்கை.

*'' நீங்கள் விழுகிற ஒவ்வொரு முறையும் உங்களை எழுந்து நிற்கச் செய்வது உங்களுடைய தன்னம்பிக்கை தான்''*

வெற்றிக்கும், சாதனைக்கும் 'தன்னம்பிக்கை' வேண்டும். அதுவே வெற்றியை உறுதிப்படுத்துகிறது.

தன்னம்பிக்கை என்பது ஒவ்வொருவரின் இயல்பு என்றும், இயல்பாகவே தன்னம்பிக்கை இல்லாதவர்கள் அதை உருவாக்கிக் கொள்ள முடியாது என்றும் இதுவரை எண்ணிக் கொண்டிருந்தால் அந்த எண்ணத்தை இன்றோடு மாற்றிக் கொள்ளுங்கள். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள சில வழி முறைகள் உள்ளன. அவற்றை அறிந்து கொண்டு அவற்றை முறையாகக் கடைப்பிடித்தால் நீங்களும் தன்னம்பிக்கை கொண்டவர்களாக விளங்குவதைக் கண்கூடாக உணர்வீர்கள்.

தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்று விரும்புகிற நீங்கள் முதலில் தன்னம்பிக்கை என்பது என்ன? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்குச் சொந்தமான சிறந்த அம்சங்களில் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையே உங்கள் தன்னம்பிக்கை. உங்கள் தன்னம்பிக்கையே உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கின்றது.

நீங்கள் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் எனில் முதலில் உங்களை நம்புங்கள். அடுத்து, உங்களைச் சுற்றியிருப்பவர்களான குடும்பத்தினர், நண்பர்கள், உங்களோடு பணியாற்றுகிறவர்களை நம்புங்கள். அடுத்து கடவுள் நம்பிக்கை உள்ளவர்களானால் கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள்.

'உங்கள் முதலடியை நம்பிக்கையோடு எடுத்து வையுங்கள். உலகத்தின் நெடுஞ்சாலைகளெல்லாம் நடந்து முடிந்தாகிவிடும். உங்கள் வாழ்க்கை என்பது ஒரு நெடும் பயணம். நீங்கள் பல்லாயிரம் கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டும் என்றாலும், முதல் அடியை எடுத்து வைத்துத்தான் அந்தப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் அல்லவா? அந்த முதல் அடியை எடுத்து வையுங்கள். இன்று முதல் நீங்கள் தன்னம்பிக்கையான மனிதர்! ★

# ஆரம்பக் கல்வியில் இருந்தே மாணவர்களை வளர்க்க வேண்டும்

### வலி.வடக்கு துணை தவிசாளர் சஜீவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அவர்களின் ஆரம்பக் கல்வியிலிருந்தே ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் சமுதாயம் விரும்பக் கூடிய நபராகத் தன்னை மாற்றி அமைப்பதுடன் நிரந்தர தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**கடந்தகாலங்களில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்டதன் விளைவாக இன்று தவறான ஓர் இளைஞர் சமுதாயத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.**

கடந்த காலங்களில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்டதன் விளைவாக இன்று தவறான ஓர் இளைஞர் சமுதாயத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இவர்களின் இத்தகைய நிலைக்கு முக்கிய காரணம் மாணவப் பருவத்தில் அவர்கள் சிறந்த கல்வியைப் பெறத் தவறியதுடன் சமுதாயத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட தவறான பாதைகளைத் தேர்ந்தெடுத்தமையே ஆகும் எனத் தெரிவித்தார் வலி.வடக்கு துணை தவிசாளர் ச.சஜீவன்.

அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் அதிபர் திருமதி தர்மபால சுந்தரம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சஜீவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

கல்விச் சொத்தினை எதைக் கொண்டும் அழிக்க முடியாது. அது காலகாலமாக நிலை பெற்றிருக்கும். இதனை நாம் முழுமையாகப் பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியிலிருந்தே பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளின் அத்திபாரமாக ஆரம்பக்கல்வி இருப்பதால் அவர்களின் தொடர்ச்சியான கற்றலைப் பெற்றுக்கொள்ள ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் அறிவு மேலதிகமாக மேம்படுத்தும்.

எனவே இத்தகைய கல்வியை நாம் பெற்றுக்கொடுக்கத் தவறினால் எதிர்காலத்தில் கல்வியற்ற சமுதாயத்தையும் சீர்குலைக்கப்பட்ட தவறான வழிப்போக்குடைய சமுதாயத்தையுமே நாம் சந்திக்க நேரிடும்.

இதனைப்பெற்றோர்கள் உணர்ந்து தமது பிள்ளைகளுக்கு வழிகாட்டிகளாக இருந்து கல்வியைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.- என்றார். (எ-14)

## நியமனம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சட்ட ஆலோசகராக தொல்புரம் சட்ட வல்லுநர் கனகசிங்கம் சபையினரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் நியமனத்தை வழங்கினார். பிரதேச சபை மக்கள் பல்வேறு வகையான நிலப் பதிவுகள், நிலப்பங்கீடு, வரிகள் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்வு காணவே இந்த நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-28)

## அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

தென்மராட்சி,மார்ச் 19

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொதுநூலக அபி விருத்தி தொடர்பான கூட்டம் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபை செயலாளர் செல்வி சி.தர்சினி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீஸன் உட்பட நூலக அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.(எ-9)

# இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்க வேண்டும்

### பேராசிரியர் விசாகரூபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

தலை சிறந்த இலக்கியப் படைப்புக்களை உருவாக்கும் இலக்கியவாதிகள், இளம் படைப்பாளிகளை ஊக்குவிப்பது சமூகத்தின் கடமையாகும் என யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தெரிவித்தார்.

சிற்பனை கீதா கணேஷ்சின் 'எத்தனங்கள்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழக தமிழ்த் துறையைச் சேர்ந்த வை.கோவர்த்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே விசாகரூபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இன்று இளம்படைப்பாளிகள் உருவாகி உள்ளபோதும் ஒருசில படைப்பாளிகளுக்கு மட்டுமே களங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

இலைமறை காயாக இளம் எழுத்தாளர்கள் உள்ளனர். இவர்களை சமூகத்தில் அறிமுகம் செய்து அவர்களின் படைப்புக்களை வெளிக்கொண்டு வரும் பல்கலைக்கழக இலக்கிய மன்றங்களைப் போல வெளியிலும் இவ்வாறான மன்றங்களை உருவாக்க வேண்டும்.

அச்சுப் பதிப்புக்களாக வெளிவரும் நூல்கள் சிறந்தவையாக அமைய வேண்டும். எழுத்துப் பிழைகளோ, இலக்கண, இலக்கிய வழுக்களோஅற்ற தூய தமிழ் வடிவிலும், இலகுவான மொழி நடையிலும் வெளிவருவது வரவேற்கத் தக்கதாகும். நூல்கள் பல் சுவைகளும் அடங்கியதாக வெளிவருவதுடன் பரந்த நோக்குடனும் காலத்தின் தேவைகளை அறிந்தும் எழுதப்படுவது அவசியம்.- என்றார். (எ)

# விளையாட்டில் பங்குபற்றும் மாணவர்கள் சகலதையும் கற்றுக் கொள்கிறார்கள்

### அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர்

வலிகாமம்,மார்ச் 19

விளையாட்டில் சிறப்பாகச் செயற்படும் மாணவர்களே கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர் என வலிகாமம் வலய மாணவர் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் தெரிவித்தார்.

**விளையாட்டுப்போட்டிகளிலும், இதர இணை பாடச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஊக்கவிக்கப்பட வேண்டும். மாணவர்களிடத்தில் தலைமைத்துவப் பண்பையும் விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, கூட்டுறவு மனப்பான்மை முதலிய நற்குணங்களையும் விளையாட்டின் மூலம் மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.**

சண்டிலிப்பாய் கோட்ட விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழா மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கைலாசநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

விளையாட்டுப்போட்டிகளிலும், இதர இணைபாடச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். மாணவர்களிடத்தில் தலைமைத்துவப் பண்பையும் விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, கூட்டுறவு மனப்பான்மை முதலிய நற்குணங்களையும் விளையாட்டின் மூலம் மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.

அதனால்தான் விளையாட்டில் சிறப்பாகச் செயற்படும் மாணவர்கள் கல்வியிலும் சிறப்பாகச் செயற்பட முடிகிறது. மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.- என்றார். (எ-38)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## உயிர்காவும் கண்ணிகள்

வன்னியில் போரின் பின்னரான மீள்குடியேற்றச் செயற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அங்கு மக்கள் வாழ்வியல் ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றமை நாளுக்கு நாள் நடைபெறும் சம்பவங்களில் இருந்து புலப்படுகின்றது. அபிவிருத்தி செயற்பாடுகளில் அந்தப் பகுதி மிகவும் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவே கருதப்படுகின்றது. குறிப்பாக மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையை முன்னெடுப்பதற்கான எந்த உபாயங்களும் அங்கு சீராக இருப்பதாகத் தென்படவில்லை.

இப்போது அந்த மக்களுக்கு புதிய வகையிலான ஆபத்தும் நெருங்கியிருக்கின்றது. அரசு வன்னியில் மீள்குடியேற்றம் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளது என அறிவித்தாலும் அங்கு பல பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை, மீள்குடியேற்றம் நடைபெறவில்லை. இவை ஒரு புறம் இருக்க கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன என உறுதியளிக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் இன்னமும் கண்ணிவெடி, வெடி பொருள்கள் இருக்கவே செய்கின்றன. அவை இப்போதும் அந்த மக்களின் உயிர்களைக் காவு கொண்டு வருகின்றன.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிர், உடைமை இழப்புகளுக்கு மத்தியில் நலன்புரி நிலையங்களில் இருந்து தமது சொந்த நிலங்களுக்கு திரும்பிய மக்கள் அங்கு அச்சத்துடனேயே கால் வைக்க வேண்டியுள்ளது. அண்மையில் விசுவமடு தேராவில் பகுதியில் அலுமினியம், பித்தளை சேகரிப்பில் ஈடுபட்டிருந்த குடும்பத்தில் ஒரு சிறுவனின் உயிர் வெடிபொருளால் காவுகொள்ளப்பட்டது. அவனது சகோதரி அதன்போது படுகாயமடைந்திருந்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி செல்வாநகர்ப் பகுதியில் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் கையாண்ட பொருள் ஒன்று வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஆறு சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

வன்னியில் வாழ்வாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காக பழைய இரும்புகளைச் சேகரித்து விற்பனை செய்யும் நிலையில் அங்கு போரின்போது கைவிடப்பட்டுள்ள வெடிபொருள்களும் இவர்களின் கையில் அகப்படுகின்றன. அவை என்னவென்று தெரியாத இவர்கள் அவற்றை கழற்றவோ பகுதியாக்கவோ முற்படும் போது வெடித்துச் சிதறி உயிரிழப்புக்களையும் அங்கவய இழப்புக்களையும் சந்திக்க நேரிடுகிறது.

கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் பூர்த்தியடைய 10 அல்லது 15 வருடங்கள் தேவை என அரசு அறிவித்துள்ளது தவிர மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் நிதிப்பற்றாக்குறை காரணமாக தமது செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளன.

போரை முடிவுக்குக் கொண்டுவர பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்ட அரசு போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அபாயங்களை நீக்கி அபிவிருத்தி செய்ய முழு அக்கறை காட்டவில்லை. அதற்காக நிலைத்திருக்கக்கூடிய ஒரு திட்டத்தைக்கூட முன்வைக்கவில்லை.

கண்ணிவெடிகள், வெடிபொருள்கள் முற்றுமுழுதாக அகற்றப்படாது பாதுகாப்பற்ற பிரதேசமாக உள்ள இடங்களில், வாழ்வாதார ரீதியில் நெருக்கடிகளை எதிர்நோக்குவது என்பது தவிர்க்க முடியாதவை. மக்கள், அநாதரவாகக் கிடக்கும் இரும்புப்பொருள்களைச் சேகரிக்க முற்படும்போதும், வீடுகளில் குழந்தைகள் சேர்ந்து விளையாடும்போதும் அபாயகரமான வெடிபொருள்களை கையாளும் நிலை ஏற்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது போரால் துன்பப்பட்ட மக்களே என்பதை அரசு கவனிக்கத் தவறியுள்ளது.

# தீர்மானத்தின் கடுமையைத் தணிக்க இந்தியா திரைமறைவில் முயற்சி

18.03.2012 அன்று சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி

தொகுப்பு: கோகுலன்

> ''நாட்டின் வெளியுறவுக் கொள்கையினை அதனைத் திறமாகக் கையாளுபவரிடம் ஒப்படைக்கப் வேண்டும்; இல்லையெனில் குழறுபடிகள் தொடரவே செய்யும்.''

இலங்கையின் நவகால வரலாற்றின் ஒரு மைல்கல்லாக விளங்கப் போகும் ஒரு கிழமை இன்று தொடங்குகின்றது. வரும் வியாழக்கிழமையன்று அமெரிக்காவால் ஆதரிக்கப்படும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் வாக்களிப்புக்கு விடப்பட விருக்கின்றது. அது இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானம் அல்ல என்று கூறப்படுகின்றது. இந்தத் தீர்மானத்துக்கு பிரான்ஸ், நோர்வே, நைஜீரியா மற்றும் கமரூன் ஆகிய நாடுகள் இணை முன்மொழிவாளர்களாக விளங்குகின்றன. பெப்ரவரி 23 ஆம் திகதி ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை கூட்டம் ஆரம்பமானதிலிருந்து, இலங்கை அரசின் அமைச்சர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் ஜெனிவாவுக்கு விழுந்தடிக்குக் கொண்டு போய் இலங்கைக்கு ஆதரவுதேடுவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

இலங்கை சார்பில் உலக நாடுகள் பலவற்றிலும், பயணங்கள் மேற்கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டமைச்சர் ஜி.எ. பீரிஸின் இப்போதைய நிலைப்பாட்டைப் பார்த்தால், அவருடைய முயற்சிகள் எல்லாம் தோல்வி கண்டு விட்டன போல் தெரிகின்றது.

தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு, 50க்கு 50 வீதம் தான் சந்தர்ப்பம் இருக்கிறது என்று கடந்த வாரம் அவர் அமைச்சரவைக்க கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார். அமைச்சர்களுக்கு சிறு விளக்கம் அளிக்கும் படி ஜனாதிபதி கோட்டுக் கொண்டதை அடுத்து இந்தக் கருத்தை பீரிஸ் வெளியிட்டார். தோல்வி மானப்பான்மையுடன் தாம் பேசுவதற்கான காரணத்தையும் அமைச்சர்களுக்கு அவர் விளக்கினார். மனித உரிமைப் பேரவை உறுப்பு நாடுகள் எல்லாவற்றின் தலைநகர்களிலும் அமெரிக்காவுக்கு ராஜதந்திர காரியாலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மூலம் அந்த நாடு மிக வேகமாக பிரசாரங்களை முன்னெடுத்து காரியம் பார்த்துள்ளது என்று விளக்கினார் பீரிஸ். அமெரிக்காவுக்கு உலக நாடுகளின் தலைநகரங்களில் ராஜதந்திர காரியாலயங்கள் உண்டு என்பதும், அது துரிதமாக செயற்திறனுடன் பிரசாரங்களை முன்னெடுக்கும் என்பதையும் பீரிஸ் அறியாதிருப்பாரானால் அது ஆச்சரியத்துக்குரிய விடயம். இத்தனைக்கும் அவர் தான் இந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர்.

இலங்கைத் தூதுக்குழுக்கள் உலக நாடுகளின் தலைநகரங்களில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த அதே சமயம் லண்டனைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் கழகத்தின் குழுவினரும் அந்தக் குழுவினரைப்பின் தொடர்ந்து சென்று காரியம் பார்த்துள்ளனர்.

### இந்தியாவின் திரை மறைவு செயற்பாடுகள்

தீர்மானம் வாக்களிப்புக்கு விடப்படாமலே ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சாத்தியக் கூறு சிறிய அளவில் இருப்பதாக சில ராஜதந்திர வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது. இது இந்தியா மேற்கொண்ட திரை மறைவுச் செயற்பாடுகளின் விளைவு என்று கருதப்படுகிறது. தீர்மானத்தில் மேலும் சில மித போக்கான மாற்றங்களைச் செய்து உறுப்பு நாடுகளை ஒருமித்த கருத்துடன் ஏற்றுக் கொள்ளும்படி செய்வதற்கு, இந்தியா அமெரிக்காவுடன் இணக்கப்பாடு ஒன்றை செய்து கொள்ள முயல்வதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அவ்வாறான ஏற்பாடு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சாத்தியமாக மாட்டாது என்று ஜெனிவாவிலுள்ள முக்கிய ராஜதந்திர வட்டாரம் கருத்து வெளியிட்டுள்ளது. ஏற்கனவே கண்டனம் செய்யும் விதத்தில் அமைந்திருந்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அதன் தீவிர தன்மை தணிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பொழுது காலம் மிகவும் கடந்து விட்டது என்று தன்னை வெளிப்படுத்த விரும்பாத ஒரு வட்டாரம் தெரிவித்தது. தீர்மானத்தை முறியடிக்க வேண்டும் அல்லது எதிர் கொள்ள வேண்டும் அந்த வகையில் பணிபுரியும் படி தங்களுக்கு கூறப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

அதே அதிகாரி மேலும் தெரிவிக்கையில் இந்தியா-இலங்கையை ஆதரிக்கும் அதே நேரம் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்காது என்றும் தெரிவித்தார். தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்க அரசாங்கம் பல்வேறு ராஜதந்திர முன் முயற்சிகளில் இப்போது ஈடுபட்டிருக் கிறது.

மக்களின் ஆதரவைப் பலப்படுத்திக் கொள்ளும் விதத்தில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று மக்களைச் சந்திக்க இப்பொழுது ஜனாதிபதி தீர்மானிக்கிறார். மனித உரிமைப் பேரவை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாட்டை மக்களுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்துவார் என்றும் சர்வதேச நடவடிக்கைகள் மூலம் வரக்கூடிய எந்த விளைவையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் அதே வேளை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் கொரில்லாக்களைத் தோற்கடித்த படையினரை காட்டிக் கொடுக்க மாட்டார் என்றும் இந்தக் கூட்டங்களில் மக்களுக்கு அவர் வாக்களிக்கவிருக்கிறார். அவ்வாறான முதல் மக்கள் சந்திப்பு முஸ்லிம்கள் அதிகமாக வாழும் புத்தளம் மாவட்டத்தில் புதன் கிழமை நடைபெறவிருக்கின்றது.

### தீர்மானம் நிறைவேறினால்

தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவை இலங்கை விடயத்தில் மேற்கொள்ளவிருக்கும் பங்களிப்பு இலங்கை மீதான ஒரு பெரும் தாக்கமாக இருக்கப் போகின்றது.

சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைகளின் விளைவுகள் தொடர்பாக இலங்கை பேராளர் குழுவினருக்கு இலங்கை வெளியுறவு அமைச்சு சரியாக ஆலோசனைகள் வழங்காத நிலையில் தான் இப்படி இக்கட்டான நிலைமை தோன்றியுள்ளது. 52 பேர் அடங்கிய தூதுக்குழ ஒன்றினை ஜெனிவாவுக்கு அனுப்பியதன் பயனற்ற தன்மையும் இதில் வெளிப்படுகின்றது. எண்ணிக்கையை வெளிக்காட்டுவதுதான் ராஜதந்திரம் என்ற வகையிலான தவறான நம்பிக்கையின் விளைவு இதுவாகும். தீர்மானம் நிறைவேறினால் அடுத்து என்ன? என்ற கேள்வி எழுகின்றது. தீர்மான த்தின் படி நடந்து கொள்ள அரசு தீர்மானிக்குமானால்- அதாவது மனித உரிமைகள் ஆணையாளர் பேரவைக்கு அதன் செயல்பாடுகளை அறிக்கையிடுவார் அதில் அவர் நிதானமாகவும் நடந்து கொள்வார். ஆனால் தீர்மானத்தின் படி நடந்து கொள்ள அரசு மறுத்து நிற்கும் பட்சத்தில் ஐ.நா அமைப்புக்கு எதிராகவே மோதல் ஒன்றில் இறங்கும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டுவிடும் மேற்கு நாடுகளின் கோபத்உதுக்குள்ளாகும் நிலையும் வரும். வருடம் முடிவடைவதற்கு முன்னர் இரண்டில்ஒருநிலைமையை இலங்கைஎதிர்கொள்ள நேரும்.

இலங்கை நிலைவரம், மற்றும் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாகவும் இந்திய நாடாளுமன்றத்தில் அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா விளக்கம் அளித்தார்.

எமது நோக்கம் எப்பொழுதுமே இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் சமத்துவம், கௌரவம், நீதி, சுயகௌரவம் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது. இந்த சபையின் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ளப்படும் தீர்மானம் தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் போது அதைப்பற்றி சபைக்கு அறிவிக்கப்படும் என்று கிருஷ்ணா அறிவித்தார். இந்தியா ஜெனிவாவில் திரைமறைவில் செயற்பட்டு வருகிறது என்பதனாலேயே, இலங்கை தொடர்பான ஐ.நா.மனித உரிமைப் பேரவை தீர்மானம் மீதான இறுதி முடிவு எடுக்கப் பட்டதின் பின்னர் அரசு ஒரு கருத்தை வெளியிடும் என்ற வகையில் அமைச்சர் கூறியிருக்கிறார். இலங்கை விவகாரம் தொடர்பிலான கிருஷ்ணாவின் நிலைப்பாடு இரண்டு முனைகளைச் கொண்டிருப்பதில் சந்தேகமில்லை. ஒன்று என்னவென்றால் இலங்கையுடனான தற்போதைய இருதரப்பு உறவுகள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளங்கப்படுத்தவது, கோடிக்கணக்கான ரூபாய்களை குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் முதலீடு செய்துள்ள நிலையில் கொழும்பை வெறுப்படையச் செய்யும் போக்கை இந்தியாவால் மேற்கொள்ள முடியாமல் இருப்பதை இது விளக்குகின் றது. இதில் இன்னொரு விடயம் என்னவென் றால் இலங்கையில் சீனா தனது செல் வாக்கை அதிகரித்து வருவதாக இந்தியா கருது வதாகும்.

மற்ற விடயம் என்னவென்றால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் விரிவான தன்மை தொடர்பாக இலங்கைக்கு ஒரு செய்தியை வழங்குவது அத்துடன் இந்தியா தனது கொள்கையை மாற்றிக் கொண்டு விடவில்லை என்பதை நினைவுறுத்துவதாகும். தீர்மான த்தின் விளைவு என்னவாக இருந்தாலும் இந்தியா இலங்கையை ஆதரிக்கிறது அத்துடன் இலங்கையும் தன் அளவில் மாற்றீடாக நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகள் இருக்கின்றன என்பதையும் நினைவுபடுத்துவதாகும்

ஜெனிவாவில் இலங்கை எவ்விதமாக சமாளிக்கப் போகின்றது என்பது வரும் வாரங்களில் மட்டுமல்ல பல மாதங்களுக்கு விவாதத்துக்குரிய விடயமாகவிருக்கப் போகிறது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மீள்பரிசீலனைக்குட்படுத்தப் பட வேண்டும் என்பதை சுட்டுகின்ற திறவு கோலாகவும் அது அமையப் போகின்றது. தேசிய நலன்களை தனிப்பட்டவர் களின் ஆளுமை விருத்திக்குப் பயன்படுத்திக் கொள்வதான வெளியுறவுக் கொள்கை, சர்வதேச மட்டத்தில் இலங்கை தனிமைப் படுத்தப்படுமானால் பயனற்றுப் போய்விடும்.


ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர்களின் முன்னுள்ள சவால் என்னவென்றால் நட்டின் வெளியுறவுக் கொள்கையை, அதனை சிறப்பாகக் கொண்டு நடத்தக் கூடிய, கையாளக் கூடியவர்களிடம் ஒப்படைப்பதாகும். இல்லையெனில் மேற்கொண்டும் குழறு படிகளைத்தான் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசை நடைமுறைப்படுத்த ரணில் வலியுறுத்து

தொகுப்பு: இரா. புத்திரசிகாமணி

## உதயனுக்கு அவர் சிறப்புப் பேட்டி

> ஜெனிவாவில் பெரிய கேலிக்கூத்தாக இருக்கிறது. மனித உரிமை பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆனால் இலங்கையின் பிரதிநிதிகளாக 57 பேர் சென்றுள்ளனர். அங்கே ஜி.எல். பீரிஸ் கோஷ்டி, மஹிந்த சமரசிங்க கோஷ்டி என்று இரண்டாகப் பிரிந்து முட்டி மோதிக்கொள்கின்றனர்.



> அரசிடம் ஒன்று கூற விரும்புகின்றேன். ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதை விடுத்து வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் விலை உயர்வுகளை குறைக்கவும் போராட்டம் நடத்தினால் பிரயோசனமாக இருக்கும். அரச ஊழியர்களையும் அப்பாவிப் பொது மக்களையும் கட்டாயப்படுத்தி ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் பூச்சாண்டி காட்டுவதை அரசு கைவிட வேண்டும்.

கையாலாகாத ஒரு அரசின் சுய கீர்த்தியைப் பாதுகாப்பதற்காக நாட்டின் கீர்த்தியைப் பலியிட இடமளியோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை எழுத்துக்கு எழுத்து நிறைவேற்ற வேண்டும். முடியாவிட்டால் அரசு தானாகவே விலகிச் செல்ல வேண்டும் - எனக் கூறுகின்றார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ரணில் விக்கிரமசிங்க 'உதயனு'க்கு அளித்த சிறப்புப் பேட்டியின் போதே இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டில் மீண்டும் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்தினால் அதனால் ஏற்படும் பின்விளைவுகள், முன் எப்போதும் இல்லாத வகையில் பாரதூரமாகவே இருக்கும். சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிவரும் என்றார். ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

✸ யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளை நேரில் சென்று பார்த்தீர்கள். மக்களையும் சந்தித்து அவர்களின் நிலையைக் கண்டிருந்தீர்கள். உங்களுடைய உள்ளுணர்வு என்ன கூறுகின்றது?

ஆசியாவில் பல நாடுகளில் போர்களும் புரட்சிகளும் இடம்பெற்றுள்ளன. ஆனால் அங்கெல்லாம் ஏற்பட்ட பாதிப்புக்களை விட வடக்கில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நிவாரணம் வழங்கப்படவில்லை. கணவனை இழந்து அநாதரவாக்கப்பட்டுள்ள பெண்களுக்கு எந்தவிதமான வாழ்வாதார உதவிகளும் கிடைக்கவில்லை. பெருமளவிலான பிரதேசங்களில் மீளக் குடியேற்றம் மேற்கொள்ளப்படவில்லை. பெண்களும் சிறுமிகளும் மான பங்கப்படுத்தப்படுகின்றனர். பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு இல்லை. சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன. அநீதி தலைவிரித்து ஆடுகின்றது. சட்டமும் ஒழுங்கும் சீரழிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

✸ வெறுமனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் எப்படி. அதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்?

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறு தமிழ்க் கட்சிகளோ தனியாகப் போராட்டம் நடத்தினால் இனவாத சாயத்தைப் பூசி இனக்கலவரத்தைத் தூண்டி விட்டு பிரச்சினைகளை மழுங்கடித்துவிடுவார்கள். எனவே வடக்கும் தெற்கும் இணைந்து தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் என்று தேசிய மட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டும். அப்போது தான் இந்த அரசின் அராஜகத்தை ஒழித்து மக்களுக்கு விமோசனம் பெற்றுக்கொடுக்க முடியும்.

✸ ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் 1983 ஆம் ஆண்டு போல் ஒரு இனக்கலவரம் வெடிக்கும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். இப்போதே அதற்குத் திட்டமிடுகின்றார்களா.

இவர்கள் கூறுவது போல் தென்பகுதி மக்கள் எல்லோருமே மூடர்கள் அல்லர். மீண்டும் அப்படி ஒரு இனக்கலவரத்தை திட்டமிட்டு ஏற்படுத்தினால், அது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். உலக நாடுகளின் பிடியில் இருந்து விலகிச் செல்ல முடியாது.

✸ ஜெனிவா மாநாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்படவில்லை. இந்தக் குற்றச்செயல்களுக்குப் பொறுப்பான, தற்போது பதவியில் இருக்கும் அரசுக்கு எதிராகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி மூன்று விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

அனைத்து எதிர்க்கட்சிகளினதும் ஆதரவைப் பெற்று நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்தத் தவறினால் அனைவரும் ஒன்றிணைந்து தேசிய அளவில் போராட்டங்களை நடத்த வேண்டும். மாற்று அரசு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

✸ ஜெனிவாவில் இலங்கையின் நிலை எந்த வகையில் இருக்கின்றது?

பெரிய கேலிக்கூத்தாக இருக்கிறது. மனித உரிமை பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆனால் இலங்கையின் பிரதிநிதிகளாக 57 பேர் சென்றுள்ளனர். அங்கே ஜி.எல். பீரிஸ் கோஷ்டி, மஹிந்த சமரசிங்க கோஷ்டி என்று இரண்டாகப் பிரிந்து முட்டி மோதிக்கொள்கின்றனர்.

முதலில் ஜனாதிபதி, பீரிஸ், மஹிந்த சமரசிங்க இவர்களின் பிரச்சினையை தீர்க்கட்டும் அதன்பின் அமெரிக்காவுடன் மோதட்டும் இதுதான் இன்று ஜெனிவாவில் நம்மவர்களின் நிலை.

✸ நல்லிணக்க ஆணைக் குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரசு ஏன் பின்னடிக்கின்றது?

அப்படிக் கூறிவிட முடியாது. மஹிந்த அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் ஒன்றை மட்டும் உடனடியாக நடைமுறைப்படுத்தியுள்ளது. அதாவது வெள்ளைவான் கடத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி உடனடியாக வெள்ளை வானை நிறுத்திவிட்டு மஞ்சள் நிற வானைப் பாவிக்கின்றது. (சிரிக்கிறார்)

✸ நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் ஏற்படுத்தப் போகிறோம் என்று கூறும் அரசு, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பதவி உயர்வில், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய நான்கு தமிழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுள் ஒருவரையும் தெரிவுசெய்யவில்லை. இது திட்டமிட்டே தமிழர்களை ஓரங்கட்டும் செயல் அல்லவா? பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் உங்களுடைய கருத்து என்ன?

இந்த விடயம் எனது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. பெரிதும் விசனப்படத்தக்க விடயம். இது தொடர்பாக நான் பரிசீலனை செய்து வருகிறேன். கட்டாயமாகப் பரிகாரம் காணப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

✸ தென்பகுதியில் அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள், செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், சுகாதாரப் பணிப்பாளர்கள், பல்கலைக்கழக உபவேந்தர்கள் என நிர்வாகப் பணியில் இருக்கும் உயர் அதிகாரிகள் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர். ஆனால் வடக்கில் இவர்கள் கைப்பொம்மைகளாகவே இருக்கின்றனர். எல்லாத் துறைகளிலும் ஆளுநரின் அனுமதி இன்றி, எதையும் சுதந்திரமாகச் செய்ய முடியவதில்லை. ஒரு சிற்றூழியரைக் கூட ஆளுநரின் அனுமதியின்றி உள்ளக இடமாற்றம் செய்ய முடியாது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

இது நம்பமுடியாத ஒரு விடயமாகவே இருக்கின்றது. அரச அதிபர்கள், மாகாண செயலாளர்கள் என நிர்வாக மட்டத்தில் இருப்பவர்களின் நிர்வாக சுதந்திரத்தில், ஆளுநர் தலையிட முடியாது. இவர்களுடைய தீர்மானங்களுக்கு அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். மாறாக அதிகார செலுத்த முடியாது. இன்றும் அனைத்து விடயங்களிலும் அரசியல் தலையீடுகளும் செல்வாக்குகளும் அதிகரித்துள்ளன. எனவே இந்த அரசாங்கம் ஒழிக்கப்பட்டு மாற்று அரசு ஒன்றை உருவாக்க வேண்டும்.

✸ ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக என்று கூறி யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் செய்தது உங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவா? அல்லது ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராகவா?

பாவம் இந்த மக்கள், இன்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் யாழ்ப்பாண மக்கள் அல்லர். கட்டாயப்படுத்தி வெளியிடங்களில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள். நான் கொடிகாமம் பகுதிக்குச் சென்ற போது பல பஸ்களில் ஆள்கள் ஏற்றி வரப்பட்டதைக் கண்டேன். அதேவேளை நான் சென்ற இடத்தில் இளைஞர்கள் பதுங்கி மறைந்து நின்றனர். பெண்கள் மட்டுமே கூடியிருந்தனர்.

அரசிடம் ஒன்று கூற விரும்புகின்றேன். ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதை விடுத்து வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் விலை உயர்வுகளைக் குறைக்கவும் போராட்டம் நடத்தினால் பிரயோசனமாக இருக்கும். அரச ஊழியர்களையும், அப்பாவிப் பொது மக்களையும் கட்டாயப்படுத்தி ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் பூச்சாண்டி காட்டுவதை அரசு கைவிட வேண்டும்.

✸ ஐக்கிய தேசியக் கட்சி இந்த முறை யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நடத்தப் போவதன் நோக்கம் என்ன?

வடக்கும், தெற்கும் இணை வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை முழு நாட்டுக்குமே பொதுவானது. எனவே தான் யாழ்ப்பாணத்தில் ஐ.தே.க. என்று இல்லாமல் கூட்டு மே தினமாக நடத்தத் தீர்மானித்துள்ளோம். தெற்கில் உள்ள கட்சிகளும் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து தமது ஒன்றுபட்ட சக்தியை அரசுக்குக் காட்ட வேண்டும். அதன் அராஜகத்துக்கு சாவு மணி அடிக்க வேண்டும். தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்று இல்லாமல் நாம் ஒன்று பட்டுள்ளோம் என்பதை உலகுக்குக் காட்ட வேண்டும். அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார் ரணில் விக்கிரம சிங்க. ✸

# மனமும் உடலும்

மனம் நன்றாக இருந்தால் உடம்பும் நன்றாக இருக்கும். உள்ளம் ஆரோக்கியமாக இருப்பவர்களுக்கு உடம்பும் ஆரோக்கியமாக இருக்கும். உள்ளத்தில் தைரியமும் தெம்பும் மகிழ்ச்சியும் இருந்தால், நோயும் சோர்வும் அணுகுவதில்லை. நாம் மனம் வெறுத்துப் போய் இருந்தால் எமக்கு நோய் வருவதற்கான சந்தர்ப்பமும் அதிகம்.

இரண்டு பேருக்கு ஒரே விதமான நோய். அவர்களில் ஒருவர் நிறையவே மனத் தைரியம் உள்ளவர். இன்னொருத்தர் மனத் தெம்பு அற்றவர். இந்த இரண்டு பேருக்கும் ஒரே விதமான மருந்தைக் கொடுத்தார்கள் மருத்துவர்கள்.

மனத்தெம்பு உள்ளவருக்கு சுலபமாக நோய் குணமாகிவிட்டது. இன்னொருத்தருக்கு காலதாமதம் ஆகிவிட்டது. மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் பல விதமான சோதனைகளை எல்லாம் செய்து விட்டு, 'வாழ்க்கையின் உண்மைகளை லேசாக எடுத்துக்கொண்டு சிரித்த முகத்துடன் கவலை இல்லாமல் வாழ்பவர்களிடம் நோய்கள் நெருங்குவதில்லை என்ற முடிவைத் தீர்க்கமாக வெளியிட்டார்கள்.

மேரிலாண்டில் இருக்கின்ற மன இயல் ஆராய்ச்சி நிபுணர் கைம்கல்ராப் இதைக் கூறுகிறார்.

இந்த ஆராய்ச்சிக்கும் எலியைப் பயன்படுத்தி சில ஆராய்ச்சிகளைச் செய்தார்கள். எலிகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்தி, ஒரு வகையான எலிகளை அமைதியாக இருக்கச் செய்தார்கள். இன்னொரு வகை எலிகளுக்கு அவஸ்த்தைகளை ஏற்படுத்தினார்கள்.

அமைதியாக இருந்த எலிகளுக்கு நோய் எதிர்ப்புத் திறன் அதிகமாக இருந்தது. அமைதியின்றி இருந்த எலிகள் எல்லாம் தொற்று நோயினால் சீக்கிரமாகப் பாதிக்கப்பட்டு, பல இறந்தும் விட்டன.

எமது உடம்புக்கு ஏதாவது நஷ்டம் எற்படும் போது சில வகையான சுரப்பிகள் மூளைக்கு எச்சரிக்கை கொடுக்கின்றன. அதனால் மூளை விறுவிறுப்பாக வேலை செய்யத் தூண்டப்படுகிறது. அதனால் மூளை தெளிவாகவும் மனதில் கலக்கம் இல்லாமலும் இருக்கக் கூடிய நிலைமையிலே இந்தச் சுரப்பிகள் சரியாக இயங்குகின்றன. அப்படி இல்லாத நிலைமையில் எதிர்ப்புத் திறன் குறைந்து போகின்றது. இது சாதாரண நோய்க்கு மட்டுமன்றி தொற்று நோய்க்கும் பொருந்தும் என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பத்து வருடங்களுக்கு முன்னர் இப்படி கூறியிருந்தால், எல்லோரும் சிரித்திருப்பார்கள். தொற்றுநோய் பரவுவதற்கு உணவு, நீர், காற்று அதன்பின் இவற்றுடன் கூடவரும் தொற்றுக் கிருமிகளால் எற்படக் கூடிய பாதிப்புக்கள் இவையெல்லாம் தான் அடிப்படைக் காரணங்கள் என்று எல்லோரும் கூறியிருக்கிறார்கள்.

அதேபோன்று முதுமை, பலவீனம், உடற்சோர்வு, சத்துணவு இல்லாத நிலைமை இவை கூட தொற்று நோய் பரவக் காரணங்கள் என்று எமக்குத் தெரியும். ஆனால் மனஅமைதி - உள நிறைவு- மனமகிழ்ச்சி இவையெல்லாம் எம்மை இந்த நோய்களின் பாதிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றால் மனச் சலிப்பு, துயரம், மனக்கசப்பு, மன அமைதிக் குலைவு இவை யெல்லாம் இந்த நோய்களின் பாதிப்பைத் தூண்டும் என்று இதுவரைக்கும் எமக்கு யாரும் சொன்னதில்லை.

ஆனால் இப்போது கூறுகின்றார்கள். பிரிட்டனில் சாலிஸ்பரில் என்கின்ற ஓர் உள ஆராய்ச்சி நடந்தது. ஜலதோசம், இருமல், கசம் சம்பந்தமான ஆராய்ச்சி செய்ய நிபுணர்கள் புதிதாக ஒரு உத்தியைக் கையாண்டுள்ளனர். 50 பேரில் 25 பேருக்கு இந்தத் தொல்லையைத் தடுக்கக்கூடிய மருந்து மாத்திரைகள் மட்டும் கொடுத்துள்ளனர்.

இன்னொரு 25 பேரிடம் இந்த மருந்து கொடுத்தும் உங்களுக்கு குணமாகவில்லை என்றால் உங்கள் வயிற்றின் உள்ளே குழாயைச் செலுத்தி ஜீரண நீரை வெளியே எடுத்து சோதனை செய்ய வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்கள். அவ்வளவுதான் மருந்தை உட்கொண்டவர்கள் குணமாகிவிட்டார்கள். பயந்தவர்களுக்கு பாதிப்பு இன்னமும் அதிகமாகிவிட்டது.

எனவே மனக்கவலையும், பயமும் கலக்கமும் உருவாகின்ற போது உடம்பில் இயல்பாக இருக்கக்கூடிய எதிர்ப்புத்திறன் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. இதுவே அந்த ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட முடிவு.

மெய்ஞானம் என்ன சொல்கிறது என்றால், ஒவ்வொரு காரியத்தையும் கடமை உணர்வோடு செய்யும்போது அது எம்மைப் பாதிக்காது. அதனால் மனக் கவலை இல்லாமல் வாழ முடியும் என்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால் எதற்கும் கவலைப்படாதீர்கள். பதவி, பணம், புகழ் இதை நினைத்து வருத்தம் கொள்ளாதீர்கள். அப்படி இருந்து அனுபவித்தால் தான் அதன் அருமை புரியும்.

நகர் சென்று ஒருத்தன் உடம்பு வருத்தத்துக்கு மருந்து எடுத்துக் கொண்டு திரும்பி ஊருக்கு வந்து கொண்டிருந்தான். இருட்டி விட்டது, வழியில் ஒரு சுடுகாடு அதைத் தாண்டி ஊருக்குப் போக வேண்டுமா. அந்த சுடுகாட்டில் பேய் உலாவுவதாக வதந்தி. இவன் இருட்டில் தனியாகப் போகப் பயந்து யாராவது வருவார்களா என்று எதிர்பார்த்து வழியில் உட்கார்ந்திருந்தான். அவன் நினைத்ததைப் போன்று ஒரு துணை கிடைத்தது. ஓர் ஆள் வந்து '' ஏன் உட்கார்ந்து இருக்கிறீர்கள் '' என்று இவனைப் பார்த்துக் கேட்டான்.


''துணைக்கு யாராவது வரட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தேன் '' என்றான்.'' நானும் அந்தப் பக்கம் தான் போகிறேன். சரி வாருங்கள் போகலாம்'' என்றார் மற்றவர் - இரண்டு பேரும் பேசிக் கொண்டு அந்த சுடுகாட்டில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். '' வழியில் இந்தச் சுடுகாட்டில் பேய் நடமாடுவதாக ஊரில் பேசிக் கொள்கிறார்கள்'' என்றான் பயந்தவன். '' அப்படியா எனக்குத் தெரியாதே'' என்றான் துணைக்கு வந்த ஆள்?

''எப்படி உங்களுக்குத் தெரியாமல் இருக்கும்?'' என்றான் பயந்தவன். ''ஏனென்றால் நான் இறந்து இருபது வருடங்களாகி விட்டன''. என்றான் துணைக்கு வந்தவன்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வளன்புரத்தில் புதிய ஆலயத்தில் பழைமை மிக்க புனித சூசையப்பர்



எஸ்.யேசுதாஸ்

இறைவன் மீது மக்கள் கொண்டுள்ள உறுதியான விசுவாசமும் நம்பிக்கையுடன் செய்யும் வழிபாடுகளும் அவர்களுக்கு பல்வகை நிறைவுகளையும் ஆசிகளையும் பாதுகாப்பையும் வழங்குகின்றன. இந்த வகையான ஆன்மிக வழிகள் மக்களை நல்வழிகளில் நெறிப்படுத்தி இறைவனுக்கும் சமுதாயத்துக்கும் உகந்த பிரசைகளாக மிளிர கைகொடுக்கின்றன.

இவ்வாறு பல வளங்களை வழங்கி மனிதரை தன்பால் ஈர்க்கும் இறைவனுக்கும் அவரது தூய வழியில் வாழ்ந்துகாட்டி புனிதர்களாக உயர் நிலையடைந்து திருமறைக்கனிளாகப் போற்றப்படும் புனிதர்களுக்கும் ஆலயங்கள் அமைத்து நன்றியுடன் துதிப்பதில் மனிதப் பிறவிகள் மனநிறைவடைகின்றன.

இந்த வகையில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் கடற்கரைப் பகுதியில் குருமடங்கள் சென்.யோசப் பாடசாலை, முதியோர் இல்லம் போன்ற அமைப்புக்கள் இயங்கி வரும் சூழலில் பல நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த புனித சூசையப்பர் ஆலயத்தில் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் வீற்றிருந்து அருள் மழை பொழிந்து வருகிறார்.

இந்த ஆலயம் அமலமரித் தியாகிகள் சபைப் பராமரிப்பில் இருந்த போதிலும் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து கொழும்புத்துறை வளன்புரம் கிராம கத்தோலிக்க மக்களின் பங்குக் கோயிலாகவும் இருந்து வருகின்றது. இற்றைக்கு 5 தசாப்தங்களுக்கு முன்னர் தொழிலாளரின் தந்தையாகிய சூசையப்பர் ஆலயத்தில் இருந்து மேதினத்தில் வருடாந்தம் புனிதரின் திருச் சொரூபத்தைத் தாங்கிய பேரணி றெக்கிளமேசன் மைதானத்தைச் சென்றடைந்து வழிபாடுகளும் தொழிலாளர்களை ஆசீர்வதிக்கும் நிகழ்வும் நடைபெற்றன. இதுவே அந்தக் காலத்தில் இடம்பெற்ற பெரிய மே தின நிகழ்வாகும். அத்துடன் இந்த ஆலயம் குருக்களின் உருவாக்கலிலும் முக்கிய பங்கு வகித்து வந்தது.

இவ்வண்ணம் பழம் பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம் சிதைவடைந்து வருவதனாலும், அமலமரிச் சபைக்கென புதிய ஆலயம் அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமையாலும் வளன்புரம் மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு தனிக்கோயில் உருவாகுவதே சிறந்தது என்பதனாலும் புதிய கோயில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு வளன்புரம் பகுதியில் புதிதாக சூசையப்பர் ஆலயம் கட்டப்பட்டு இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை புதிய ஆலயத்தை அபிஷேகம் செய்து திறந்து வைக்கவுள்ளார்.

புதிய ஆலயம் ஒன்றை மக்கள் வாழும் பகுதியில் அமைப்பதே குருமடத்தினதும் பங்கு மக்களினதும் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

ஆரம்பகால ஆலயங்களில் ஒன்றாக இந்த ஆலயம் விளங்குகின்ற போதிலும் இந்தப் பகுதியில் 1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் கத்தோலிக்க மக்கள் குறைவாகவே வாழ்ந்து வந்தனர். பழைய ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக யாழ். மேற்றிராசனத்துக்குச் சொந்தமான நீண்டு பரந்த நிலப்பகுதி சிறு பற்றைக் காடுகளுடன் காணப்பட்டது. இது சுவாமி வளவு என அழைக்கப்பட்டது.

யாழ். ஆயராக இருந்த எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை 1970 ஆம் ஆண்டு இந்த நிலப் பகுதியை கத்தோலிக்க மக்களுக்கு குறைந்த விலையில் விற்பதற்கு முன்வந்தார். 75 இற்கும் மேற்பட்டவர்கள் காணித்துண்டுகளை வாங்கிக் குடியேறினர். புனித வளனாரின் (சூசையப்பர்) பகுதியில் அமைந்த கிராமத்துக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த பண்டிதர் ஞானப்பிரகாசம் என்பவரினால் வளன்புரம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

சுதேச குருக்களின் உருவாக்கத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த குருமடங்களின் தேவை தோன்றியமையால் இந்த மக்கள் குடியிருப்புக்களை அண்டிய யாழ்.கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான காணிகளில் சவேரியார் குருமடம், அமலமரித்தியாகிகள் குருமடம், அமலஉற்பவம் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. இந்த அமைப்புக்கள் இந்தப் பகுதியில் குடியேறிய மக்களின் ஆன்மிக, சமூக, வளர்ச்சிகளில் அக்கறையுடன் செயற்பட்டன.

ஆயினும் இவர்கள் வழிபடுவதற்கும் ஆன்மிக கத்தோலிக்க கடமைகளை நிறைவேற்றவும் ஆலயம் ஒன்று இல்லாமையால் பழைய ஆலயத்தில் இந்தப் பகுதி மக்கள் இணைக்கப்பட்டு 1975 ஆம் ஆண்டு பாஷையூர்ப் பங்கின் நிர்வாகத்தின் கீழ் உபபாங்காகச் செயற்படத் தொடங்கியது.

குருமடத்தின் சிற்றாலயமாகவும் மக்களின் பங்குக் கோயிலாகவும் ஓர் ஆலயத்தைப் பயன்படுத்துவது காலப்போக்கில் சிரமமாகக் காணப்பட்டது. ஆலயம் சிதைவடையத் தொடங்கியமையும் இரண்டும் வெவ்வேறாக இயங்க வேண்டிய கட்டாயத்தை உணர்த்தியது.

புதிய ஆலயம் ஒன்றை மக்கள் வாழும் பகுதியில் அமைப்பதே குருமடத்தினதும் பங்கு மக்களினதும் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என அருட்தந்தை எட்வின் வசந்தராஜா அடிகள் வழங்கிய ஆலோசனைக்கமைய அருட்திரு ஜீவாபோல் அடிகளாரின் வழிகாட்டலில் புதிய ஆலயம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் ஆசிரியர் றொ.யோசப் என்பவருக்குச் சொந்தமான காணி இனங்காணப்பட்டுக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டது. அவரது மகள் சாந்தி மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு யாழ். ஆயரிடம் காணிக்கான உறுதிப்பத்திரத்தை வழங்கினார்.

நீதிமானாகவும் திருக்குடும்பத்தின் தலைவனாகவும் குடும்பங்களின் பாதுகாவலராகவும் விளங்கும் புனித சூசையப்பருக்கு அவரது திருநாளான 19.03.2006 ஆம் ஆண்டு வளன்புரம் பகுதியில் புதிய ஆலயத்துக்கான அடிக்கல்லை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நட்டு வைத்தார்.

அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் ஆலய வரை படத்தைத் தயாரித்திருந்தார். ஆனால் நாட்டின் அசாதாரண நிலைகளால் தடைப்பட்டிருந்த கட்டடப் பணிகள் பாஷையூர் பங்குத் தந்தையாகப் பொறுப் பேற்ற அருட்திரு எ.ஜே. யாவிஸ் அடிகளாரினால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அவரது மதி நுட்பம் வாய்ந்த அணுகுமுறைகளும், ஆலோசனைகளும் ஆலயம் உயர்ந்தெழ உறுதுணையாக அமைந்தது. உள்ளூர் மக்கள், புலம் பெயர் பங்கு மக்கள், பாஷையூர் மக்கள் மற்றும் பரோபகாரிகள் விசேடமாக யாழ். ஆயர் ஆகியோரின் திருப்பங்களிப்பும் கிடைத்தது.

யாவிஸ் அடிகள் கிளி. முல்லை மறைக்கோட்ட முதல்வராகச் சென்றதையடுத்து நிர்மாணப் பணிகளில் தொய்வுநிலை ஏற்பட்டது. பழைய ஆலயத்தை இடித்து அமலமரித்தியாகிகள் சபைக்குரிய சிற்றாலயம் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் புதிய ஆலயத்தை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டிய அழுத்தம் ஏற்பட்டது.

தற்போதைய பங்குத் தந்தை அருட்திரு ஜோய் பேடினன் அடிகளின் முயற்சியால் பிரதான பகுதிகளின் கட்டுமானங்கள் நிறைவு செய்யப்பட்டு இந்தமுறை திருவிழா புதிய ஆலயத்தில் நடைபெறுகிறது. போட்டிக்கோ மண்டபம் விறாந்தைகள் மற்றும் வர்ணப் பூச்சு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. பண நெருக்கடியில் இருந்து நிவாரணம் கொடுக்க வல்ல புனிதரின் ஆலய தொடர்பணிகளுக்குத் தாராள உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கட்டட ஒப்பந்தக்காரர் பாலாவினால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்துக்கான ஆலோசனைகளை அருட் தந்தையர்களான யாவின்சு, அன்ரனிதாஸ், ராஜசிங்கம், இரவிச்சந்திரன் ஆகியோர் வழங்கி பங்களித்து வருகின்றனர். 2008 இல் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலையும் ஆலய வளாகத்தில் இயங்கி வருகின்றது. ✱

### மே தினக் கூட்டம்

# கூட்டமைப்புடன் இணைந்து ஐ.தே.க. செயற்படத் தீர்மானம்

### கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 19

இந்த ஆண்டு மேதின நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்று ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள தீர்மானத்துக்கு அந்தக் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களிலும் பெரும்பாலானோர் இந்த மேதினக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

கட்சியின் மேதின நிகழ்வு சம்பந்தமான குழு கடந்த 15 ஆம் திகதி சிறிகொத்தவில் கூடியபோதே இவ்வருட மேதினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் சார்பில் போராடும் கட்சி என்பதால் அந்தக் கட்சியுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

இதேவேளை ஐ.தே.கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்தும் இந்த நிகழ்வில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தமது கட்சி இந்த நாட்டில் வாழும் சகல சமூகத்தினருடனும் ஒன்றிணைந்து செயற்படும். அதற்கேற்ப இம்முறை மே தினக் கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தப் போவதில் தவறில்லை என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் சார்பில் போராடும் ஒரு தமிழ்க்கட்சி என்பதால் அந்தக்கட்சியுடன்இணைந்து யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை நடத்துவதில் ஐ.தே.க. முனைந்து நின்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## அரசியல்வாதிகளுக்கு தனியான சட்டமில்லை

### பொலிஸ் திணைக்களம் தகவல்

கொழும்பு, மார்ச் 19

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியான வீதிப் போக்குவரத்து சட்டங்கள் இல்லை என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அனைவருக்கும் ஒரே விதமான சட்டங்களையே பின்பற்ற வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறியோ, அல்லது அதிக வேகமாகவோ, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் பயணம் செய்ய முடியாது. வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறிச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கு எதிராகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் அமைச்சர்களின் மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி பொருளாதாரத்தைப் பாதிக்கும்

### மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும். இந்த ஆண்டில் சுமார் 8 வீத பொருளாதார வளர்ச்சியை ஈட்ட முடியும் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டில் எதிர்பார்த்தளவு பொருளாதார வளர்ச்சியை ஈட்ட முடியாது. தற்போது 7.2 வீதமானளவு பொருளாதார வளர்ச்சியை மட்டுமே ஈட்டக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றம், கடன் சுமை அதிகரிப்பு, ஏற்றுமதி வர்த்தக வீழ்ச்சி போன்றவற்றால் பொருளாதார வளர்ச்சி குறைவடையக் கூடும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது நாட்டின்பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## இரத்தினபுரியில் மாணிக்கக்கல் படிமம்

கொழும்பு, மார்ச் 19

இரத்தினபுரி, வெரலுக்க பிரதேசத்தில் மாணிக்கக்கல் படிமம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரதேசவாசிகள் வழங்கிய தகவலை அடுத்து இதனை அடையாளங் கண்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை மேற்கொண்ட பரிசோதனையின்போது 100 மீற்றர் வரையான பிரதேசத்தில் இரத்தினக்கல் படிமம் இருப்பதாக அறியப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையினர் அடங்கிய குழு ஒன்று குறித்த பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வழங்கும் தகவலை அடுத்தே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



கொழும்பிலுள்ள பங்களாதேஷ் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி நடைபெற்றது.

## பல்கலை. தகைமையுடன் 1,300 பேர் சிறையில்

கொழும்பு, மார்ச் 19

உயர்தர மற்றும் பல்கலைக்கழக கல்வித் தகைமையுடைய 1300 பேர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் 1353 கைதிகள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் எனவும், 5336 கைதிகள் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

நாட்டில் மொத்தமாக 32128 கைதிகள் தண்டனை அனுபவித்து வருவதாகவும் இதில் 2848 கைதிகள் எதுவித கல்வித் தகைமையும் அற்றவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ச)

## குடிசன மதிப்பீட்டு பணி 85 வீதம் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 19

கடந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுப் பணிகளில் 85 வீதமானவை நிறைவடைந்துள்ளதாகக் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குடிசன மதிப்பீடு இன்று திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டு பணிகளை இன்று 100 வீதம் நிறைவுக்குக் கொண்டுவரவுள்ளதாக் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## இனக்கலவரம் ஏற்பட சம்பிக்கவே பொறுப்பு

### அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மார்ச் 19

இலங்கையில் மீண்டுமொரு இனக்கலவரம் ஏற்படுமாகவிருந்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், அவர் அங்கம் வகிக்கும் அரசுமே பொறுப்பேற்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் 19ஆவது மனிதவுரிமைக் கூட்டத் தொடரில், இலங்கைக்கெதிராக அமெரிக்காவால் கொண்டுவரப் படவுள்ள பிரேரணை, நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ள கருத்துக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

காலம் காலமாக இலங்கையில் உள்ள தமிழர்கள் மீது இனக்கலவரத்தை தூண்டிவிட்டவர்கள் ஆட்சிசெய்த அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தான் என்பது அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறுதான் கடந்த 1956, 1983ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் மீதான இனக்கலவரத்தை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் அப்போதைய அரசில் அங்கம் வகித்த அமைச்சர்களும் அரசும்தான்.

ஒருபோதும் சிங்கள மக்களோ அல்லது வேறு இன மக்களோ தமிழர்கள் மீதான தாக்குதல்களுக்கு காரணமாக இருந்திருக்கவில்லை. எனவே இன்று மீண்டும் தமிழர்கள் மீது சிங்களவர்களை தூண்டிவிட்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் அரச அமைச்சர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளமை கண்டிக்கத்தக்கது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரச நிர்வாக சேவைப் பரீட்சை இவ்வருடம் முதல் ஜூன் மாதத்தில்

### அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானம்

கொழும்பு, மார்ச் 19

அரச நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையை இந்த வருடம் முதல் ஒவ்வொரு வருடத்திலும் ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய இந்த வருடத்துக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ளதாக அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜீ.பீ.அபேகோன் தெரிவித்தார்.

அரச நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

> அரச நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களுக் கேற்ப பரீட்சையில் சித்திபெறுபவர்கள் நியமிக்கப் படவுள்ளனர்.

அண்மையில் அரச நிர்வாக சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட 270 பேர் தற்சமயம் பயிற்றுவிக்கப்படுவதாகவும் தொடர்ந்து நடக்கவுள்ள பரீட்சைகளில் சித்தியடைபவர்களைக் கொண்டு ஏனைய வெற்றிடங்கள் நிரப்பப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச - 22)

## புகைத்தலால் 54 லட்சம் பேர் மரணம்

புகைப்பிடிக்கும் பழக்கத்தால் உலகில் ஒவ்வொரு ஆறு செக்கன்களுக்கு ஒருவர் மரணமாவதாக ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

உலகில் வருடாந்தம் 54 லட்சம் பேர் புகைப்பிடித்தலால் இறக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## தவறிவிட்டது

இலங்கை நாயகி அம்மன் கோயில் பருத்தித் துறை வீதி, நல்லூர் எனும் முகவரியைச் சேர்ந்த சதாசிவசர்மா ரங்கநாதசர்மா என்பவரின் தே.அ. அட்டை (603572505V), மற்றும் மோட்டார் வாகனசாரதி அனுமதிப் பத்திரம், N.S.B ATM, மக்கள்வங்கி ATM காட் என்பன அடங்கிய பேர்ஸ் கல்வியங்காட்டு சந்திக்கும் சட்டநாதர் கோயில் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை நாயகி அம்மன் கோயில், TP: 0712123714
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(15842)(6,9,12)

## கண்ணீர் அஞ்சலி



எமது நயினாதீவு முச்சக்கரவண்டி சங்கத்தின் உறுப்பினரான **மு. மகாலிங்கம்** அவர்களின் பாசமிகு தாய்

*அமரர் முத்தையா ஞானேஸ்வரி*

(நயினாதீவு ஸ்ரீபிடாரி அம்பாள் அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகர்த்தாவும் சமூக சேவகியும் எட்டாம் வட்டாரம் நயினாதீவு)

அவரகளின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நயினாதீவு
தனியார் முச்சக்கரவண்டி
உரிமையாளர் சங்கம், நயினாதீவு

## மணமக்கள் தேவை

1. கௌரவ குடும்பம் 1977 ஆம் ஆண்டு பிறந்த அழகிய ஆசிரியை கிரகபாவம் 18 3/4 சுவாதி நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற பெண்ணுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் படித்த மணமகன் தேவை.

2. 1981 ஆம் ஆண்டு பிறந்த பொறியியலாளராக லண்டனில் தொழில் புரியும் கிரகபாவம் 27 மக நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

**தொடர்பு: 0771917936**

(12700) (6,9,12)

## பணியாளர் தேவை
### லக்சுமி றேடர்ஸ், டச்சு வீதி, சாவகச்சேரி

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் தேவை. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடர்பு : 077 2250149

(C/2956))(6-9-8)


# DSI டயர் மற்றும் டியூப்

## சில்லறை விலைப்பட்டியல் 2012.03.19 இருந்து

### மிதிவண்டி டயர்

| மாதிரிகள் | | சில்லறை விலை ரூ. |
|---|---|---|
| STANDARD NORMAL | 28" * 1 1/2" | 700.00 |
| HEAVY DUTY YELLOW LINE | 28" * 1 1/2" | 765.00 |
| STANDARD SCHOOL MATE | 28" * 1 1/2" | 580.00 |
| STANDARD NO PUNCTURE | 28" * 1 1/2" | 660.00 |
| LEISURE RIDING -GREEN LINE | 700 * 35 | 530.00 |
| SPORT | 26" * 1 3/8" | 700.00 |
| SPORT SCHOOL MATE | 26" * 1 3/8" | 580.00 |
| RACING GUM WALL | 27" * 1 1/4" | 690.00 |
| RACING FULL BLACK | 27" * 1 1/4" | 670.00 |
| RACING | 27" * 1 3/8" | 725.00 |
| RACING | 700 * 20/22/23 | 690.00 |
| MOUNTAIN GUM WALL | 26" * 2.125"/1.9"/1.75" | 730.00 |
| MOUNTAIN FULL BLACK | 26" * 2.125"/1.9"/1.75" | 715.00 |
| MOUNTAIN GUM WALL | 26" * 2.3" | 730.00 |
| MOUNTAIN FULL BLACK | 26" * 2.3" | 715.00 |
| MOUNTAIN SINGLE STRIP | 26" * 2.125"/1.9"/1.75" | 730.00 |
| MOUNTAIN DOUBLE STRIP | 26" * 2.125"/1.9"/1.75" | 735.00 |
| SPORT | 26" * 1 1/2" | 620.00 |
| MOUNTAIN | 24" * 2.125"/1.9"/1.75" | 660.00 |
| SPORT | 24" * 1 3/8" | 645.00 |
| SPORT | 24" * 1 1/2" | 645.00 |
| B. M . X | 20" * 2.125"/1.9"/1.75" | 580.00 |
| B. M . X | 16" * 2.125"/1.9"/1.75" | 505.00 |
| B. M . X | 14 " * 1 3/8" * 1 5/8" | 425.00 |
| B. M . X | 12.5" * 1.75" * 2 1/4" | 385.00 |

### மிதிவண்டி டியூப்


| மாதிரிகள் | சில்லறை விலை ரூ. |
|---|---|
| **JOINTED TUBE** | |
| 28" * 1 1/2" STANDARD | 290.00 |
| 26" * 1 3/8" SPORT | 290.00 |
| 26" * 1 1/2" | 290.00 |
| 24" * 1 1/2" | 275.00 |
| 24" * 1 3/8" | 295.00 |
| 22" * 1 3/8" | 290.00 |
| 14" * 1 3/8" | 205.00 |
| 12" * 1 1/2" | 180.00 |
| **MOULDED TUBE( SEAMLESS)** | |
| 28" * 1 1/2" STANDARD | 275.00 |
| 26" * 1 3/8" SPORT | 275.00 |
| 27" * 1 1/4" RACING | 295.00 |
| 26" *1.75" /1.9"/ 2.125" | 295.00 |
| 26"*1.75"/1.9"/2.125" BPM (67.5mm) | 480.00 |
| 26"*1.75"/1.9"/2.125" BAM (48 mm) | 385.00 |
| 26" * 2.3" | 350.00 |
| 24"*1.9"/2.0"/2.125" | 290.00 |
| 20"*1.9"/2.0"/2.125" | 275.00 |
| 16"*1.9"/2.0"/2.125" | 265.00 |
| 14" * 1 3/8" BAM | 245.00 |
| **DUTCH TUBE (SEAMLESS)** | |
| 700 * 35 NDAC | 290.00 |
| 700 * 19/23 BPAC | 470.00 |

### மோட்டார் சைக்கில் டயர்

| மாதிரிகள் | | சில்லறை விலை ரூ. |
|---|---|---|
| **MC TYRES** | | |
| 350 * 8 - 4 PR | SRI/MC- 14 | 2,300.00 |
| 300 * 10 - 4 PR | SRI/MC- 30 | 2,055.00 |
| 350 * 10 - 4 PR | SRI/MC- 05 | 2,385.00 |
| 350 * 10 - 4 PR (NEW) | SRI/MC- 20 | 2,540.00 |
| 100 / 90 * 10 - 4 PR | SRI/MC- 21 | 2,505.00 |
| 275 * 14 - F - 4 PR | SRI/MC- 04 | 2,340.00 |
| 275 * 14 - R - 4 PR | SRI/MC- 03 | 2,340.00 |
| 250 * 16 - (F & R) - 4 PR | SRI/MC- 27 | 2,015.00 |
| 300 * 16 - R - 4 PR | SRI/MC- 10 | 3,180.00 |
| 350 * 16 - R - 4 PR | SRI/MC- 09 | 3,430.00 |
| 110/ 90*16- 6 PR MEGA SPORT | SRI/MC- 34 | 5,885.00 |
| 225 * 17 - F - 4 PR | SRI/MC- 07 | 1,995.00 |
| 250 * 17 - F - 4 PR | SRI/MC- 02 | 2,175.00 |
| 250 * 17 - R - 4 PR | SRI/MC- 01/03 | 2,175.00 |
| 275 * 17- F - 4 PR - RIB | SRI/MC- 31 | 2,470.00 |
| 275 * 17- R - 4 PR | SRI/MC- 37 | 2,470.00 |
| 300 * 17 - F - 4 PR | SRI/MC- 02 | 2,935.00 |
| 300 * 17 - R - 4 PR | SRI/MC- 01 | 2,935.00 |
| 300 * 17 - R - 4 PR X MILE | SRI/MC- 35 | 3,350.00 |
| 90/ 90*17- F - 6 PR SAFE RUNNER | SRI/MC- 32 | 3,960.00 |
| 100/90*17 - R -6 PR MASTERGRIP | SRI/MC- 33 | 4,735.00 |
| 250*18 - F - 4 PR | SRI/MC- 08 | 2,260.00 |
| 275 * 18 - F - 4 PR | SRI/MC- 15 | 2,790.00 |
| 275 * 18 - F - 4 PR SUPERIOR | SRI/MC- 31 | 2,680.00 |
| 275 * 18 - R - 4 PR | SRI/MC- 06 | 2,525.00 |
| 300 * 18 - R - 4 PR | SRI/MC- 11 | 2,750.00 |
| 300 * 18 - R - 4 PR " NG " | SRI/MC- 18 | 2,880.00 |
| 300 * 18 - R - 4 PR SUPERIOR | SRI/MC- 28 | 3,250.00 |
| 300 * 18 - R - 4 PR SUPER PLUS | SRI/MC- 36 | 3,460.00 |
| 325 * 18 - R - 4 PR SUPERIOR | SRI/MC- 24 | 3,585.00 |
| 1.10/1.00*18 R -4 PR(MOTOR CROSS) | SRI/MC- 17 | 8,075.00 |
| 410 * 18 - R - 4 PR - TRAIL | SRI/MC- 12 | 6,780.00 |
| 275 * 21 - F - 4 PR - TRAIL | SRI/MC- 13 | 4,355.00 |
| 80/1.00*21 F- 4 PR (MOTOR CROSS) | SRI/MC- 16 | 5,480.00 |
| **TUBE LESS TYRES** | | |
| 90 / 90 * 10 R - 4 PR **SCOOTY** *T/L* | SRI/MC- 39 | 2,900.00 |
| 110/ 90*16 -6 PR *T/L* | SRI/MC- 34 | 6,385.00 |
| 275*17 - 4 PR **MEGASTAR** *T/L* | SRI/MC- 40 | 3,385.00 |
| 90/ 90*17- F - 6 PR *T/L* | SRI/MC- 32 | 4,640.00 |
| 100/ 90*17 R -6 PR **DISCOVERY** *T/L* | SRI/MC- 38 | 5,190.00 |
| 100/ 90*17 R -6 PR **MASTER GRIP** *T/L* | SRI/MC- 33 | 5,070.00 |
| 100 / 90 * 18 R - 4 PR *T/L* | SRI/MC- 25 | 5,020.00 |
| 90 / 90 * 18 F - 4 PR *T/L* | SRI/MC- 26 | 4,510.00 |
| **THREEWHEELER TYRES** | | |
| 400 * 8 - 6 PR | SRI/TW- 01 | 2,180.00 |
| 400 * 8 - SAVIBALA - 6 PR | SRI/TW- 04 | 2,620.00 |
| 400 * 8 - JAWAYA - 6 PR | SRI/TW- 05 | 2,900.00 |
| **LIGHTTRUCK TYRES** | | |
| 450 * 12 - 8 PR | SRI/LT- 01 | 5,445.00 |
| **AGRICULTURE TYRES** | | |
| 500 * 12 - LM - 4 PR | SRI/AGR- 01 | 5,815.00 |
| 500 * 12 - LM - 4 PR STREET | SRI/AGR- 02 | 5,800.00 |
| 600 * 12 - LM - 4 PR | SRI/AGR- 03 | 8,405.00 |

சீ/ச செம்சன் இறப்பர் தொழிலகம் (தனியார்)
ஜினசேன மாவத்தை, மஹர, கடவத.
தொலைபேசி - 011-2926065, 011-2928700
தொலைநகல் - 011-2925064, 011-4816440
மின்னஞ்சல் - *dsityre@dsityre.lk*
இணையத்தளம் - www.dsitire.com

ISO 9001 REGISTERED




## மரண அறிவித்தல்



*செல்லத்துரை சிவஞானம்*

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை சிவஞானம் 16.03.2012 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும் சகுந்தலா தேவியின் அன்புக்கணவரும், கோகிலகீர்த்தன் (மாணவன் யா/ஏழாலை மகாவித்தியாலயம்), துவாரகன் (மாணவன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பார்வதிதேவி (ஆசிரியை யா/ஏழாலை மகாவித்தியாலயம்), புஸ்பராணி, சிவபாதம், சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் தங்கேஸ்வரன், மகேஸ்வரன், ஜெயரூபன், சிவனேசன், சுமதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்திஓடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவன் வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை

(15837)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் அடியில்
01 ★ 04 ★ 2000

அன்னையின் மடியில்
14 ★ 11 ★ 1961

### அமரர்
### சங்கரப்பிள்ளை பாலசிங்கம் (பாலன்)

**திதி:துவாதசி *(19.03.2012)***

உதிரத்தால் எழுதினாலும் - உங்கள்
பாசத்திற்கு உயிர் கொடுக்க முடியாது - அப்பா
வேதனை என்ற சொல்லுக்கு
வரைவிலக்கணம் சொல்லித்தந்த - அப்பா
உங்கள் பிரிவுக்கு - இன்று
ஆனதோ பன்னிரண்டு ஆண்டோ - அப்பா
காலத்தின் கட்டளைக்காக - நீங்கள்
கடவுள் அடிசேர்ந்திரோ - அப்பா
காலமெல்லாம் உங்கள்
ஆசீர்வாதம் வேண்டி நிற்போம் - அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

(15852) (6-9-12)

**குடும்பத்தினர்.**




மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

### இலங்கைக்கு எதிரான தீர்மானம்

# முழுவடிவம் பெற்றால்தான் இந்தியாவின் முடிவாம்

## ஞானதேசிகன் கருத்து

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் முழுவடிவம் பெற்ற பின்தான் இந்தியா முடிவெடுக்கும் என்று தமக்கு இந்தியப் பிரதமர் கூறியுள்ளார் என்ற தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை சபையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சி சார்பில் நாங்கள் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம். இதற்கு அவர் தீர்மானம்முழுவடிவம்பெற்ற பின்னர் முடிவெடுக்கலாம் என்று எங்களிடம் தெரிவித்தார்.

தமிழகத்தில் அனைத்து கட்சிகளும் இதே கருத்தைத்தான் வலியுறுத்தி வருகின்றன. அரசியல் கட்சிகளிடையே உள்ள இந்த ஒற்றுமையைசீர்குலைக்கும் முயற்சியில் சில சமூக விரோத சக்திகள்தற்போது ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வருகின்றன.

கொடும்பாவி என்ற பெயரில் உருவப் பொம் மையைக் கொளுத்துவதும், மத்திய காங்கிரஸ் தலைவர்களை கொச்சைப்படுத்திப் பேசுவதும் இங்கே நடைபெற்று வருகின்றன. இது போன்ற நிகழ்வுகள் ஏற்றுக் கொள்ள முடியாதது. இங்குள்ள சில அமைப்புகள் தீவிரவாத உணர்வாளர்கள் என்ற போர்வையில் பிரச்சினையை திசை திருப்புகின்ற நடவடிக்கையை தொடர்ந்தால் காங்கிரஸ் இதனை அனுமதிக்காது.

அவர்களை முளையிலேயே கிள்ளி எறிய பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தமிழகத்தில் அமைதி நிலவ உதவும் என்பதை தமிழக அரசு உணரும் என்று நம்புகிறேன்- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சமய சந்நிதிகளில்

சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும 26 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழாக்கள் இடம் பெறும்.

அடுத்தமாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திருக் கல்யாணமும் வைரவ சாந்தியும் இடம்பெறும். (வ)

* * *

சாவகச்சேரி, மார்ச் 19

மீசாலை மேற்கு இலந்தைக் கூட கந்தசாமி ஆலய சதுர்த்தி தின லட்சார்ச்சனை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 22 ஆம் திகதிவரை நிறைவு பெறும்.

எதிர்வரும் 22 ஆம்திகதி வியாழக் கிழமை மகாகந்த ஹோமப் பெருவிழாவுடன் ஆறுமுகப்பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் தலைமையில் லட்சார்ச்சனை நடைபெறும். (வ-9)

## இலங்கை வங்கியின் பளைக் கிளை கணினி வலையமைப்பில்

பளை, மார்ச் 19

இலங்கை வங்கியின் பளைக் கிளை இன்று திங்கட்கிழமை தொடக்கம் கணினி வலைப்பின்னலுட னான வங்கிக் கிளையாக இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## நேர்முகப் பரீட்சை

தேசிய இளைஞர் சேவைகள்மன்றத்தினால் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வேலைத் திட்டத்துக்கு யாழ். மாவட்ட இளைஞர் யுவதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த. சாதாரணதரத்தில் ஆங்கிலத்தில் சித்தியடைந் திருப்பதுடன், 29 வயதுக்குட்பட்டவர்களாகவும், இளைஞர் கழகம் மற்றும் நிஸ்கோ அங்கத்துவம் பெற்றிருப்பதுடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வேலைத்திட்டத்துக்குபங்கு கொண்டிருத்தல்போன்றதகைமைகளுடன் உரிய நேரத்துக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)


## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கா.இரவீந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் ஞானமணி இரட்ணசிங்கம் கலந்து கொள்வார். (வ)


## இருபதாம் ஆண்டு நினைவு



மண்ணில்: 31★01 ★1932

விண்ணில்:19 ★ 03 ★1992

கபிரியேல் பிரகாசம்

" உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்''

35 B, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி.

(6-9-12)

அருளப்பு குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

நெதர்லாந்தில் வசிக்கும் யாழ். இந்து உயர் கௌரவ சிறந்த குடும்பப்பின்னணி 1981 இல் பிறந்த உத்தரநட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய் பொறியியலாளர் M.Sc மண மகனுக்கு அதே குடும்ப பின்னணி கொண்ட மணமகள் தேவை.

தொடர்பு: E.mail Ksanush@hotmail.com

(15809)(6-9-8)

## காணி விற்பனை

ஊரெழு மேற்கில் யாழ். பலாலி வீதியி லிருந்து ½ Km இற்குள் பொக்கனை வீதியில் உள்ள கிறிஸ்வத தேவாலய தெற்கு எல்லை யில் அமைந்த 19 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

(15798)(6-9-8) தொடர்பு T.P : 075 0422975

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்
## மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்

மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல. 40, றக்கா லேன், சுண்டிக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களை பெற்று 2012.03.30 ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். எந்திரி செ.மோகனதேவன்

தலைவர்,
பெறுகைக் குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல. 40, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள் : 021 2228091, 0213202638

(C/9805)(6-9-8)

## புத்துணர்ச்சியுடன், புதுமையான, இல்லற வாழ்வுக்கு வனாரி கல்பா




### நீங்கள் இளமைத் துடிப்புடன் செயற்பட ஒரே தீர்வு

பாவனை முறை:
தினமும் இரு முறை இரண்டு தேக்கரண்டிப் பிரமாணம் பாலுடன் பருகவும்.

சகல முன்னணி பார்மசிகளிலும் கிடைக்கும்.

1. மதுஜன் பார்மசி (நெல்லியடி)
2. ஸ்ரீமுருகன் பார்மசி (நெல்லியடி)
3. ஸ்ரீமுருகன் பார்மசி (பருத்தித்துறை)
4. ஜெகன் பார்மசி (யாழ்ப்பாணம்)
5. சிற்றி மெடிக்கல் (யாழ்ப்பாணம்)
6. ரட்ணம் பார்மசி (யாழ்ப்பாணம்)
7. அம்பிகா பார்மசி (சாவகச்சேரி)
8. சாந்தா பார்மசி (கொடிகாமம்)

SKY PHARMA

இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.

(03/01/PP / 10239)

SKYPHARMA THE HERBAL PRODUCT COMPANY

# 35 1/1, Hinniappuhamy Mawatha, Colombo - 13

TEL. + 94 011 2334193

(12681)(2-6-9) CEL. 077 7300432, 077 749 9918.

## வட மாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப் போட்டி-2011

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடா வருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு மேற்படி போட்டிகளை நடத்தி வருகின்றது. இப் போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.

01. நூல்கள் யாவும் 2011 ஜனவரி 01 ஆம் திகதிக்கும் 2011 டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.
02. நூலாசிரியர் வடமாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினை பிறப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி)
03. ஒருவர் எல்லாத்துறை போட்டிகளிலும் பங்குபற்றலாம். நூலின் ஆசிரியர் ஒருவராக மட்டும் இருத்தல் வேண்டும்.
04. நூலின் 04 பிரதிகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. பின்வரும் துறைகளில், போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர் தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக் கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. உயர்கல்வி | 3. பல்துறை | 5. சிறுகதை | 7. நாடகம் |
| 2. ஆய்வும் விமர்சனமும் | 4. கவிதை | 6. நாவல் | 8. சிறுவர் இலக்கியம் |

06. நூலகள் தமிழ் மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்
07. நூல்களை பதிவுத் தபாலின் மூலமாகவோ அல்லது வலயக் கல்விப்பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ நேரடியாக ஒப்படைக்கலாம்.
08. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
09. விண்ணப்ப முடிவு திகதி 2012.04.23 ஆகும். இத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வலயக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். - என்ற முகவரிக்கு

அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

* போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

மேலதிக விவரங்களுக்கு 021-3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.

(C/9173) (6,9,10)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சில விடயங்களில் பதற்றம், படபடப்போடு செயற்பட நேரிட்டாலும் ஆதாயம் கிடைக்கும். குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக வராத பண வரவு ஒன்று வரலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும்.

**இடபம்:** இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று, இன்று நல்ல விதமாக முடியும். வயிறு உபாதைகளைத் தவிர்க்க, கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சிலரிடம் அவசர உதவிகள் பெறலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று, மீண்டும் தலை தூக்கலாம். உங்கள் மீது அன்பு கொண்ட ஒருவரைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** பெரிய அளவில் ஆதாயத்தை எதிர் பார்த்துச் செய்த வேலை ஒன்றில், குறைந்தளவில் பலன் கிடைக்கலாம். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்புடன் நடந்து, அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். சுமுகமாக முடிந்து விடும் என்று நினைத்த பிரச்சினை ஒன்றில், இழுபறி உண்டாகலாம். அயலாரால் தொல்லையுண்டு. பயணத்தடைகள் நேரும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்குத் துணையாக இருப்பீர்கள். உறவினர்கள் சிலரை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். நேரம் காலம் கருதி, சில வேலைகளை உடனுக்குடன் முடிப்பீர்கள். கடந்தகால அனுபவங்களை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**சிங்கம்:** எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. புதியவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். உடல் உபாதைகளால் ஏற்பட்ட தொந்தரவுகள் விலகி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். தந்தை வழி உறவுகள் மூலம் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். பொருள் வரவு உண்டு.

**கன்னி:** சில வேலைகளை சரியான நேரத்துக்குச் செய்யாமல், காலதாமதமாகச் செய்யலாம். பிள்ளைகள் வழியிலோ அல்லது நண்பர்கள் வழியிலோ கணிசமான பணத்தைச் செலவிடலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உறவினர் ஒருவருடன் பழைய கதைகளைப் பேசி மகிழ்வீர்கள். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

**நாளை**

பங்குனி 07 செவ்வாய்க்கிழமை 20.03.2012
திதி: திரயோதசி மு.இ 06.53வரை
நட்சத்திரம்; அவிட்டம்
சுபநேரம்: 10.47- 12.17 வரை,
ராகு காலம்: 03..17 - 04.47 வரை

**துலாம்:** எதிர்பாராத செய்திகளைக் கேட்கலாம். குடும்பரீதியான சில விடயங்களை நினைத்து, அதிக பயம் கொள்வீர்கள். நீண்ட நாள்களாகத் தொடர்பில்லாமல் இருந்த உறவினர், ஒருவருடன் திடீரெனப் பேச நேரிடலாம். மன அமைதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவேண்டும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல், நீங்களே செய்ய முற்படுவீர்கள். அதிகவிலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் விமர்சனப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உடன் பிறந்தவர்கள் மூலம் சில காரியங்கள் நடக்கலாம்.

**தனுசு:** உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள். பண விவகாரங்களில் சிலரிடம், கண்டிப்பாக கடுமையாக நடந்து கொள்வீர்கள். பல நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டும்.

**மகரம்:** ஆறுதலான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஒரு வகையில் வந்த பணத்தை மற்றொரு வகையில் செலவு செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கலாம். சிலரிடம் கோபம், வேகமாகப் பேச நேரிடலாம். எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம்.

**கும்பம்:** குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து, சில காரியங்களைச் செய்வீர்கள். திட்ட வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதம் ஏற்படலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க, கணிசமான பணம் செலவாகும். ஆதாயமில்லா அலைச்சல் உண்டு.

**மீனம்:** தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கலாம். சில வேலைகளை காலதாமதமாக ஆரம்பித்தாலும் சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாகபொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைக்கும். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 8 | 1 | 4 | | |
| 5 | | 7 | 9 | | 2 | | | |
| | 4 | 2 | | 7 | | | | 1 |
| 4 | 6 | | | | | | 2 | |
| 1 | | 8 | | 6 | | 7 | | 4 |
| | 2 | | | | | | 8 | 6 |
| 6 | | | | 2 | | 3 | 5 | |
| | | | 3 | | 5 | 6 | | 8 |
| | | 5 | 8 | 1 | | | | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 8 | 7. | 9 | 3 | 2 | 6 | 5 |
| 6 | 7 | 3 | 2 | 5 | 4 | 8 | 1 | 9 |
| 2 | 5 | 9 | 1 | 6 | 8 | 4 | 7 | 3 |
| 7 | 8 | 5 | 4 | 2 | 1 | 9 | 3 | 6 |
| 9 | 3 | 4 | 6 | 7 | 5 | 1 | 8 | 2 |
| 1 | 6 | 2 | 8 | 3 | 9 | 7 | 5 | 4 |
| 8 | 9 | 6 | 3 | 4 | 7 | 5 | 2 | 1 |
| 5 | 2 | 1 | 9 | 8 | 6 | 3 | 4 | 7 |
| 3 | 4 | 7 | 5 | 1 | 2 | 6 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், 'கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளராக
இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள முன்னாள்
பருத்தித்துறைப் பிரதேச செயலாளர்
இராஜரட்ணம் வரதீஸ்வரன்
அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். மேலும்
இலங்கை நிர்வாக விசேட தரத்துக்குப் பதவியுயர்வு
பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு,
மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று உயர்வடைய
வேண்டுமெனப்
பிரார்த்திக்கின்றோம். நல்வாழ்த்துக்கள்.
வடிவேலர் மணிமண்டபம், அல்லையம்பதி.
(சி/9143) (2-6-9)


வீட்டுக்கு, ஹோட்டலுக்கு
நாடு முழுவதும் போக்குவரத்து
மொத்தத்துக்காக விஷேட விலைக்கழிவு
புஃவே செட்
கரண்டிகள்
www.titusstores.com
டயிடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை 2439422 லிபர்டி ப்ளாஸா

பணிநிலை வேண்டுகை
நேரச்சு இயக்குனர்
Offset Machine Minder
Davidson 701
தாள் வெட்டுனர்
Paper Cutter Man
நேரச்சு பழகுனர்கள்
18–24 வயதுக்குட்பட்டவர்கள்
19, 20, 21-03-2012 ஆகிய திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 2 மணி வரை நேரில் வரவும்
கரிகணன் பிறிண்டேர்ஸ்
424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துகிறோம் பிரார்த்திக்கின்றோம்

வடமராட்சி தெற்கு, மேற்கு
பிரதேச செயலாளராக
நீண்டகாலம் சிறப்பாகப்
பணி புரிந்து, அகில
இலங்கை மட்டத்தில் எமது
பிரதேசத்தை வெற்றியடையச்
செய்து அடையாளப்படுத்திய
தோடு அல்லையம்பதியில்
ஆலயச் சிறப்புக்களுக்கும்,
அறநெறிப் பாடசாலையின்
தோற்றத்துக்கும்
மூலகாரணராக விளங்கிய
சிவலிங்கம் சத்தியசீலன்
அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.
அத்தோடு வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகப் பதவி
உயர்வு பெற்றமையையிட்டு அவருக்கு எமது மனமார்ந்த
நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அவர்
மேன்மேலும் சிறப்புக்கள் பல பெற்று நீடூழி வாழ
வாழ்த்துவதோடு பிரார்த்திக்கின்றோம்.
வடிவேலர் மணிமண்டபம், அல்லையம்பதி.
(சி/9142) (2-6-8)

Star Optical & Dental Works
கிளிநொச்சியில் புதியதோர் உதயம்...
19.03.2012 திங்கட்கிழமை 12.30 மணிக்கு
கோலாகலமான திறப்புவிழா
நவீன முறையில் பற்கள் கட்டியும்,
மிதப்புப் பற்களுக்குக் கிளிப்பும் செய்து கொடுக்கப்படும்.
ஸ்ரார்
பல் மூக்குக் கண்ணாடியகம்
இலவச கண் பரிசோதனை

உங்கள் கண்களை இலகுவான முறையில் பரிசோதனை செய்து குறுகிய நேரத்தில் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
தொ.பேசி: 0750427284
Star Optical & Dental Works
A9 வீதி, கச்சேரி முன்பாக, கிளிநொச்சி.

# இலங்கை விவகாரத்தில் டில்லிக்கு பெரும் பொறுப்பு

## சுமத்துகிறது இந்து பத்திரிகை

கொழும்பு, மார்ச் 19

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்குபற்றக் கூடாதென்றோ, எதிராக வாக்களிக்கவேண்டுமென்றோ இந்தியா எடுக்கும் முடிவு, புதுடில்லிமீது பெரும் பொறுப்பைச் சுமத்திவிடும். இந்தப் பொறுப்பு மனித உரிமை நடவடிக்கையில் மஹிந்த அரசுக்கு இந்தியா கடும் அழுத்தத்தைக் கொடுக்கத் தூண்டும்.

அமெரிக்காவின் பிரேரணையை ஆதரிக்கக் கூடாது என்ற இந்தியாவின் முடிவு, மனித உரிமைகள் மீதான இலங்கையின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றது எனக் கொள்ள முடியாது. எனவே, இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா ஆதரிக்கின்றது என கொழும்பு எடுத்துக்கொள்ளுமானால் அது பெருந் தவறாகும்.

- இவ்வாறு இந்தியாவில் வெளியாகும் இந்து பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரம் தொடர்பில் அப்பத்திரிகை வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்டப் போரின்போது இழைக்கப்பட்ட உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் இலங்கை இராணுவத்துக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன. இதற்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசை வலியுறுத்தும் அமெரிக்காவின் பிரேரணை மீது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடினமான முடிவை எடுப்பதற்கான நிலைப்பாட்டை இந்தியா எதிர்நோக்குகின்றது.

ஒரு வழியில் சுலபமாக இந்த முடிவை எடுத்துவிடலாம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் ஒரு நாட்டின் மீதான பிரேரணைகளுக்குப் புது டில்லி ஆதரவு அளிக்கக்கூடாது.

எப்படியிருப்பினும் இலங்கை ஒரு விசேட சவாலை எதிர்நோக் குகின்றது. இலங்கை சிறுபான்மைத் தமிழர்களுடன் நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவிக்கும் விடயத்தில் இலங்கையை வியக்கவைக்கும் வழியைப் புது டில்லி தேர்வுசெய்தது. இதில் பூர்வீக பந்தபாசத்தை விட இராஜதந்திரமே பளிச்சிட்டது.

இந்த வழி குறிப்பாகத் தமிழர்களின் கேள்விக்கு அரசியல் தீர்வை எட்டும் விடயத்தில் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட பலனை அளிக்கவில்லை. இது பகிரங்கமான ஒரு விடயம்.

இராஜதந்திரம் பலிக்காவிட்டால், மனித உரிமைகள் பேரவைப் பிரேரணை இலங்கை அரசை சரியான வழியில் இட்டுச்செல்லுமா என்பதை இந்தியா மிகக் கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும். இந்தச் செயற்பாட்டில் இலங்கையை இப்பிரேரணை நாணமுறச் செய்துவிடும் என்பதில் மேற்கத்தேய சக்திகள் நம்பிக்கை கொண்டுள்ளன. உண்மையைக் கூறுமிடத்து உத்தேச கண்டனம் எதிர்மறையாகச் செயற்பட நேர்ந்தால், சிங்களத் தேசியவாதத்துக்கு மேலும் எண்ணெய் வார்ப்பதாகவே அமைந்துவிடும்.

தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் உணர்வுகளைப் பொறுத்தமட்டில் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களின் விவகாரம் ஒருவர் மீது குறை காண்பதற்கான வாய்ப்பை இக்கட்சிகளுக்கு அளிக்கின்றது. இதைத் தவிர வேறொன்றுமில்லை. இதில் தெளிவு தேவை. தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதி நிலைப்பாட்டோடு சரியாக ஒத்திருந்த ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு, 2009 ஆம் ஆண்டில் வெற்றி பெற்ற சமயம் இதே நிலை இருந்ததா என்பதற்குத் தெளிவான சாட்சியம் கிடையாது.

எது எப்படியிருப்பினும், பிரேரணையை ஆதரிக்கக்கூடாது என்ற இந்தியாவின் முடிவு, மனித உரிமைகள் மீது விடுக்கப்படும் ஒரு சவாலாகவே உள்ளது - என்றுள்ளது. (ம)

## பளையில் கட்டடம் அமைக்கத் திட்டம்

பளை, மார்ச் 19

லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் பளைப் பிரதேசத்தில் முதியோர் இல்லம் மற்றும் பொது நூல் நிலையம், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை ஆகியவற்றை உள்ளடக்கிய பெரிய கட்டடம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

கட்டடம் அமைப்பதற்கான காணியை நன்கொடையாகவோ நியாயமான விலையில் வழங்கவோ பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

## மனம் மாற அழைப்பு

தவக் காலம் மனமாற்றத்தின் காலம். மனமாற்றம் என்பது இலகுவானதல்ல. மற்றவர்கள் மாற வேண்டும் என எண்ணுகின்ற அளவுக்கு நாம் மாற வேண்டும் என்று நினைப்பதில்லை. மற்றவர்களின் குறைகளையும் குற்றங்களையும் பெரிதுபடுத்துகின்ற நாம், எமது குறைகளையும் குற்றங்களையும் ஏற்றுக்கொள்வதில்லை. சுய அறிவும் தன்னை ஏற்றுக்கொள்கின்ற ஒருவனால் மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் முடிகின்றது. இதனால் தான் இயேசு.




" உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்."

என்ற இறை வார்த்தை எம்மை சிந்திக்க அழைக்கின்றது. எம்மிலே பெரிய குறைகளை வைத்துக்கொண்டு மற்றவர்களைப் பற்றிக் கதைப்பதிலும் மற்றவர்களின் குறைகளை கண்டு பிடிப்பதையும் தவிர்த்து எம்மையே நாம் உற்றுப் பார்த்தவர்களாக, எம் குறைகளைக் கண்டு ஏற்றுக்கொள்பவர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். இத்தவக்காலத்தில் இறை அன்பிலும், பிறர் அன்பிலும் வளர்ந்து நம்பிக்கை கொண்டவர்களாக வாழ முயல்வோம்.

**அருட் சகோ. நிசாந்தி வேதநாயகம், உடுவில்.**

# ஆயுள்வேத கிராம வைத்தியம் தீவகத்தில் அவசியம் தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 19

தீவகப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஆயுள்வேத கிராம வைத்தியம் - மூலிகை தோட்ட அபிவிருத்தியும் முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு சித்த வைத்திய கலாநிதி எஸ்.செல்வநாதன் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் வருடாந்த ஒன்று கூடலும் பிரிவுபசார விழாவும் புங்குடுதீவு பொறுப்பதிகாரி கு.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றன.

வடக்குக்கு சிறுவர் வைத்தியசாலை என்பது எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் தீவகப் பிரதேசத்துக்கு ஆயுள் வேத கிராமிய வைத்திய சாலை என்பது முக்கியமானதாகும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபை தலைவர் சி.சிவராசா, முன்னாள் பிரதேச சபை செயலாளர் கெ.தவராசா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்வில் 'விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

இ.சுப்பிரமணியம் (இளைப்பாறிய அலுவலர்), வி. எம்.எம். பத்மலால் (நிகழ்ச்சித் திட்ட அலுவலர்), திருமதி ஜா.மலர்விழி (நிகழ்ச்சித் திட்ட அலுவலர்), ப.நந்தீஸ் (தொழில்நுட்ப அலுவலர்), எஸ்.என். சுரேன்குமார் (நிகழ்ச்சித் திட்ட அலுவலர்), திருமதி ஸிஸ்ரன் காயத்திரி (நிகழ்ச்சித் திட்ட அலுவலர்), திருமதி கபிலன் ரம்யா (நிகழ்ச்சித் திட்ட அலுவலர்), திருமதி மீரா லிங்கன் (நிகழ்ச்சித் திட்ட அலுவலர்), கெ.தவராசா (முன்னாள் செயலாளர்), மருத்துவர் என்.இரட்ணலஜி (சித்த வைத்திய கலாநிதி), மருத்துவர் எஸ். செல்வநாதன் (சித்த வைத்திய கலாநிதி)(ம)

## மரண அறிவித்தல்

# ஆறுமுகம் வாகீஸ்வரன்

## (விக்கினேஸ்)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வாகீஸ்வரன் 17.03.2012 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வடிவாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்து ராமன்-தேவயானி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், கோமுகி, பிரசாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தியாகராசா (தலைவர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்), காலஞ்சென்ற நடராசா மற்றும் பூம்பாவை, உமாதேவி, நவரெத்தினராசா (செயலாளர், சிவன் கோயில், கோயில் குளம்- வவுனியா), காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் உமாதேவன் (நியூ சன் அரிசி ஆலை), அஸ்தநாயகி, சுவாதி நாயகி (ஆசிரியை, வ/த.ம.ம.வி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவசுப்பிரமணியம், சாந்தகுமாரி, காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் மகேந்திரகுமார், தனேஸ்குமார், நல்லம்மா, நாகலெட்சுமி, காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், சரவணமுத்து மற்றும் சண்முகரெத்தினம், சரஸ்வதி, தேவிகா (ஆசிரியை, வ/இ.ம.ம.வி), ஸ்ரீபதிநாதன் (அசோகன் மில், வவுனியா), சுதாகரன் (கிருஸ்ணபவான், வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30, உமாமகேஸ்வரன் வீதி,
வவுனியா.

(C\9819) (6,7,10)

தகவல்:
**சகோதரர்கள், மைத்துனர்கள்.**

## மரண அறிவித்தல்

திருமதி

# இரத்தினம் பஞ்சாபிகேசன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பஞ்சாபிகேசன் அவர்கள் நேற்று முன்தினம் (17.03.2012) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிரபல நாதஸ்வர வித்துவான் கலாநிதி கே.எம். பஞ்சாபிகேசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் தம்பதியரின் இளையமகளும், காலஞ்சென்றவர்கான தவில் வித்துவான் முருகப்பா தம்பதியரின் அன்பு மருமகளும், திருமதி வசந்தமலர் (கனடா), திருமதி இராஜமலர், நாதஸ்வர வித்துவான் M.P நாகேந்திரன், நாதஸ்வர வித்துவான் M.P விக்னேஸ்வரன், திருமதி சுமங்கலா, M.P முருகபூபதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், அமரர் கோபாலசாமி மற்றும் பாலகிருஷ்ணன், திருமதி கலாநிதி, திருமதி மகேஸ்வரி, ஈஸ்வரபாதம், திருமதி ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(C\2957) (6,9,10)

தகவல்:
M.P **நாகேந்திரன் (மகன்)**

**கடை வாடகைக்கு உண்டு**

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் (Srilanka Insurance) முன்பாக கடை வாடகைக் குண்டு.

தொடர்பு:
0772689442

## WANTED MONTESSORI TEACHERS

Vacancies exist for teachers for established montessori
* Fluency in English is prefered
* Age would be below 25

walk in interview on Tuesday from 9.00 am - 12 noon

**LITTLE CHUTTYS' MONTESSORI**
5, BRODIE FRONT LANE,
KANDY ROAD, ARIYALAI, JAFFNA.
T.P: 0715357592 / 0718262603.
(15847) (6,7,10)

## வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவை சங்கம், சுன்னாகம் கிளை, சுன்னாகம்

சுன்னாகம் முச்சக்கரவண்டி, சங்கத்திற்குட்பட்ட தரிப்பிடங்களில் நின்று சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

1. தரிப்பிடத்தில் நின்று சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் 18.03.2012 இல் இருந்து 18.04.2012 இற்கு முன்பு அவர்களுக்கான அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். (தாவடி, உப்புமடம், துரைவீதி, இணுவில், மருதனார் மடம், உடுவில், றொட்டியாலடி, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், மல்லாகம், தெல்லிப்பழை, மாகியப்பிட்டி, ஏழாலை)

2. தரிப்பிடத்தில் நில்லாது வீட்டில் நின்று சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளினால்எமது சங்கத்தில் பதிவு மேற்கொள்ளப்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு பெரிதும் பாதிப்பாக உள்ளது. காரணம்:- அவர்களில் சிலர் தவறான முறையில் சேவையில் ஈடுபடுகிறார்கள். சில குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றார்கள்.

### மக்களுக்கான அறிவித்தல்

1. பணிவான வேண்டுகோள் நீங்கள் வாடகை சேவையில் அமர்த்தியுள்ள முச்சக்கரவண்டி பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை நீங்கள் உறுதிப்படுத்தியபின் பிரயாணத்தை மேற்கொள்ளவும்.
2. அனைத்து முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கும் அடையாள அட்டை உள்ளவர்களை சேவைக்கு அமர்த்தவும்.
3. முச்சக்கரவண்டிக்கென தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவே அத்தரிப்பிடத்தில் உள்ள முச்சக்கரவண்டிகளை உங்களது தேவைக்கு பிரயாணத்தை மேற்கொள்ளவும். தரிப்பிடம் தவிர்ந்த வேறு இடங்களில் இருந்து வரும் பதிவுகள் இல்லாத சங்கத்தின் கட்டமைப்புக்கு கீழ்ப்படாத முச்சக்கர வண்டிகளில் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டாம். பின்பு உங்களுக்கு வரும் எந்தப் பிரச்சினைக்கும் சங்கம் பொறுப்பு அல்ல.

(15846) (6,7,10)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



தமிழாண்ட மண்ணில்
தமிழவேள் நாமம் பூண்டு
இன்சுவை மொழியால்
அரசுயர்சேவை நல்கும் -
செம்மைசேர்
செந்தில்நந்தனன் நிர்வாக
சேவையில் அதி சிறப்புத்தரமெய்தி
வீசுபுகழுக்குரியராகி
ஒளிர்ந்திலங்கும் வேளையிலே
கற்றவர் ஞானியர்
செழுதகைமையாளருடன் -
நல்லூரில்
கிராம சேவையாளர் நாம்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**பா.செந்தில்நந்தனன்**
(SLAS அதிசிறப்பு)
பிரதேச செயலர், நல்லூர்.

கிராம உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், நல்லூர்.

## புது வருடத்தை முன்னிட்டு விசேட கட்டணச்சலுகை 19.03.2012 - 19.04.2012



- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /= Germany 715/= France 765/=
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
- கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 450/= மட்டுமே

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

**Arrul Global Express**
International Courier & Cargo Service

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 19 - 06 - 1933
அம்பிகை அடியில் 18 - 02 - 2012

சமூக சேவகி
அமரர் **முத்தையா ஞானேஸ்வரி**

தில்லைவெளி நாயகியின் வேள்விக்காலம்
சிறப்புறவே அமுதளிக்கும் சபை நிறுவி
அல்லலறுத் தமுதளித்து அகங்குளிர்ந்தீர்
ஆர்செய்வீர் இப்பணியென் றேங்கிநின்றீர்
எல்லையில்லாத் தொண்டுசெய்தீர் இந்த மண்ணில்
எல்லோர்க்கும் தாயாக விளங்கி நின்றீர்
தொல்லையின்றி பிறப்பறுத்து அம்பாள் பாதம்
துணையென்று சென்று விட்டீர் அடைகசாந்தி!

கடந்த 18.02.2012 சனிக்கிழமை சிவபதபேறடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் முத்தையா ஞானேஸ்வரி அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரடியாக வருகை தந்து ஆறுதல் கூறி துயரில் பங்குகொண்டவர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலிருந்தும் தொடர்புசாதனங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும், மலர் வளையங்கள் சாத்தியும் தங்கள் கண்ணீர்க் காணிக்கைகளை செலுத்தியவர்களுக்கும், கூட இருந்து சகல வழிகளிலும் எமக்குத் தேவையான உதவிகளைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அனைவரையும் இன்று (19.03.2012) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

8 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

(C)9821) (6,7,10)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 1962 - 07 - 28
மறைவு 2012 - 02 - 23



கிருஷ்ணா அப்பளக் கொம்பனி உரிமையாளர்
அமரர் **ஸ்ரீதரன் சத்தியநேசன்**
**(நேசன்)**

கடந்த 23.02.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.03.2012) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியம் நாளை மறுதினம் (21.03.2012) புதன் கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லதில் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்பு கிடைக்கப்பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

117, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(15848) (6,7,10)







தீவக கல்வி வலய மட்டப் போட்டிகளில் வலைப்பந்தாட்டப் போட்டியில் 13, 15, 17 வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் மூன்று பிரிவுகளிலும் முதலிடங்களைப் பெற்று தீவுப் பகுதியில் முன்னணி வலைப்பந்தாட்ட வீராங்கனைகள் என்ற பெயரைத் தட்டிக் கொண்டனர். விளையாட்டு மைதான வசதிகளற்ற நிலையிலும் அதிபர், ஆசிரியர்களின் அயராத முயற்சியால் வலைப்பந்தாட்டப் போட்டியில் முதல் இடங்களை மூன்று வயதுப் பிரிவினரும் பெற்றுள்ளனர். (ம-7)

# ஆண்கள் பிரிவில் யாழ்.இந்து பெண்கள் பிரிவில் கொக்குவில்

## யாழ். வலய கூடைப்பந்தாட்டச் சம்பியன்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.கல்வி வலய பாடசாலைகளின் 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமிடையே நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் வெற்றிபெற்றுசம்பியனாகின.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 56:55 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் கொக்குவில் இந்து கல்லூரி அணி 47:41 என்ற புள்ளி அடிப்படையில்வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்து கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதிக் கொண்டது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 42:41 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரியை அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 44:35 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட் டத்தில் மாலை 4 மணி கொற் றாவத்தை றெஞ்சஸ் வி.க எதிர்த்து வல்லை வி.க. மோத வுள்ளது.

***

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென். கிழக்கு விநாயகர் சனசமூக நிலையம் தென்மராட்சி பிரதேச பிரிவுக்குட்பட்டவிக.வுக்கு இடையிலான தாச்சிப் போட்டித் தொடரில் இன்று மின்னொளியில் இடம் பெறும் கால் இறுதியாட்டத்தில் இரவு 7 மணிக்கு கைதடி மத்தி வளர் மதி வி.கவை எதிர்த்து கைதடி மின்னொளி 'ஏ' அணி மோதவுள்ளது. (ம-23)

## இன்று இறுதியாட்டம்

வவுனியா, மார்ச் 19

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தி வந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டம் இன்று திங்கட் கிழமை காலை 8.30 மணியளவில் வவுனியா தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கோவில் குளம் இந்துக் கல்லூரியை எதிர்த்து பண்டாரிக் குளம் விவேகானந்த கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23-400)

# வவுனியா இந்து, மடுக்கந்த ம.வி. கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் 19 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் வவுனியா இந்துக் கல்லூரியும், பெண்களுக்கான போட்டியில் மடுக்கந்த மகா வித்தியாலயமும் வெற்றி யீட்டியுள்ளன. இப்போட்டிகள் வவு னியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.



ஆண்களுக்கான போட்டியில் வவுனியா இந்துக் கல்லூரியும், மடுக்கந்த மகா வித்தியாலயமும் மோதின. இதில் வவுனியா இந்துக் கல்லூரி 2:0 என்ற நேர் செற்களில் வென்று வலயச் சம்பியனாகியது.இதே வேளை மூன்றாமிடத்தை தர்மபாலவித்தி.பெற்றுக்கொண்டது.

பெண்களுக்கான போட்டியின் இறுதியாட்டத்தில் மடுக்கந்த மகாவித்தியாலயம் அதனை எதிர்த்து விளையாடிய வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியை 2:0 என்ற நேர் செற்களில் வென்று சம்பியனாகியது. இந்தப் போட்டியின் மூன்றாமிடத்தை இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. (த-400)

**காலாண்டுக்கான பொதுக்கூட்டம்**

வசாவிளான் மேற்கு J/245 கிராம அபிவிருத்திச் சங்கத் தின் காலாண்டுக்கான பொதுக்கூட்டம் எதிர் வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம். ஆகவே குறித்த நேரத்துக்கு தவறாது சமுகம் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

க.இராசதுரை
தலைவர்.

சி.முருகதாஸ்
செயலாளர்

(15850) (6-9-12)



சிவமயம்

கரைச்சி புளியம்பொக்கனை
நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ
பொங்கல் (05.04.2012)
விழாவில் வாணிபம் மேற்கொள்ளும் வர்த்தகர்களுக்கான
**நில வாடகை சம்பந்தமான அறிவித்தல்**



புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இத்தினத்தில் வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில வாடகை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை

நாகதம்பிரான் பொங்கல் விழாவின்போது உணவு கையாளும் நிலையங்களுக்கான சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்
**சம்பந்தமான அறிவித்தல்**

01. உணவு கையாளும் நிலையங்களுக்குத் தனியான இடம் ஒதுக்குதல்.
02. இலங்கையின் எந்தவொரு பகுதியிலேனும் பிரதேச சபையின் அனுமதிபெற்ற உணவு கையாளும் நிலையங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கவும்.
03. அனுமதிபெற்ற உணவு கையாளும் நிலையங்கள் தமக்குரிய நிலையத்தில், தமது பொறுப்பில் கழிவுத் தொட்டிகளை (தற் காலிகமாக) அமைத்துப்பேணுதல் வேண்டும்.
04. உணவகங்களில் தேநீர், குளிர்களி என்பவற்றுக்கு ஒருமுறை மட்டும் பாவிக்கக்கூடிய "Disposable Cup" ஐ மட்டுமே பயன் படுத்தல் வேண்டும்.
05. பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் குடிநீரை மட்டுமே பெற்று பயன்படுத்தவும்.

இந்த அறிவுறுத்தல்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சுகாதார வைத்திய அதிகாரி,
கண்டாவளை.

# மரதன் ஓட்ட வெற்றியாளர்

40 இற்கும் மேற்பட்ட வீரர்கள் மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டனர்.

அச்சுவேலி, மார்ச் 19

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இடையே நடத்தப்படவுள்ள வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு அச்சுவேலி இலங்கை வங்கி கிளையின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக வைத்து மரதன் ஓட்டப் போட்டியை வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபனும் அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரனும் ஆரம்பித்து வைத்தனர்.

40 இற்கு மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்ட மரதன் ஓட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களையும் பெற்றோர் பெயர் விவரம் வருமாறு:

ப.தயாகரன், செ.சண்முகதாஸ், பா.ஜசிந்தன், இ.வினோதரன், தே.பிரதீபன், சி.காண்டீபன், ச.அகிலேசன், சி.தனுஸ்கரன், து.துசீதரன், தெ.மயூரன். பெண்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்: சு.கயூரி, த.நிருசனா, கு.கோசலா. (ம-11)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

O/L,A/L,B.A மாணவர்களுக்கான ஆங்கில இலக்கண வகுப்புக்கள் தனித்தனி பிரிவு BY:ந.வீபேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை.

(15840(6,9,12) Tel:077-6751649

**தென்னங்காணி விற்பனைக்கு**

வரணி, இயற்றாளையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்காக 150 மீற்றர் தூரத்தில் தென்னங்காணி உடன் விற்பனைக்குண்டு. மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை தொடர்புகொள்ளலாம்.

(15853)(6-7-8) தொடர்பு : 077 7222305

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் சித்திர பாட சிரேஷ்ட ஆசிரியரும், தமிழ்ப் பண்டிதரும், நாடகக் கலைஞருமான

அமரர் குமாரசாமி
துரைராஜா

அவர்கள் 16.03.2012 அன்று இறைபதம் எய்தியமை அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு, அன்னாரின் நினைவால் எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி அவர்தம் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

யா/அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி

நலன்புரி கழகத்தினர்

(15843)(6-9-8)

**6ஆம் ஆண்டு நினைவு நாள்**

மண்ணில்
25 ★ 05 ★ 1955



விண்ணில்
19 ★ 03 ★ 2006

செல்லக்கண்டு சந்திரோதயம்

ஆண்டுகள் ஆறு கடந்ததம்மா - ஆனால்
உன்நினைவுகள் எம்மை விட்டு
மாறவில்லையம்மா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உன்
நினைவோடே வாழுவோம் - அம்மா

அச்சுவேலி தெற்கு,
நாவற்காடு.

(15711) (6-9-12)

குடும்பத்தினர்





# இந்தியா அபார வெற்றி

பரம எதிரிகளான பாகிஸ்தானும், இந்தியாவும் மோதிய நேற்றைய ஆட்டத்தில் இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்து இறுதியாட்டத்தில் பங்கு பெறும் வாய்ப்பை தக்கவைத்தது.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இந்திய அணி நேற்றைய தினம் தனது மிகச் சிறந்த 'சேஸிங்கை' பதிவு செய்தது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் இடம்பெற்று வருகின்றது. இதில் பாகிஸ்தான், இந்திய அணிகள் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

சாதனை இணைப்பாட்டம்

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மொஹமட் ஹபீஸ் மற்றும் நஷீர் ஜம்ஷிட் களமிறங்கினர். பங்களாதேஷுடனான ஆட்டத்தில் சாதித்த இந்த ஜோடி இலங்கை அணியுடன் சொதப்பியிருந்தது. அதற்குப் பழி தீர்க்கும் வகையில் இந்திய அணியுடன் அதிரடியாக மோதி ஓட்டங்களைக் குவித்தது. இவர்களின் அதிரடியில் கலங்கிய இந்திய அணி பந்து வீச்சை அடிக்கடி மாற்றியும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. 25.4 ஆவது பந்தை சச்சின் ஜம்ஷிட்டுக்கு வீசினார். அப்போது பாகிஸ்தான் 153 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பந்தை எதிர்கொண்ட ஜம்ஷிட் நேரே அடிக்க சச்சினின் கையில் பந்து பட்டு நழுவி வெளியேறியது. அத்துடன் சச்சினும் காயம் காரணமாக தற்காலிகமாக வெளியேறினார்.

ஆசியக் கிண்ணத் தொடரில் முதலாவது இலக்குக்கான மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை இந்த ஜோடி நேற்றுப் பதிவு செய்தது. ஹபீஸ் 103 பந்துகளில் தனது 4 ஆவது சதத்தையும். ஜம்ஷிட் 98 பந்துகளில் தனது முதலாவது சதத்தையும் பதிவு செய்தனர். மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஹபீஸ், ஜம்ஷிட் துடுப்பாட்ட பவர்பிளே எடுத்ததும் அதிரடிக்கு இறங்க முற்பட்டு ஆட்டமிழந்தனர்.

துடுப்பாட்ட பவர்பிளேயின் முதலாவது பந்து பரிமாற்றத்தில் ஜம்ஷிட் வெளியேற, தொடர்ந்து அடுத்த பந்து பரிமாற்றத்தில் ஹபீஸ் வெளியேறினார். அடுத்தடுத்து இலக்குகளை இழந்தும் அசராத பாகிஸ்தான் உமர் அக்மல், யுனிஸ்கானின் அதிரடியுடன் துடுப்பாட்ட பவர்பிளேயை வெற்றிகரமாக நகர்த்தியது. 38 ஆவது பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்தை அஸ்வின் வீச எதிர்கொண்ட உமர் அக்மல் ஸ்குயா லெக் திசையில் தட்டி விட அதைப்பிடிப்பதற்கு ஓடி வந்து ஹோக்லியும், ரோகித் சர்மாவும் மோதுப்பட நான்கு ஓட்டங்கள் பெறப்பட்டது. வேகமாக அடித்தாடிய உமர் அக்மல் வேகமாகவே வெளியேறினார். அதன் பின்னர் வந்த அப்ரிடி, அஷாம் ஏமாற்றிய போதும் அசராது அடித்தாடிய யுனிஸ்கான் 33 பந்துகளில் தனது 47 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இறுதியில் யுனிஸ்கானும் ஆட்டமிழக்க 50 பந்து பரிமாற்றங்களில் பாகிஸ்தான் அணி 6 இலக்குகளை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றது.

மிகவும் கடினமான இலக்கை விரட்டத் தொடங்கிய இந்திய அணி முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே கம்பீரை இழந்தது. நெருக்கடியான நிலையில் இணைந்த சச்சின், ஹோக்லி இருவரும் இந்திய அணிக்கு சிறந்த அடித்தளத்தை அமைத்தனர். வேகமாக ஓட்டங்களைக் குவித்த இந்த ஜோடி அணியின் வெற்றி வாய்ப்பை பிரகாசமாக்கியது. நேற்றைய ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய சச்சின் 45 பந்துகளில் 96 ஆவது அரைச்சதத்தை கடந்தார். அரைச்சதம் அடித்து சிறிது நேரத்திலேயே பவிலியன் திரும்பினார்.

அதன் பின்னர் இணைந்து கொண்ட ரோகித் சர்மா ஆரம்பத்தில் நிதானமாக துடுப்பெடுத்தாடினார். ஹேக்லி அதிரடியாக ஆடி தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவித்துக் கொண்டேயிருந்தார்.

97 பந்துகளில் தனது 11 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்த ஹோக்லி தொடர்ந்தும் பாகிஸ்தானுக்கு நெருக்கடி கொடுத்தார். மறுமுனையில் இதுவரையிலும் சொதப்பிய ரோகித் சர்மாவும் அசத்த இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு உறுதியானது. 62 பந்துகளில் தனது 12 ஆவது அரைச்சதத்தை ரோகித் சர்மா பூர்த்தி செய்தார்.

வெற்றித் தருணத்தை எட்டும் நேரத்தில் ரோகித் சர்மாவும், ஹோக்லியும் உமர் குல்லின் அடுத்தடுத்த பந்து பரிமாற்றங்களில் வெளியேறினர். இருப்பினும் இறுதியில் ரெய்னாவும், டோனியும் தமது கைவண்ணத்தைக் காட்ட இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குள் நுழையும் வாய்ப்பை தக்க வைத்தது. இந்திய அணியின் வெற்றி மூலம் இலங்கை அணியின் இறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பு முற்றாகப் பறிக்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் அசத்திய ஹோக்லி ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (5)

**பாகிஸ்தான் எதிர் இந்தியா** மிர்பூர் மைதானம்

பாகிஸ்தான் 329/6 (50) இந்தியா 330/4 (47.5)

இந்தியா 6 இலக்குகளால் வெற்றி ஆட்டநாயகன்: ஹோக்லி

பாகிஸ்தான்


| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொகமட் கபீஸ் | lbw b டிண்டா | 105 | 113 | 9 | 1 |
| நசீர் ஜம்ஷிட் | c பதான் b அஸ்வின் | 112 | 104 | 10 | 1 |
| உமர் அக்மல் | c கம்பீர் b குமார் | 28 | 24 | 2 | 0 |
| யுனிஸ்கான் | c ரெய்னா b குமார் | 52 | 34 | 6 | 0 |
| சகிட் அப்ரிடி | c ஹோக்லி b பதான் | 9 | 15 | 0 | 0 |
| ஹமாட் அசாம் | c ஹோக்லி b டிண்டா | 4 | 5 | 0 | 0 |
| மிஸ்பா உல்ஹக் | (ஆட்டமிழக்காமல்) | 4 | 5 | 0 | 0 |
| உமர்குல் | (ஆட்டமிழக்காமல்) | 0 | 1 | 0 | 0 |
| உதிரிகள் | | 15 | இலக்கு இழப்பு: 1-224, 2-225, | | |
| மொத்த ஓட்டங்கள் | | 329 | 3-273, 4-313, 5-323, 6-326 | | |

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| குமார் | 10 | 0 | 77 | 2 |
| பதான் | 10 | 0 | 69 | 1 |
| டிண்டா | 8 | 0 | 47 | 2 |
| ரெய்னா | 2.2 | 0 | 15 | 0 |
| சர்மா | 3 | 0 | 19 | 0 |
| பதான் | 5 | 0 | 30 | 0 |
| அஸ்வின் | 10 | 0 | 56 | 1 |
| டெண்டுல்கர் | 1.4 | 0 | 12 | 0 |

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்பீர் | lbw b மொஹமட் ஹபீஸ் | 0 | 2 | 0 | 0 |
| டெண்டுல்கர் | c யுனிஸ்கான் b சயிட் அஜ்மல் | 52 | 48 | 5 | 1 |
| விராட் ஹோலி | c மொஹமட் ஹபீஸ் b உமர் குல் | 183 | 148 | 22 | 1 |
| சர்மா | c சயிட் அப்ரிடி b உமர் குல் | 68 | 83 | 5 | 1 |
| ரெய்னா | (ஆட்டமிழக்காமல்) | 12 | 6 | 1 | 1 |
| டோனி | (ஆட்டமிழக்காமல்) | 4 | 1 | 1 | 0 |
| உதிரிகள் | | 11 | இலக்கு இழப்பு: 1-0, 2-133, | | |
| மொத்த ஓட்டங்கள் | | 330 | 3-305, 4-318. | | |

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | 9 | 0 | 42 | 1 |
| உமர் குல் | 8.5 | 0 | 65 | 2 |
| ஐசஸ்ஷீமா | 8 | 0 | 60 | 0 |
| சயிட் அஜ்மல் | 9 | 0 | 49 | 1 |
| சயிட் அப்ரிடி | 9 | 0 | 58 | 0 |
| வகாப் ரைஸ் | 4 | 0 | 50 | 0 |



# மஹேலவின் கருத்துக்கு கிரிக்கெட் சபை மறுப்பு

ஆஸ்திரேலிய முக்கோணக் கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் இடம்பெற்றுவரும் ஆசியக்கிண்ணத் தொடரிற்கிடையில் போதுமான ஓய்வு கிடைக்கவில்லை என்று இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் கடுமையான மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ணத் தொடரின் நடுவே ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன, முக்கோண ஒருநாள் கிண்ணத் தொடருக்குப் பின்னர் அணிக்கு ஓய்வு கிடைத்திருக்கவில்லை. ஆஸ்திரேலியாவிலிருந்து நேரடியாக பங்களாதேஷிற்குப் பயணமாக வேண்டி இருந்தது. போதுமான ஓய்வு இன்மையும் இலங்கை அணியின் மோசமான பெறுபேறுகளுக்கு ஒரு காரணமாக அமைந்தது, எனத் தெரிவித்திருந்தார்.

தனது பெயரை வெளியிட விரும்பாத இலங்கைக் கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் - மஹேலவின் கருத்துக்களுக்கு மறுப்பு வெளியிட்டார். ஆசியக்கிண்ணத் தொடருக்கான அணியைத் தெரிவுசெய்வதற்கு முன்னர் இலங்கை அணியின் மூத்த வீரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டதாகவும், இங்கிலாந்து அணிக்கெதிராக டெஸ்ட் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் மூத்த வீரர்களுக்கு ஓய்வுதேவைப்படின் இளைய அணியொன்றை ஆசியக்கிண்ணத் தொடருக்குச் தெரிவுசெய்ய இலங்கைக் கிரிக்கெட் சபை தயாராக இருந்ததாகவும், எனினும் மூத்த வீரர்கள் ஆசியக்கிண்ணத் தொடரில் பங்குபற்ற விரும்பியதன் காரணமாகவே ஆசியக்கிண்ணத் தொடரில் மூத்த வீரர்கள் சேர்க்கப்பட்டிருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் உப தலைவர் அன்ஜலோ மத்தியுஸ் சேர்க்கப்பட்டமை தொடர்பாகவும் அவர் தனது விமர்சனங்களை முன்வைத்தார். ஆஸ்திரேலிய முக்கோண ஒருநாள் தொடரில் உடற்தகுதி தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொண்ட அன்ஜலோ மத்தியுஸ், இறுதிப் போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை. எனினும் அதன் பின்னர் நேரடியாக பங்களாதேஷுக்கு பயணம் செய்த அவர் ஆசியக்கிண்ண அணியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் முதலிரண்டு போட்டியில் பங்குபற்றியிராத அன்ஜலோ மத்தியுஸ், இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அந்த அதிகாரி, ஒரு வீரரைத் தெரிவுசெய்ய முன்னர் உடற்கூற்று நிபுணருடன் தேர்வாளர்கள் கலந்துரையாட வேண்டும் எனவும் தெரிவித்தார். (5)

# சிகிச்சை முடிந்தது




**தன்னுடைய சிகிச்சை முடிந்து வீடு திரும்பப் போவதாக நட்சத்திர கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.**

**நுரையீரல் புற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த இந்திய துடுப்பாட்டக்காரர் யுவராஜ் சிங், அமெரிக்காவில் பாஸ்டனில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.**

**புற்றுநோயை அகற்றுவதற்காக 3 கட்டங்களாக கீமோதெரபி சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில் மூன்றாவது கட்ட சிகிச்சை நிறைவு பெற்று, தான் குணமடைந்து விட்டதாக யுவராஜ் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து டுவிட்டரில் யுவராஜ் கூறியதாவது; கீமோதெரபி சிகிச்சை நிறைவு பெற்றதாக வைத்தியர்கள் கூறியுள்ளார்கள். எனக்காக பிரார்த்தனை செய்த ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (5)**

# நான் ஏன் ஓய்வுபெற வேண்டும்?



அணிக்காக சிறப்பான பங்களிப்பை வழங்க முடியுமாக உள்ளவரை சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்தும் விளையாட வேண்டும் என்று தான் எண்ணுவதால் ஓய்வு பற்றி சிந்திக்கவில்லை என்று இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். தனது நூறாவது சர்வதேச சதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சச்சின் டெண்டுல்கர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனரீதியாக சிறப்பாக உள்ள போது, அணிக்கு ஒரு பெறுமதியைச் சேர்க்கிறேன் என்று உணரும் வரை இந்தியாவுக்காகத் தொடர்ந்தும் போட்டிகயில் பங்குபற்றத் தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், சிறப்பான திறன் இருக்கும் போது ஓய்வுபெறுதல் என்பது சுயநலமான எண்ணம் எனத் தெரிவித்தார். சிறப்பான திறனில் இருக்கும் போது அணிக்காகவும், நாட்டுக்காகவும் சேவையை வழங்க வேண்டும் எனவும் சச்சின் தெரிவித்துள்ளார்.

எப்போது போட்டியில் பங்குபற்ற முடியாது என்ற மனநிலை ஏற்படுகிறதோ, அப்போது ஓய்வுபெற விரும்புவதாகத் தெரிவித்துள்ள அவர், மற்றவர்கள் தெரிவிப்பதற்காக ஓய்வுபெற முடியாது எனவும் தெரிவித்துள்ளார். கிரிக்கெட்டில் விளையாடுவதைத் தான் ரசிக்கும் வரை தொடர்ந்தும் விளையாடிக் கொண்டிருக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதைப் பற்றிச் சிந்தித்தால் அதை மறைக்கப் போவதில்லை அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை எனத் தெரிவித்தார். அத்துடன் தான் கடவுள் அல்ல, வெறுமனே சச்சின் டெண்டுல்கர் எனத் தெரிவித்த சச்சின், தான் மனிதன் என்பதால் தனக்கும் உணர்வுகள் இருப்பதாகவும், நூறாவது சதம் பற்றிய அழுத்தம் தனக்குக் காணப்பட்டதாகவும் தெரிவித்தார். நூறாவது சதம் மிகுந்த கடினமானதாகக் காணப்பட்டதாகவும், சதத்தைப் பெறமுடியாது போனதால் பல தடவைகள் எரிச்சலடைந்ததாகவும் தெரிவித்தார்.

கடந்த ஒருவருடகாலப் பகுதி கடினமான காலப்பகுதியாக அமைந்ததாகத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், 100 ஆவது சதத்தைப் பெற வேண்டுமென ஊடகங்கள் வழங்கிய அழுத்தம் தன் மீது தாக்கத்தைச் செலுத்தியதாகத் தெரிவித்தார். சில தருணங்களில் தான் ஓரளவு சிறப்பாக ஆடியதாகவும், எனினும் சதத்தைப் பெறமுடியாது போனதாகவும் சச்சின் தெரிவித்தார். (5)

# இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்ற காங்கேசன்துறை ஐக்கிய வி.க.

**யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தி வரும் கூடைப் பந்தாட்ட அரையிறுதியாட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.**

வலி.வடக்கு, மார்ச் 19

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தி வரும் கூடைப்பந்தாட்ட அரையிறுதியாட்டம் ஒன்றில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் படையினரின் அணியும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் இரு அணிகளும் ஆரம்பத்தில் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லை யென்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன.


முதல் கால் பாதி ஆட்டத்துக்கு இரு அணிகளும் தலா 17 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் கால்பாதி ஆட்டத்தில் படையினரின் அணி முன்னிலை பெற்று 23:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் முடிவடைந்தது.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் பெரும் உற்சாகத்துடனும் வெற்றி வாய்ப்பை பெற வேண்டும் என்ற துடிப்புடனும் களமிறங்கி 29:07 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

நான்காம் கால்பாதி ஆட்டம் இரு அணிகளினதும் வாழ்வா சவா என்ற நிலைக்கு இட்டுச் சென்ற நிலையில் களமிறங்கி இரு அணிகளும் வெற்றி பெறுவதே நோக்காகக் கொண்டு கடுமையாக மோதிக்கொண்டன.

ஆனாலும் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 22:20 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது .



ஆட்ட நிறைவில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 82:67 புள்ளிகள் என்ற அடிப்படையில் படையினரின் அணியை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

(ம-86)

## வட்டக்கச்சி லக்கிஸ்ரார் வலைப்பந்தில் சம்பியன்

**கிளி. மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுர உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி மோதியது.**

யாழ்ப்பாணம்,மார்ச் 19


கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த வாரம் கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுர உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 18:04 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் *(மெக்கானிக் விக்கி)*



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் (16.03.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயமலரின் அன்புக் கணவரும், விஜிதா(சுவிஸ்), சுஜிதா(பிரான்ஸ்), நிதுசன்(யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி A/L 2011) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருளானந்தன் (சுவிஸ்), கௌதமகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் அக்ஷயா, அபினாஸ், லக்சினி,லக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், மயில்வாகனம் (கனடா) சறோஜினிதேவி(உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம், வடக்கு வலயம்),சாரதாதேவி(கனடா), நல்லநாதன் (சிறி-கனடா), சத்திய தேவி(அதிபர், வ/கணேசபுரம் சண்முகானந்தா வித் தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற ரவிக்குமாரின் (பிரான்ஸ்)மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (19.03.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கைதடி வடக்கு ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***தொடர்பு:விஜிதா( சுவிஸ்) மகள்-0041-91470663,***
***சுஜிதா(பிரான்ஸ்)மகள்-0031-605602557,***
***வி.ஜெயமலர்(மனைவி)***

*கைதடி வடக்கு,*
*கைதடி.*
(15738) (6-7-12)
தகவல்:
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 16.03.2012 அன்று சிவபதமடைந்த எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான

**பண்டிதர் குமாரசாமி துரைராசா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை,*
*அச்செழு.*
(வி/9827)(6-7-12)
**ஆசிரியர் கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியையான திருமதி இ.விபலினி தேவி அவர்களின் அன்புத் தந்தை

**செல்லையா பொன்னையா** *(தியாகர்)*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லசோமஸ் கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

*யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி,*
*புத்தூர்.*
(வி/9828)(6-7-12)
**ஆசிரியர் கழகம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 |  | 18 |
| ★ | | ★ |
| 01 | | 02 |
| ★ | | ★ |
| 1930 | | 2012 |

அடைக்கலந் தோட்டம் கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணி பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி சுப்பிரமணியம் யோகம்

எமது குடும்பத்தலைவி அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவிய வர்களுக்கும் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரம் வெளி யிட்ட வட்டுக்கோட்டை கண்ணகி அம்பாள் சமேத கண்ண லிங்கேஸ்வர ஆலய பரிபாலன சபையினருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இன்று (19.03.2012) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது குடும்பத்தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம் பெறும். அத்தருணம் கலந்து கொள் ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்

*கணவர்,*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொன்னகம்,
சித்தன்கேணி.
(சி/9820)(6-12)

## நயினை ஸ்ரீ கணேசா வெற்றி

**இந்த வருடம் கோட்ட வலய மட்டங்களில் இடம்பெற்ற பெருவிளையாட்டுக்களில் ஸ்ரீகணேசா வெற்றியீட்டியுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச் 19

நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம் இந்த வருடம் கோட்ட வலய மட்டங்களில் இடம்பெற்ற பெருவிளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளது.

வேலணைக்கோட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 15, 17, 19 ஆகிய வயதுக்குட்பட்ட பிரிவைச் சேர்ந்த அணியினர் முதலாம் இடங்களையும், பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியில் 15 வயதுப் பிரிவுக்குட்பட்ட பிரிவு முதலாம் இடத் தையும் 17,19 வயதுக்குட்பட்ட பிரிவுகள் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 15, 17 வயதுக்குட்பட்ட பிரிவு முதலாம் இடத்தையும் 17, 19 வயதுக் குட்பட்ட பிரிவுகள் இரண்டாம் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

தீவக வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 15, 17 வயதுக்குட்பட்ட பிரிவினர் முதலாம் இடங்களையும் 19 வயதுக்குட்பட்ட பிரிவினர் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பிரிவு மூன்றாம் இடத்தையும், 19 வயதுக்குட்பட்ட பிரிவு இரண்டாம் இடத்தையும், பெண்களுக் கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்ட பிரிவு இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (த-14)

## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 19

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் 15,17,19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமிடையில் இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு ஆவரங் கால் நடராஜஇராமலிங்க வித்தியாலயத்தில் கரப்பந்தாட் டப் போட்டி இடம்பெறவுள்ளது. இதேவேளை 15,19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி காலை 8.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-23)

## மரண அறிவித்தல்

### *செல்லையா பொன்னையா (தியாகர்)*



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னையா 17.03.2012 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னரர் காலஞ்சென்றவரான செல்லையா மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக்கணவரும் மகேஸ்வரி, இராசமணி, கதிரவேலு ஆகியோரின் மைத்துனரும் பாலகிருஸ்ணேஸ்வரன், காலஞ்சென்ற கந்தசாமி (கனடா) மற்றும் கு. இரஞ்சிதராணி, இ. விபலினிதேவி (யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர் ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தந்தையும். பா. தேவசேனா (ஓய்வு பெற்ற ஆசிரியை), க.ஜெயலக்ஸ்மி (கனடா), சி.குகநேசன் (உதவிக் கல்விப்பணிப்பாளர் வலிகாமம்), வே.இரத்தினவேல் (முகாமைத்துவ உதவியாளர் - யா/மாநகரசபை) ஆகியோரின் மாமனும். ஜெயகாந்தன், சாரங்கா (ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியை), க.சேஜோன் (பொறியியலாளர் - கனடா), பி.ஹம்சாயினி (கணிய அளவையியலாளர்), கு. ஸ்ரீஜெயந்தன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கு. தனஞ்சன் (மொறட்டுவ பொறியியல் பீட மாணவன்); இ.ஸ்ரீகிருஸ்ணன் (யாழ். விவசாயபீட மாணவன்), இ. ஸ்ரீசியாமளன் (பொறியியல் பீடம் மொறட்டுவ் மாணவன்), இ. ஸ்ரீதுவாரகன் (யா/இந்துக்கல்லூரி மாணவன் -2012 உயிரியல்), இ.கீர்த்தனா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிரோசா (யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), இ.பிரதீபன் (கணிய அளவையியலாளர்), செ. ஜெயகாந்தன் (நகர அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோரின் பேரனும். பி. அபிராம், பி. தருண்ராம் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
மடத்தடி வீதி, நீர்வேலி.
(C/9826)(6-7-8)
தகவல்:
**குடும்பத்தினர்**

# இனியும் காலம் கடத்த முடியாது என்பதை டில்லி கொழும்புக்கு உணர்த்த வேண்டும்

## அதற்கான இராஜதந்திரத்தை உருவாக்குமாறு 'டெக்கான் குரோனிக்கல்' ஆலோசனை

டில்லி, மார்ச் 19

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொழும்புக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா சமர்ப்பித்துள்ள நிலையில், இனியும் தனது பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முடியாதென்பதை கொழும்புக்கு உணர்த்துவதற்கான புதிய வழிமுறைகளை இந்திய இராஜதந்திரம் உருவாக்க வேண்டும்.

-இவ்வாறு 'டெக்கான்குரோனிக்கல்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு -

வடக்கிலும் மேற்குலகிலுமுள்ள கடினமான அயலவர்களை இந்தியா பல தசாப்தங்களாக மிகச் சாதுரியமாகவே கையாண்டு வந்துள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டில் அம்மக்களுடனான இந்திய உறவு அபூர்வமானது; இதமானது. எனினும், இத்தீவின் 'அரச நடிகர்'களுடனான உறவுகள் சிக்கல்கள் இல்லாமல் இருந்ததில்லை. சுமுகமானவை என எளிதில் கூறிவிட முடியாது.

2009ஆம் ஆண்டு மே மாதத் தில் இலங்கை இராணுவத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். இதற்குப் பின்னர் கூட நாட்டின் சிறு பான்மைத் தமிழர்களின் குடியுரிமைப் பகிர்வுக்கான தவணைகளைக் கையாளுவதில் கொழும்பு தொடர்ந்தும் பராமுகமாகவே இருந்து வருகிறது. அதன் பார்வை இதுவரை எட்டவில்லை. இதுவே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளில் குழப்பத்தை விளைவிக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கொழும்புக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை விடயத்திலும் தற்போது அதே போன்ற 'ஒரு கதையே' உருக்கொண்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் நிந்தைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை இந்தியா கட்டாயம் ஆதரித்தே ஆகவேண்டும் என தமிழ்நாடு அழுத்தமாக வலியுறுத்துகிறது. இதுவே அதன் வலுவான கருத்தாகவும் இருக்கிறது.

இலங்கையிலுள்ள தமிழர்களை அவர்களின் அரசு சமத்துவமாகவே பேண வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகள் ஆர்ப்பரித்தன. தமிழர் அல்லாத கட்சிகளின் சில தலைவர்களும் இதே அறைகூவலையே விடுத்தார்கள். அத்துடன், மனித உரிமைகள் விடயத்தில் ராஜபக்ஷ நிர்வாகத்தின் மீதும் கடும் கண்டனமும், அதிருப்தியும் தெரிவித்தார்கள். தென்னிந்தியாவில் நிலவும் வலுவான உணர்வுகள் புரிந்து கொள்ளக் கூடியவையே. முழுநாடுமே இந்த உணர்வை நிஜமாகவே பகிர்ந்து கொண்டுள்ளது.

தமிழீழவிடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். அதன் தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டார். இச் சம்பவங்களுக்குப் பின்னர் இலங்கைச் சிப்பாய்களால் தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயது புதல்வர் குரூரமாகக் கொல்லப்பட்டச் சம்பவம் அடங்கிய ஒளி நாடா சமீபத்தில் பிரிட்டிஷ் தொலைக்காட்சி சனல் 4 இல் வெளியாகியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஒரு நாட்டின் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த பிரேரணைகளை ஆதரிக்கும் வழக்கம் இந்தியாவிடம் கிடையாது. இலங்கைத் தமிழரின் கேள்விக்கும் இதனால் ஒன்றும் விளையப்போவதில்லை. பாரம்பரியமாக மனித உரிமைகள் மீதான நிந்தை அவ்வப்போது பரந்தளவிலான அரசியல் தாக்குதல்களுக்கே வழிசமைக்கிறது. நாடுகளைத் தண்டிப்பதற்கான அமெரிக்காவின் வழி, அதன் நிபந்தனைகள் ஆகியவை சுமுகமானவை அல்ல.

இருந்தபோதிலும், இனியும் தனது பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முடியாதென்பதை கொழும்புக்கு உணர்த்துவதற்கான புதிய வழிகளை இந்திய இராஜதந்திரம் உருவாக்கவேண்டும்- என்றுள்ளது. (ஒ-சி)

### வாழ்த்துகின்றோம்



கடந்த (14.03.2012) புதன்கிழமை சிவாச்சாரிய அபிஷேகம் பெற்ற எமது திருநெல்வேலி பாற்பண்ணை ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தான அர்ச்சகர்

பிரம்மஸ்ரீ வரதராஜக்குருக்கள் கேதீஸ்வரக் குருக்கள்
(B.com(Hons), M.A(PDS))

அவர்கள் மேலும் பல சிறப்புகளைப் பெற்று பல்லாண்டு வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்—விஜயராசா ஜெயந்தி, வேலணையூர் ராசன்


### வேலையாள்கள் தேவை

ஆவரங்கால் பிரதான வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள மருந்தகத்திற்கு முன் அனுபவமுள்ள மருந்தக உதவியாள்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 0777245546

### தவறிவிட்டது

அலோசியஸ் வரதராஜா (772203780V), தவராசா றஜிதா (856623106V) ஆகியோரின் அடையாள அட்டைகள், வங்கி ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஈச்சமோட்டை - வளன்புரம்- கொழும்புத்துறை பகுதிகளுக்கிடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
T.P:- 0779071319, 0750426680


### ஆண்டு ஒன்றின் நினைவிலே



திருமதி
**பவளம் நாகமணி**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 | 31 |
| 07 | 03 |
| 1927 | 2011 |

திதி: 19.03.2012
(அபரபக்க துவாதசி)

தாய்மையின் பிறப்பிடமே
பாசத்தின் உறைவிடமே
பண்புக்கோர் இலக்கணமே
உறவுக்கோர் சின்னமே
எமையெல்லாம் பூலோகத்தில்
தவிக்கவிட்டு
அம்மா ! நீ மட்டும் இறைஉலகு
சென்றதன் மர்மம் என்ன?
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
எம்முடனே வாரும் அம்மா...

சொலமன் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.


### ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

யாழில் பல்கலைக்கழக, தொழில் புரிவோர், தொழில் தேடுவோர்
3000க்கு மேற்பட்டோர் தெரிவுசெய்து தமது ஆங்கில புலமையில் வெற்றி பெற்ற...
முறையானதும் தரமானதுமான ஆங்கிலபயிற்சி



veta® Spoken English
An ISO 9001:2000 Certified Company
Experts in English Training

- ISO 9001:2000 Certified அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்.
- தரமான போதனை சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளில்.

veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 க்கும் மேற்பட்ட கிளைகள்
Foundation English First Step — English Next Step
அவரவர் நிலைக்கேற்ப பயிற்சிகள்

To get scholarship Call or SMS. 0777577333

ரூபா 3500 வெல்லுங்கள்
கட்டணச்சலுகையுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பெயர் மற்றும் முகவரி என்பவற்றை sms செய்து ரூபா 3500 கட்டணச்சலுகையை வெல்லுங்கள்.
Type your <Name> <Address> send to 0777577333

A1 Exam திருமணம் செய்து UK செல்வதற்கான City & Guilds Approved Centre
British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0243 | Tel. : 021-224 1970 |


### மரண அறிவித்தல்

*சுப்பிரமணியம் கனகேந்திரன் (ராசா)*
*(சங்கானை, தெல்லிப்பழை வைத்தியசாலை ஊழியர்)*



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகேந்திரன் (ராசா) நேற்று ஞாயிற்றுக்கிழமை (18.03.2012) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான அப்பையா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மினியின் (சோதி) அன்புக் கணவரும் நிஷாந்தினி (இத்தாலி), தனுஷன், பாமினி (கனடா), யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார் (இத்தாலி), பிரியா, சுரேன் (கனடா), ரஜனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆகாஷ், பிரவிந், தர்சிகா, சஜீனா ஆகியோரின் அன்புப் பேரனும் திலகவதி, மகாதேவன், காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் குலேந்திரன், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் சந்திராதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேந்திரலிங்கம், தெய்வேந்திரம் மற்றும் மகேஸ்வரி, ராதிகா, நிர்மலானந்தன் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் பத்மராணியின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (19.03.2012) பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

*முத்திலிங்கம் தவம்*



காட்டுப்புலம், தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்திலிங்கம் தவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (18.03.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்காரம் - மாணிக்கம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற முத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் விஜயானந்தன் (திருகோணமலை), காலஞ்சென்ற பிறேமானந்தன், ஜெயானந்தன் (வல்வெட்டி), நளினி (சமுர்த்தி உத்தியோகஸ்தர்), றஜினி, சுதானந்தன், உதயானந்தன் (காவல்துறை பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக்கல்லூரி, களுத்துறை) ஆகியோரின் பாசமிகு தாயும் ரஞ்சினிதேவி (ஆசிரியர், திருகோணமலை), ஸ்ரீரஞ்சினி, பார்த்தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும்அஜய், அக்னேஷ், முகேஷ், தேசா, தினேசா, மேதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (19.03.2012) காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காட்டுப்புலம், தொண்டமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

# தனித் தமிழீழமே மக்களுக்குத் தீர்வு கருணாநிதி ஒரு போராளியே அல்லர்

## ராமதாஸ் கடும் தாக்கு



இலங்கையில் இறுதிக் கட்டப் போர் நடந்தபோது காலையில் சாப்பிட்டுவிட்டு உண்ணாவிரதம் இருக்க வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி போர் முடிந்து விட்டதாகக் கூறி மதிய உணவு சாப்பிட வீட்டுக்குச் சென்றுவிட்டார் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் முன்னர் நடந்ததை நினைவுபடுத்திக் குற்றம் சாட்டியுள்ளார்.

பா.ம.க. சார்பில் திராவிட மாயை குறித்த கருத்தரங்கு சென்னையில் உள்ள தேவநேயப் பாவாணர் அரங்கில் நடைபெற்றது.

பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி தலைமையில் நடந்த அந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட அக்கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியவை வருமாறு -

இலங்கையில் இறுதிக் கட்டப் போர் நடந்தபோது தி.மு.க. தலைவர் கருணாநிதி காலை உணவை சாப்பிட்டுவிட்டு உண்ணாவிரதம் இருக்க வந்தார். 3 மணி நேரத்திற்குப் பின்னர் போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது என்று கூறி மதிய உணவு நேரத்தின் போது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். ஆனால், அதன் பின்னும் குண்டு வீசப்பட்டது. இதுகுறித்து கேட்ட போது மழை விட்டும் தூவானம் விடவில்லை என்று கூறினார்.

போர் நடந்தபோது நான் பல முறை கருணாநிதியைச் சந்தித்து போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தினேன்.

ஆனால் இப்போது அவர் அண்ணா நூலகத்திற்காக தீக்குளிக்கப் போவதாக அறிவித்துள்ளார். உண்மையான போராளிகள் யாரும் அவ்வாறு சொல்லமாட்டார்கள். தனி ஈழத்தின் மூலமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் - என்றார்.

திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் சாதிப் பிரச்சினை குறைந்தபாடில்லை. மேலும் மக்கள் மதுவுக்கு அடிமையாவது அதிகரித்துள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார். (ஒ-சி)

# அதிக விலையில் விற்பனை வியாபாரிகளுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

குறித்த விலையை விட அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்த 13 வியாபாரிகள் யாழ். நீதிமன்றில் 59 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அதிகார சபையினரால் குறித்த 13 வியாபாரிகளுக்கும் எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

யாழ். நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. குறித்த வியாபாரிகள் தமது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டனர். அதனையடுத்தே அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

# மாடு மேய்த்த 6 பேரை வழிமறித்து நையப்புடைத்தனர் கடற்படையினர்

01↘ பகுதியில் தங்கி நின்று மாடு மேய்த்து வரும் இவர்கள் மாலை மாடுகளை பட்டியில் அடைப்பதற்காக கொண்டு சென்றவேளை இவர்களை இடைமறித்த கடற்படையினர் மரங்களில் கட்டி வைத்துக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அத்தோடு அவர்கள் தங்கியிருந்த குடிசைகளில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

''நாம் கடற்படை முகாமுக்கு அண்மையாக மாடுகளைக் கலைத்து சென்றவேளை வழிமறிக்கப்பட்டுக் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டோம்'' எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த அரச அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த ஆறு பேரும் அறுகுவெளிப் பகுதியில் தங்கியிருந்து மாடு வளர்த்து வருகின்றனர் என்றும் அவை அவர்களது சொந்த மாடுகள் என்றும் உறுதிப்படுத்தினார். சம்பவம் தொடர்பில் கருநாட்டுக் கேணி இராணுவ முகாமில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ஒ-10-6)

# டில்லியின் ஆதரவைத் திரட்ட இலங்கை ரகசியமாகப் பேச்சு

01↘ னெடுத்துள்ளார் என்று தெரியவருகின்றது.

இந்திய மத்திய அரசின் மூத்த அமைச்சர்கள் இருவரைச் சந்தித்துப் பேசியுள்ள மேற்படி இராஜதந்திரி, பிராந்தியத்தின் ஸ்திரமான நிலையைத் தளர்வடையச் செய்யும் எந்தச் செயற்பாடுகளுக்கும் இந்தியா துணை போகக்கூடாதென்றும் - இதன் பிரகாரம் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படவேண்டிய தேவை பற்றியும் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார் என்று அறியவருகிறது.

அதேசமயம், இலங்கைக்கு எதிரான பிரேரணை எதிர்வரும் 22 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## சி.ஐ.டி.எனக் கூறிக் கொண்டு முன்னாள் போராளிக்கு மிரட்டல்

01↘ நடந்து கொண்டது எமக்குத் தெரியும். நாங்கள் என்ன கேட்டாலும் நீ அதைச் செய்ய வேண்டும்'' எனத் தொலைபேசியூடாக மிரட்டியதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு பகல் என்ற வேறுபாடின்றி தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்டுதான் 'சிஐடி' எனக் கூறியே அந்த நபர் மிரட்டி வருகிறாராம்.

'நிக்ஸன்' என்பவரே தன்னை மிரட்டுவதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள குறித்த முன்னாள் போராளியான பெண் கூறினார். 0771067662, 0779237359 ஆகிய இந்த இரண்டு இலக்கங்களிலிருந்தே அழைப்பு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு இலக்கங்களும் பொலிஸாருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டுள்ளவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவை சீண்டினால் பாண் துண்டும் கிடைக்காது

01↘ பேச்சுகளைத் தவிர்த்து, பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உதவியளிக்கும் வகையில் அமைச்சர்கள் செயற்பட வேண்டும் - என்றார் புத்ததாஸ. (ஒ-சி)

## பிரேரணை நிறைவேறினால் வரலாறு காணாத போராட்டம்

01↘ சேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு அரசு இறுதிவரை அயராது பாடுபட வேண்டும். பிரதிபலன் என்னவாக இருந்தாலும் அதற்குத் தாக்குப் பிடிக்கும் வகையில் அரசு முன்னரங்குகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

துரதிஷ்டவசமாக எமக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால், சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புவதற்கு மேற்குலகம் முயற்சிக்கும். மேற்குலகின் இந்த நடவடிக்கை நாட்டுக்கு அபத்தமானது.

எது எப்படியிருப்பினும், பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் வரலாறு காணாத வகையில் உள்நாட்டில் போராட்டங்களை வெடிக்கச்செய்து, சர்வதேசக்குழுக்கள் நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுத்து நிறுத்துவோம். இதற்கு நாட்டுமக்களின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் - என்றார். (ஒ-சி)

# மேலும் சில திருத்தங்களுடன் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு

01↘ அளித்த விளக்கம் சரியல்ல என்ற நிலையை தமிழக மக்களின் உணர்வாக உள்துறை அமைச்சர் பிரதிபலித்து வருகிறார் எனவும் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரத்தில் மத்திய அரசு எடுக்க வேண்டிய நிலை, அந்தப் பிரேரணையில் சில திருத்தங்களைச் செய்து ஆதரவு அளிப்பது போன்ற முயற்சிகளைத் தற்போது மத்திய உள்துறை அமைச்சர் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார் என வெளிவிவகார அமைச்சக வட்டாரம் உறுதி செய்துள்ளது.

இந்தியாவிடம் இருந்து கட்டமைப்பு, பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை, இந்தியாவுக்கு எதிரான காரியங்களில் ஈடுபடும் பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் கைகோத்துக் கொண்டு வலம் வரும் இலங்கையின் போக்கு இந்தியாவுக்கு அதிருப்தியை அளித்துள்ளது எனத் தெரிகிறது.

மேலும், இந்தியாவின், வலிய வந்து செய்யும் உதவிகளுக்கு உரிய மரியாதையையும் மதிப்பையும் இலங்கை கொடுப்பதில்லை என்ற தகவலும் மத்திய அரசுக்குக் கிடைத்துள்ளது.

### எச்சரிக்கை சமிக்ஞை

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான திருத்தப்படும் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் அந்நாட்டுக்கு ஓர் எச்சரிக்கை சமிக்ஞை அனுப்பவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத் தருணத்தில், இலங்கைக்கு எதிரான கடுமையான நிலையை இந்தியா எடுக்க வேண்டும். அது, ராஜீய ரீதியாக இந்தியாவின் செல்வாக்கைச் சர்வதேச சமூகத்தில் நிலை நிறுத்திக் கொள்ள உதவுவதுடன், உள்நாட்டில் சரிந்து வரும் தமது செல்வாக்கையும் சரி செய்துகொள்ள உதவும் என்ற சிதம்பரத்தின் வாதத்தை பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் பிரணாப் முகர்ஜி, ஏ.கே.அந்தோனி ஆகிய மூத்த அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

ஒருபுறம், ரயில் பயணக் கட்டணத்தை உயர்த்திய விவகாரத்தில் ரயில்வே அமைச்சர் தினேஷ் திரிவேதியை நீக்க வேண்டும் என்று திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி நெருக்கடி கொடுத்து வருகிறார்.

மறுபுறம், இலங்கை விவகாரத்தில் அந்நாட்டுக்கு அனுசரணையான நிலையை இந்தியா கடைப்பிடித்தால், அது உள்நாட்டு அரசியலில் மேலும் நெருக்கடியைத் தரும் என்றும் சிதம்பரம் விளக்கினார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முன்னேற்றங்களின் பலனாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணையில் சில திருத்தங்களுடன் இந்தியா ஆதரவு அளிக்க களம் தயாராகி வருகிறது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புலிகளுடனான போரின் போது ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டனர். போரின் போதும், போருக்குப் பிந்தைய காலத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசித்து வந்த தமிழர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கான மக்கள் மீது இலங்கை இராணுவத்தினர் பலவிதமான அடக்குமுறை, மனித உரிமை மீறல்களைக் கட்டவிழ்த்து சித்திரவதை செய்தனர்.

போர்க்குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெனிவாவில் நடைபெற்று வரும் சபை மனித உரிமைகள் வுஷீவீ கூட்டத்தில் அமெரிக்கா பிரேரணையை முன்மொழிந்துள்ளது. அந்தப்பிரேரணையின் நகல் 47 உறுப்பு நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் திருத்தம் தேவைப்பட்டால் அவை மேற்கொள்ளப்பட்டு மார்ச் 22 ஆம் திகதி பிரேரணை மீது விவாதம் நடத்தப்படும். மார்ச் 23 ஆம் திகதி பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று அ.தி.மு.க., தி.மு.க., இடதுசாரிக் கட்சிகள், விடுதலைச் சிறுத்தைக் கட்சி ஆகியவை குரல் கொடுத்துள்ளன. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான கடுமையான நிலையை இந்தியா எடுக்க வேண்டும். இது ராஜீய ரீதியாக இந்தியாவின் செல்வாக்கை சர்வதேச சமூகத்தில்நிலை நிறுத்திக் கொள்ள உதவுவதுடன் உள்நாட்டில் சரிந்து வரும் தமது செல்வாக்கையும் சரி செய்து கொள்ள உதவும் என்ற சிதம்பரத்தின் வாதத்தை பிரதமர், பிரணாப் முகர்ஜி, அந்தோனி ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது. (ஒ-சி)

# மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் மக்களின் பாவனைக்கு

01↘ பகல் 3 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை நீச்சல் தடாகத்தைப் பொதுமக்கள் பயன்படுத்த முடியும். பொதுமக்கள் பயன்படுத்துவதற்கான ஒழுங்கு முறைகள் சில வகுக்கப்பட்டுள்ளன.

வருடாந்த அங்கத்துவப் பணமாக ஆயிரம் ரூபாவை செலுத்தி அங்கத்துவத்தை பெறுபவர்கள் நீச்சல் தடாகத்தை ஒரு மணிநேரம் பயன்படுத்துவதற்கு நூறு ரூபா செலுத்த வேண்டும். வருடாந்த அங்கத்துவம் பெறாதவர்கள் வருடாந்த அங்கத்துவத்தைப் பெற்றவரின் அனுமதியுடனேயே தடாகத்தைப் பயன்படுத்த முடியும். இவர்களுக்கு மணித்தியாலத்துக்கு 200 ரூபா அறவிடப்படும்.

தடாகத்தைப் பெண்கள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பயன்படுத்த முடியும். அந்தத் தினத்தில் தடாகத்தை ஆண்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

மாணவர்கள் தடாகத்தைப் பயன்படுத்துவதாயின் பாடசாலை அதிபர்கள், மத்திய கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு நீச்சலுக்கான விசேட தினத்தை ஒதுக்கிக் கொள்ளமுடியும்.

பாடசாலை மாணவர்கள் மாலை 6 மணிக்கு பின்னர் தடாகத்தை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விசேட பயிற்சி பெற்ற உயிர்க்காப்பு உத்தியோகத்தர்கள் நீச்சல் தடாகத்திலே பணியில் ஈடுபட்டிருப்பார்கள். நீச்சல் பழக வருபவர்களுக்கும் போதிய பயிற்சிகள் வழங்கப்படும்.

ஆண்கள் நீச்சலில் ஈடுபடும் போது ஆண் உத்தியோகத்தர்களும், பெண்கள் நீச்சலில் ஈடுபடும் போது பெண் உத்தியோகத்தர்களும் கடமையில் இருப்பர் என அவர் தெரிவித்தார். (ஒ-10-3)

# அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வாய்திறக்கமாட்டார் அமைச்சர் யாப்பா

## குற்றஞ்சாட்டுகிறார் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 19

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஒருபோதும் வாய்திறக்கமாட்டார். மிலிந்த மொரகொடவின் நெருங்கிய குடும்ப உறவினர் என்பதால், ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக நாம் கூறும் கருத்துகளை அவர் சரியென ஏற்பார் என்றும் நம்பிக்கை கொள்ள முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

நாட்டில் போர் இடம்பெற்ற காலத்தில் எம்மால் அதில் வெற்றிபெற முடியாது என இவர்கள் கூறினார்கள். இருப்பினும், நாம் போரை வெற்றிகரமான முறையில் முன்னெடுத்த போது எம் பக்கம் தாவிக் கொண்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அமெரிக்காவின் பொருள்களை நமது நாட்டில் தடை செய்ய வேண்டும் என நான் கூறினேன். இந்தக் கருத்தை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன அரசின் கருத்தல்ல எனக் கூறியுள்ளார்.

இது அரசின் கருத்தல்ல. இது தேசிய சுதந்திர முன்னணியின் கருத்தாகும்.

நாம் அரசுடன் ஒன்றுபட்டு செயற்பட்டாலும், எமது கட்சிக்கென்று வேறுபட்ட எண்ணங்கள், கொள்கைகள் உள்ளன. அந்தக் கருத்தை மக்களுக்குத் தெரிவிக்கவேண்டிய உரிமை எமக்கு உள் ளது. நமது நாட்டுக்கு எதிராக அந்நிய சக்திகளின் அச்சுறுத்தல் வரும் போது, அதனை வெற்றி கொள்வதற்காக மக்களை ஒன்றுதிரட்டவேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

இவர் மிலிந்த மொரகொடவின் நெருங்கிய குடும்ப உறவினர் என்றபடியால் ஏகாதி பத்திய சக்திகளுக்கு எதிராக வாய் திறப்பார் என்பதில் எமக்குச் சந்தேகம் உள்ளது. இருப்பினும், எமது நாட்டுக்காக நாம் எமது கடமைகளைச் செய்துகொண்டேயிருப்போம் - என்றார் விமல்.

இதேவேளை, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் கூறியவை வருமாறு:-

நான் ஜனாதிபதியை கடவுளாக மதிக்கின்றேன். அமைச்சரவைக் குழுவின் கடவுள் மக்கள்தான். அதனால் நாம் மக்களுடன் ஒன்றுபட்டே இருப்போம். கொள்கையுடைய அரசியல் கட்சியில் பிரசாரச் செயலாளர் ஒருவர் இவ்வாறு கூறுவாரானால், அவர் ஐக்கிய அமெரிக்க தூதரக பிரசாரச் செயலாளர் என்றே நாம் நினைப்போம் - என்றார். (ஓ-சி)

**பார்மசிக்கு உரிய பொருள்கள் விற்பனைக்கு**

வடமராட்சியில் தற்போது நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் பார்மசி & குறோசரி பொருள்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0721380869

# ஜெனிவாவில் நீதிக்குத் தலைவணங்கி இந்திய அரசு முடிவெடுக்க வேண்டும்

## குற்றவாளியைப் பிணை எடுக்கக்கூடாது என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, மார்ச் 19

''இலங்கைக்கு ஆதரவாக அவதாரம் தரித்து ஜெனிவாக் களத்தில் இந்தியா இறங்குமானால் குற்றவாளிக் கூண்டிலிருந்து எப்படியோ இலங்கை அரசு நழுவிவிடும். எனவே, நீதிக்குத் தலை வணங்குவதா அல்லது குற்றவாளியைப் பிணையில் எடுப்பதா என்பதை இந்தியா மிகவும் நுணுக்கமான முறையில் ஆராயவேண்டும்''

- இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை-கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கை அரசு மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் தான்தோன்றித்தனமான செயற்பாட்டின் காரணமாகவே இன்று சர்வதேச பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றது.

தான் பூரண உத்தமன் என்ற அடிப்படையிலேயே அரசு செயற்படுகின்றது. இது மகா தவறு. தான் புரிந்த குற்றங்களுக்கு அரசு பதிலளித்தே ஆகவேண்டும். அதற்கான கடப்பாடும் அரசுக்கு உள்ளது.

இந்திய அரசு பொருளாதார ரீதியிலான நலன்களைக் கருத்திற்கொண்டே இலங்கைக்கு ஆதரவளிக்கின்றது. இம்முறையும் அது இலங்கையை ஆதரித்துச் செயற்படுமானால் மஹிந்த அரசு எப்படியோ சர்வதேசப் பிடியிலிருந்து நழுவிவிடும். தப்புச்செய்தவன் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பதே உலகநியதி.

எனவே, இந்தியா நீதிக்குத் தலை வணங்குவதா அல்லது குற்றவாளியைப் பிணையில் எடுத்து மீண்டும் மீண்டும் அதே தவறை இழைப்பதா என்பதை நுணுக்கமாக ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூட்டு எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தின் போது நாம் வலியுறுத்துவோம்'' - என்றார். (ஓ-சி)

**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

**41ஆம் நாளின் நீங்காத நினைவுகள்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1959 | 2012 |
| 05 | 02 |
| 07 | 07 |



**திருமதி மேரி மாக்கிறட் கருணைதாசன்**

[07.02.2012 அமரத்துவம் அடைந்த]

நாள்கள் பல ஆனாலும் எம் துயரம் ஆறாதம்மா
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும் உன் அன்புக்கு ஈடாகுமா?
சிரித்த முகத்துடன் சிலுவை மொழி பேசினீரம்மா
எல்லோர் உள்ளங்களிலும் இடம்பிடித்தீரம்மா
அன்பே உன் இனிய நினைவுகள்
நாள்கள் பல கடந்தாலும் நீங்காதம்மா.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் செப வழிபாட்டிலும் விருந்துபசாரத்திலும் அனைவரும் கலந்து கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

உன் பிரிவால் வாடும்
கணவர், சகோதரர், பேரமக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

**நன்றி நவிலலும்**
**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22.02.1926 | 20.02.2012 |



**அமரர் ஆறுமுகம் காசிப்பிள்ளை**

கடந்த 20.02.2012 சிவராத்திரி தினத்தன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்று பல்வேறு வகைகளில் உதவி புரிந்த அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மேலும் எமது துயரில் பங்குகொண்டு உதவிய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 20.03.2012 செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மறுநாள் 21.03.2012 புதன்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**அத்துடன் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக கருதுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.**

மணியம் தெணி, வியாபாரிமூலை.
பருத்தித்துறை.
தொ.பே- 0777940219, 0752430220.

குடும்பத்தினர்.

0755551140
யாழ்ப்பாணத்தில்....



**பழைய பட்டுப் புடைவைகள் பணமாகிறது!**

ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்

பழைய (கிழிந்த) பட்டுப் புடைவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுப் பாவாடைகள் எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடன் பணம் வழங்கப்படும்.



**19.03.2012 தொடக்கம்**
**23.03.2012 வரை**

**5 தினங்கள் மட்டுமே**

தொடர்பு: 0755551140
வேலை நேரம் 8 மணிமுதல்
இரவு 7 மணிவரை

பழைய டிஸ்யூ புடைவைகள் ரூ.5,000 இற்கு மேல் ரூ.20,000 வரை வாங்கப்படும்.

குறிப்பு: இந்த விளம்பரம் கொண்டு வந்து பட்டுப் புடைவை கொடுத்தால் அழகிய பரிசு இலவசம்

**Raamni** Guest House
47-49, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையே)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.